


# ஸ்வய ஞானானுபவ கருத்துரை

**பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா**

ஸ்ரீசத்குரு திருவடி துணை!

# ‘ஸ்வய ஞானுபவ கருத்துரை!




அருள்பவர்

**தூளி பாபா**

**அன்பின் குடில்**

கோம்பூர்.

**வெளியீடு :**

**அன்பின் குடில்,**

253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,

கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,

பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,

தமிழ்நாடு - 638 311

போன் : (04256) 229655

இரண்டாம் பதிப்பு: நவம்பர் (கார்த்திகை) 2009
200 பிரதிகள்

அச்சிட்டோர்:

ஆரித்ரா பிரிண்டர்ஸ்,

பெங்களூர் - 560 003.

தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


1. முகவுரை------------------------------------------------------------ 1

௨. ஸத்குரு உபதேச பாடல்கள்---------------------------------------- ௨

௩. நிதாகன் அனுபவம்------------------------------------------------ ௭௩

௪. நிதாகன் வைராக்கியம்-------------------------------------------- ௮௫

௫. ஆத்மஞானத்தின் சுருக்கம்---------------------------------------- ௯௨


â™ô£‹ c!



(1)

(ஸத்திய வாக்கு)



ஸத்தியம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால்; தர்மம் நிலைபெறும்"!

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்"!

# "அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்"!

# "அகமே எல்லாம்"!

# "ஜெகம், பரமும், ஜீவர்களும்";

# "சிறிதும் இல்லை"!

அருள்ஞானக் குழந்தைகளே! உங்கள் பூர்வபுண்ணியத்தினாலும், தெய்வ பலத்தினாலும், உங்கள் தன்னலமற்ற சேவையினாலும், குற்றம் குறை காணாத் தன்மையினாலும்; அபேத திருஷ்டியினாலும்; விருப்பு வெறுப்பற்ற தன்மையினாலும், உங்கள் உண்மையான ஏக்கத்தினாலும். கிடைப்பதற்கரிய உங்கள் "**ஸ்ரீ ஸத்குருவின்**" பரிபூரண கிருபை, பெற்றுவிட்ட தன்மையினால், "ஸ்வய அனுபவ ஆத்மஞானம்," பெற்றுவிட்டீர்கள், என உறுதி அளித்து இந்த மடலை ஆரம்பிக்கிறேன்!

பாபா.

உ



உங்கள் ஸ்வய அனுபவத்திற்காக,
ஸ்வய "ஞானுனுபவ பாடல்கள்" 108க்கும்,
விரிவுரை இல்லாமல், "கருத்துரையை" மட்டும்,
அப்பாடல்களுடன் தருகிறோம். உற்றுணர்ந்து
உள்ளே புகுந்து, அதன் ரஸாம்ருதத்திலேயே,
உங்களை கரைத்து, உங்களை அதன் மயமாக்
கிக் கொள்வீர்களாக, என உங்கள் அனைவரின்
பொற் பாதங்களையும், பற்றி பணிந்து, கேட்டுக்
கொள்கிறோம். நலமும் சுகமும் பெற்று விட்டீர்கள்.

**பாடல் 1**

சுத்த சிதாகாயமதாய், எந்த வஸ்து,
சுதந்திரமாய், தமதுபர சக்தியோடு,
பக்தரெல்லாம், உய்யும் வண்ணம், கருணையாலே,
பரதத்வ வடிவாக, திரண்டெழுந்தே,
அத்வைத ஆனந்தம், உணர அனுபவத்தின்,
அதிசயமாய், இங்கு எல்லோரும், அறியும் வண்ணம்,
நித்தம், நித்தம், ஆனந்த நடனம் செய்யும்,
நிதம் அந்த வஸ்துவினை, நினைவில் வைப்போம்!

**கருத்து:** நாம, ரூப, குணம், குறி கடந்ததாயும், மனோ வாக்குக்கு எட்டா ததாயும், கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்ததும் ஆன அப் பரசொரூபம், தன்னை உணரும் பக்த கோடிகளுக்காக, தமக்கு தாமே ஓர் வடிவத்தை எடுத்துக் கொண்டு, தமது "யோகமாயை யின் மூலமாக," அண்ட ரண்ட பிரம்மாண்டங்களையும், ஈஸ்வ ராதிகளையும், அனைத்து ஜீவ கோடிகளையும், சிருஷ்டித்துக் கொண்டு தம் "யோகமாயாவின் மூலமாக," விளையாடிக் கொண்டிருக் கிறதென முதலில் உணர்ந்து, அதனைப் பணிந்து, "எல்லாம் நீ" "என முழுமையாக சரண் புகுவாயாக"!

ஆரம்பம் 17-3-௨௦௦௫ வியாழன்!
குருவாரம்! காலை மணி 9! பங்குனி ௪ தேதி



பாடல் ௨

அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மா தானே,
அழியாமல் இருப்பதனால் "ஸத் ஆகும்"!
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மா தானே,
அனைத்தையும் விளக்குவதால் "ஸித் ஆகும்"!
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மா தானே,
அனைவர்க்கும் பிரியமதால் "சுகம் ஆகும்"!
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மா தானே,
அந்தம் இல்லாதிருப்பதனால் "அனந்தம் ஆகும்"!

கருத்து: முன்பாடலில் கூறியபடி அந்த பர சொரூபம், பிரம்மானந்த சமுத்திரம் எனச் சொல்லலாம். அது யோகமாயாவிலிருந்து தோன்றிய, யோகமாயாவைப் பயன்படுத்திக்கொண்டு, சமுத்திரத்தின் திவலை (துளி) களாக, அதாவது "ஸித் சொரூபமாக" இருந்துகொண்டு, காணும் அனைத்திலும், தமது மாயையினால், "நாமரூபங்களை" தோற்றுவித்துக் கொண்டு அதனால் தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு உண்டுபண்ணி ஆனால் தான் மட்டும், இருப்பில் ஸத்தாகவும், அசைவில் ஸித்தாகவும், அசைவினால் பெறும் இன்பத்தை ஆனந்தம் ஆகவும், ஆக்கிக்கொண்டு "அனந்தமாக" (கோடானு கோடியாக) விளையாடிக் கொண்டிருக்கிறது.

பாடல் ௩

ஆன்மாவில் கற்பிதமாக காண்பதெல்லாம்,
ஆன்மாவுக்கு அயலாக என்றும் இல்லை!
ஆன்மாவுக்கு அயலாக பிரம்மம் இல்லை!
அப்பிரம்மம் தமக்கு அயலாக ஆன்மா இல்லை!
ஆன்மாவே பிரம்மமதாம் பிரம்மம் தானே,
ஆன்மாவாம் அணுவும் இதில் ஐயமில்லை!
ஆன்மாவாம் "அகம் பிரம்மம்" என்று எப்போதும்,
"ஆன்ம பர ஐக்கியமே" அறிய வேண்டும்!

கருத்து: இல்லாததை (நாமரூப) இருப்புடையதாக காட்டுவது மாயை. அந்த நாமரூபத்தை கற்பனை பண்ணி, "குண தோஷங்களை" உண்டாக்கியது, இந்த மாயையில் தோன்றிய "மாயாமனமாகும்".

உ

(4)



அந்தமாயாமனதின், கற்பனையாக தோற்றும்
இந்த ஜகசொரூபம், "ஆன்மாவுக்கு அயலாக இல்லை
என்றும்; அந்த ஆன்மாவும், பரசொரூபமாகிய
"பிரம்மமும் ஆன்மாவுக்கு அயலாக இல்லை என்
றும்; "ஆன்மாவே பிரம்மம், பிரம்மமே ஆன்மா"!
அந்த ஆன்மாவாகிய, பிரம்மமே நாம் என்றும்;
"நாமே ஆன்மா; ஆன்மாவே நாம்", என்னும்
இந்த "ஆன்மபர ஐக்கியம்", உறுதியாக வேண்டும்!

## பாடல் 4.

விரிந்த ஜகத் காரணமாம் (பிரம்மன்) விதி இல்லாததால்;
விசித்திரமாய் பகுப்புற்ற ஜகந்தே இல்லை!
தரம் தரமாம் ஜகம் இல்லாத தன்மையினால்;
காக்கும் ஜகத் பாலகனாம் ஹரியும் இல்லை!
பொருந்தும் சராசரம் எவையும் இலாமையாலே;
புகலும் ஜகன் நாசகனாம் ஹரனும் இல்லை!
நிரந்தரமாய் நிறைவுற்ற ஆன்மா ஒன்றே;
நிச்சலமாய் நிலைத்ததென நிச்சயிப்பாய்!

**கருத்து:** பரந்து விரிந்த ஜகநாமரூபமானது, பிரம்மமாகிய ஆன்மாவுக்கு, அயலாக இல்லாத் தன்மையினால்; "அனைத்தும் பிரம்மமேயாம்", அதை ஜகம் என்று சொல்ல முடியாது; சொல்லக் கூடாது. ஆகவே ஜகம் என ஒன்று இல்லாத தன்மையினால், அதை "சிருஷ்டித்தோம்", என்று சொல்லும் பிரம்மா இல்லை! அதை "ரட்சிக்கின்றோம்", என சொல்லும் ஹரியும் இல்லை! அதை "அழிக்கின்றோம்", என சொல்லும் ஹரனும் இல்லை! இம் மூவரும் இல்லையென்றால், வேறு என்ன இருக்கிறதென்றால்? காலாதீதமான, அந்த பரசொரூபமாகிய பிரம்மமே சர்வ வியாபகமாக இருந்து கொண்டு, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், ஆகியவைகளை தம் மாயையினால், செய்து விளையாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே மனோ விசாரம் வேண்டாம்!

உ





## பாடல் ௫.

அந்தம் இல்லாத் தன்மையினால் ஆதி இல்லை!
ஆதியில்லாத் தன்மையினால் அந்தம் இல்லை!
சொந்தம் இல்லாத் தன்மையினால் தோற்றம் இல்லை!
தோற்றம் இல்லாத் தன்மையினால் சொந்தம் இல்லை!
பந்தம் இல்லாத் தன்மையினால் (மோட்ச) வீடும் இல்லை!
பரவிய வீடின்மையினால் பந்தம் இல்லை!
சந்ததமும் சின்மயமாம் "ஆன்மா ஒன்றே";
சலியாத வஸ்து என நிச்சயிப்பாய்!

**கருத்து:** அந்த காலாதீத வஸ்துவாகிய பிரம்மத்திற்கு, "முடிவு" என ஒன்று இல்லாத தன்மையினால், அது இப்படி, இப்போது, வந்தது என சொல்லும், "ஆதியாகிய மூலம்" இல்லவே இல்லை! என்னுடையது என "சொந்தம் கொண்டாடும் மனம்," இல்லாத தன்மையினால்; "நாம ரூப தோற்றம்," இல்லவே இல்லை! ஒருவர் ஒருபொருளை, இது என்னுடையது என, சொந்தம் கொண்டாடினால், அவஸ்யம் "பந்தம்" வந்தே தீரும். அப்படி "சொந்தமும் இல்லை. அதனால் பந்தமும் இல்லை"; அந்த பந்தம் எனச் சொல்லும், "வினைத்தளை" இல்லாததனால், முக்தி எனச் சொல்லும், மோட்ச வீடும் இல்லை! இதன் முடிவு; "ஆதியும் இல்லை! அந்தமும் இல்லை! சொந்தமும் இல்லை! அதனால் பந்தமும் இல்லை! பந்தமும் இல்லாததினால் மோட்சமும் இல்லை! ஆனால் இருப்புடையது, சலனம் அற்ற பிரம்ம சொரூபமே!

## பாடல் 6.

பயன் எவையும் விரும்பாமல் பவ ஜன்மத்தில்;
பழுதறவே அனுஷ்டித்த "தர்மத்தாலே",
அயல் அணுவும் சேராமல் மனதின் சுத்தம்;
கிட்டியதால் "சாதனம் ஓர் நான்கும்" பெற்றோர்.
இயல்புடனே இயற்றியிடும் சிரவணாதி,
ஏதுவினால் பரப்பிரம்ம ஞானம் பெற்றும்;
(இயற்றியதன்)
அயல் அணுவும் அணுகாத அகண்டமான.
அத்வைத பரப்பிரம்மம் ஆவரன்றே!



**கருத்து.** உ (6)

நிஷ்காமிய கர்மாவாக, "எப்பயனும் கருதாமல், செய்த தர்மமானது" (பல ஜன்ம தர்மமானது), இச்ஜன்மாவில் கிடைத்த நன்மையினால், "அத் தர்மம், வேறு எந்த குண தோஷங்களும், அதிகமாக ஒட்டாமல், செய்து விட்டது" அதனால் கர்மா, பக்தி, யோகம், ஞானம், ஆகிய இந்த நான்கும், எமக்கு கிடைக்கும்படி செய்து விட்டது.

கர்மா:- நிஷ்காமிய கர்மா அதாவது எப்பயனும் கருதாமல் "ஈஸ்வரார்ப்பணமாக" செய்த கர்மா!

பக்தி:- "பராபக்தி" அதாவது பதமுக்தியைத் தவிர்த்து, பரமுக்தியாகிய பிறவாநிலைக்கு, "உருக்கத்தில் ஆழ்ந்த பக்தி"!

யோகம்:- "கருவி கரணங்களின் ஒழுக்கம்", மோட்ச சாதனமாகவே "தன்னை (அஹங்கார, அதிகார அபிமானங்களை) சர்வ சங்க பரித்தியாகம் செய்வது. (இதை யோகம் என்றும் சொல்லலாம்)

ஞானம்:- பதினாறு கலைகளும், ஞானம் என்றே பொருள்படும். ஓர் நிலையில் "ஞானம் = அறிவு"! இதில் பதினாறாவது கலையாக இருக்கும், "பிறவாநிலையாகின்ற, அத்வைத ஞானம்"!

மேலே கூறிய நான்கும், பூர்வ புண்ணியத்தினால், கிடைத்த தன்மையினால், "இயல்பாகவே" சரவணமனநிதித்யாசனத்தினால், அந்த பிரம்மானந்த, அத்வைத ஞானம், "வேறு எந்த தடையுமின்றி" அவஸ்யம் "அதுவே நாம்; நாமே" அது என்ற நிலை பெறுவர்.

**பாடல் 7.**

இத்துவைத ஜகம் எல்லாம் "விவகாரத்தில்"
யாவர்க்கும் (எதிர்) எதிராகத் தோற்றவாவே,
"சித்தினது காரியமாம்"! சித்தம் தானே,
ஜகம் எனத் தோற்றுகிறதென்று சிலபேர் சொல்வர்!
சித்தமதை நன்றாக விசாரித்துப் பார்த்தால்,
சின்மயமாம் பிரம்மமல்லாது வேறு இல்லை!
(எம்) புத்திரனே! ஆதலினால் எக்காலத்தும்,
பூரணமாய் உள்ளது பரப் பிரம்மம் ஒன்றே!



உ

## கருத்து:

எம் குழந்தாய்!

உன் கண்ணால் காணக் கூடிய, இந்த "துவைத பிரபஞ்சமானது", அனைவர்க்கும், "எதிரும் புதிருமாக" தோற்றுவதால், அந்த பிரம்ம சொரூப அம்சமான, (ஆத்மாவானது) ஸித் சொரூபமானது, உன் எண்ண வடிவமான, சித்தம் எனத் தோற்றுவதால், அறியாமையின் கவனக்குறைவினால், இதை உலகம் தான்" என "சிலபேர் சொல்கிறார்கள்;" ஆனால் அது அப்படி அல்ல! உன் சித்தத்தை, ஸித் ஆக்கி", (அதாவது அனைத்தும் இறைவன் பொருளாகவும், இறைவன் இயக்கமாகவும் ஆக்கி, பின் உன் ஸ்வய அனுபவத்தால், பரம் என ஆக்கி) இது அந்த காலாதீத ஒன்றின் விளையாட்டே என உணர்ந்தால், எல்லாம் பிரம்மமே என ஆகிவிடும். அங்கு "அதுவே நீ; நீயே அது" சத்தியம்!

## பாடல் 8:

புத்தியினால் உறுதியிடும் பொருளும் இல்லை;
கற்பனை(புனை)மனதால் மனனமிடும் பொருளும் இல்லை;
சிந்தையினால் சிந்திக்கும் பொருளும் இல்லை;
விவகார (செறி) வாக்கால் வசனிக்கும் பொருளும் இல்லை;
சொந்தமதாய் தோற்றியிடும் பொருளும் இல்லை;
துவைதத்தால் "தொடர்கின்ற பயனும்" இல்லை;
சந்ததமும் ஸின்மாத்ர சுபாவமாகி,
சலியாமல் உனது பரப்பிரம்மம் ஒன்றே!!!

## கருத்து:

மனம் என்றால் ஓர் எண்ணம்! புத்தி என்றால் அந்த ஓர் எண்ணத்தை, பல வடிவங்களாக கற்பனை செய்வது! சித்தம் என்றால் அக்கற்பனையை, உறுதிப்படுத்துவது! அந்த நிலையில் இந்த இல்லாத உலகை, இருப்புடையதாக, கற்பனை செய்யும், புத்தியின் பொருளும் இல்லை! கற்பனையின் புத்தியின் பொருளே இல்லையென்றாகும் போது, உறுதி செய்யும், சித்தத்தின் காரியமும் இல்லை! சித்தத்தின் காரியம், இல்லையென்றாகும் போது, "விருப்பும் வெறுப்பும் கொண்ட" விவகார வாக்கும் தேவை இல்லை! விவகார வாக்கு இல்லையென்றாகும் போது, "விகாரம் அடையும், பிரச்சனையும் இல்லவே இல்லை"! மேலே கூறிய இவை அனைத்தும், மௌனமானால், அந்த காலாதீத ஒன்றே சத்தியம். "அதுவே நீ, நீயே அது"!



## பாடல் 9.

உ



நினைவெதுவோ அதுதானே ஜீவனாகும்!
நினைவெதுவோ அதுதானே ஈசனாகும்!
நினைவெதுவோ அதுதானே ஜகமும் ஆகும்!
நினைவெதுவோ அதுதானே மனதும் ஆகும்!
நினைவெதுவோ அதுதானே காமம் ஆகும்!
நினைவெதுவோ அதுதானே கர்மா ஆகும்!
நினைவெதுவோ அதுதானே துக்கம் ஆகும்!
நினைவெதுவோ அதுதானே அனைத்தும் ஆகும்!!!

### கருத்து.

குழந்தாய்!

முன்பாடலில் சொன்னபடி, மனமே புத்தியாகவும், புத்தியே சித்தமாகவும், அதுவே ஜகத்தோற்ற "நாமரூபங்களாக", வடிவெடுப்பதால், அனைத்திற்கும் மூலகாரணம், "எண்ணம்" என்பது, உறுதியாகிவிட்டது. இந்த எண்ணமாகிய, "நினைவே ஜீவன், நினைவே ஈசன், நினைவே ஜகம், நினைவே மனம், நினைவே காமம், நினைவே கர்மா, நினைவே துக்கம், கலக்கம், நிறைந்த பிறவிப் பிணியாகும்." அந்த மனம் புத்தி சித்தம் என்ற எண்ணத்தை, மாற்றாக்க வேண்டுமானால் ஒரே வழி, "அதுவே நாம், நாமே அது"! என மாற்றுவாயாக!

## பாடல் 10.

நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்!
நினைவின்றி நிற்பதுவே நிஷ்டையாகும்!
நினைவின்றி நிற்பதுவே ஞானம் ஆகும்!
நினைவின்றி நிற்பதுவே மோட்சமாகும்!
நினைவின்றி நிற்பதுவே சகஜ (ஞான) மாகும்!
நினைவின்றி நிற்பதுவே பிரம்மமாகும்!
நினைவின்றி நிற்பதுவே சிவமும் ஆமே!

### கருத்து.

"நினைவணுவும் இல்லை எல்லாம் பிரம்மம் தானே!"

சென்ற பாடலில் சொன்னபடி, எண்ணமும், அதன் செயலுமே, பிறவியின் பிரவர்த்தியாகும். அந்த எண்ணத்தை, "அதுவே நாம், நாமே அது" என்ற ஒரே எண்ணத்தால் கெடுத்து, நாம் நாம் ஆன தன்மையினால், அந்த ஒரு எண்ணத்தையும், (நற் போதத்தையும்) கெடுத்து முள்ளை முள்ளால் எடுத்து, பின் அந்த இரண்டு முள்ளையும் தூர எறிந்து விடுவது போல், "சொல் அற சும்மா" இருக்க வேண்டும்! அந்நிலை பெறும் பரியந்தம், "அதுவே நாம், நாமே அது" என்று ஒரே எண்ணமாக இருப்பாயாக.



## பாடல் 11.

திருசியமே ஒன்றுமில்லாத் திருக்கேயாகி,
(பார்க்கும் பொருள்) (பார்ப்பவன்)
"மற்றே எண்ணமில்லார்" நிலைநின்றோர்க்கு,
மருவியிடும் நனவு, கனவு, சுழுத்தி இல்லை!
(செயலாக்கும்)
மரணம் இல்லை, உய்வதில்லை, மற்றொன்றில்லை!
பிரிவறவே மனதில்லாமல் இருக்கும் நிஷ்டை(யின்)
பெருமையினை எப்படி சொல்ல முடியும்? (என்று)
பரிவுடனே ரிபு முனிவன் நிதாகனுக்கு
பரமார்த்த உறுதியினைப் பகர்ந்தானன்றே!

## கருத்து.

காண்பவன் இல்லாமல், காணும் பொருள் இருந்தால் அது பிரயோஜனம் இல்லை! அதுபோலவே, காணும் பொருள் இல்லாமல், காண்பவன் மட்டும் இருந்தாலும், அதுவும் பிரயோஜனம் இல்லை! "அதுபோல" எண்ணம் இல்லாமல், உலகம் இருந்தாலும், பிரயோஜனம் இல்லை! உலகம் இல்லாமல், எண்ணம் மட்டும் இருந்தாலும், ஓர் பிரயோஜனமும் இல்லை!

இதைப் போல!

உலகையும் அதன் பொருள்களையும், "பரமெனஆக்கி", "நாமும் அந்த பரமேனஆகி" விட்டால், "பார்ப்பவனும் இல்லை, பார்க்கும் பொருளும் இல்லை" யென்றாகிவிடும்! அந்நிலை பெற்றவருக்கு, நனவு, கனவு, உறக்கம் இல்லையென்றும், இருந்தும் பிரயோஜனம் இல்லை, யென்றும் சொல்லலாம். மேலும் "தாமே பரம், பரமே தாம்" என்ற நிலையை அனுபவத்தில் பெற்றவருக்கு, மரணமும் இல்லை, உய்யும் மார்க்கமும் இல்லை, வேறு பிரவர்த்தி என்ற எந்த காரிய காரணமும் இல்லையென்றே பிரமாணமாகச் சொல்லலாம்! இந்த மகத்தான பெருமையை, எவரால் உரைக்க முடியும்?

## பாடல் 12.

எள்ளளவும் அயலின்றி எல்லாம் என்றும்,
ஏகபரப்பிரம்மமதாய் இருந்த போதும்,
"தள்ளரும்" மனதுடையோர் (அந்த) பரசிவத்தின்,
கருணையில்லாக் குற்றத்தால் வேறு வேறாய்,
உள்ளமதில் உணர்ந்து, மஹா பவ துக்கத்தை
உறுவதனால், (அவசியம்) முமுட்சுவெல்லாம் எவ்விதத்தும்,
தள்ளவொண்ணா பரம சிவம் கருணை பெற்றே
தமது பவதுக்கத்தைத் தவிர்க்க வேண்டும்!



**கருத்து** எம் குழந்தைகளே!

நன்றாக அறிவு ஊன்றி உணர்ந்து பார்த்தால், ஊசிநாட்ட இடமும் இல்லாமல், அந்த பரமே நீக்கமற நிறைந்திருக்கிறது. ஆனால் சொந்த, பந்த, பாச, உணர்ச்சியை இந்த திருட்டு மனமானது, "இறை கருணை" இல்லாத தன்மையினால், நாம ரூபங்களை, வேறு வேறாக பிரித்துப் பிரித்து பார்த்து, "குண தோஷங்களுக்கு ஆளாகி," "மகா-பவ-பய" துக்கத்தை அடைகிறது. ஆகவே சாதகர்கள் அனைவரும், எப்படியும் இறை கருணையைப் பெற்றுத்தான், இந்த மகா-பவ-பய, குணதோஷ பிறவிப் பிணியை அறுக்க வேண்டும்!

**பாடல் 13**

சித்தம் என ஒரு பொருள் இங்கு உள்ளதென்று,
(நீ) சிறிதேனும் சிந்தித்தால், உடனே ஸித்தே,
"சித்தம் எனத் தோன்றியிடும்" (பின்) அதுவே ஜீவ,
ஜக, பரம் எனத் தோன்றுவதால் துன்பம் உண்டாம்;
புத்திரனே! ஆதலினால் சித்தம் என்று ஓர்,
பொருளொன்றும் இல்லை, எல்லாம் ஸித்தே என்றும்;
"இந்த திடமான உறுதியினால்"; சித்தம் தன்னை,
எளிதாக ஜெயித்து என்றும் சுகம் பெறுவாய்!

**கருத்து** "சித்தம் என ஒன்று, இல்லவே இல்லை, என உறுதி செய்!" சித்தம் உண்டு என நீ எண்ணினால், அந்த காலாதீத ஸித் சொரூபமே சித்தம் என வடிவெடுக்கும்! அது அத்துடன் நில்லாமல், அந்த சித்தமாக இருந்து கொண்டு, அதுவே ஜீவன் என்றும், அதுவாகவும் ஜகம் என்றும், அதை சிருஷ்டித்த ஈசன் என்றும், வடிவெடுத்து, மன அசைவையும், அதனால் துன்பத்தையும், அவஸ்யம் கொடுக்கும். ஆகவே சித்தம் இல்லை என்றும், ஸித்தே சித்தமாய் தோன்றிற்று என்றும்; அதுவே ஜகத், ஜீவ, ஈஸ்வரர்களாய், தோற்றுகிறது என்றும், உறுதியாக நம்பி, உன் மனதுக்கத்தை நீக்கி, ஆனந்தம் அடைவாயாக.

**பாடல் 14**

நரர், சுரராய், திரியக்காய், நகவனாதி,
(மனிதர், தேவர், மிருகாதி, மற்றும் அசைவற்ற ஜீவர்கள்)
நானாவாய், நாடியிடும் நாட்டமெல்லாம்;
தெளி உருவாய் திகழ்கின்ற தேவதேவன்,
திருவுருவே என்று "திடத் தியானம் செய்து";



இருகுணமும் இழந்து "அமல ஸத்வம் மேவாய்",
இருக்கின்ற சூட்சும மனமே விருத்தி கொண்டு,
பரமசிவம் பரிபூரண சொரூபம் தன்னை,
பார்த்திடலாம்; மற்றொன்றால் பார்க்க வொண்ணா!

**கருத்து** "ஸ்ரீ பகவத் தரிசனம் பெற வேண்டுமென்றால்?" மனிதரும், தேவரும், மற்றும் "எண்பத்தி நான்கு லட்சம் ஜீவ கோடிகளும்", பிரத்தியட்சமாக, கண்ணுக்குக் கண் எதிரே தெரியும் "ஸ்ரீ பகவானை" எனவுன் உள் உணர்வால் உணர்ந்து, "ரஜஸ், தமஸ்," என்ற இருகுணமும் நீக்கி, "ஸத்வகுணம் ஒன்றை மட்டும்," ஸ்வய அனுபவத்தில் வைத்துக் கொண்டு ஸ்ரீ பகவானை கண்டு உணரமுடியுமேயன்றி, வேறு எந்த நிலையிலும், ஸ்ரீ பகவானைக் காண முடியாது!

**பாடல் | 15**

மித்தை யென்னும் சித்தமுமே என்றும் இல்லை!
மிகப் பொய்யாம் ஜகமுதலும் என்றும் இல்லை!
மித்தை யென்னும் வார்த்தையுமே என்றும் இல்லை!
மிகமிகவும் "மூடரென்னும்" ஜனமும் இல்லை!
ஸத்திய சித் சுகபரமே எல்லாம் என்றும்,
சந்ததமும் அப்பிரம்மம் நாமே என்றும்,
இத்திறமே திடமான முயற்சியோடு,
"எப்போதும் சிந்தித்து சாந்தனாவாய்!"

**கருத்து** அன்புக் குழந்தாய்! மித்தையான பொய்க் கற்பனை செய்யும், "சித்தம் என்பது இல்லவே இல்லை"! அச் சித்தத்தின் கற்பனையான, "நாமரூப ஜகமும், இல்லவே இல்லை"! அப் பொய்யான சித்தத்திறல், கற்பனை செய்து, உண்டு என நம்பும், 84 லட்சம், ஜீவ கோடிகளும், "அதை வர்ணிக்கும் வார்த்தைகளும் இல்லை"! அஞ்ஞானியென்றும், அறியாமை ஜீவனென்றும், "மூடஜனங்கள் என்றும், எவரும் இல்லை"! சுத்த சிவ (சைதன்ய) சொரூபமே அனைத்தும் என்றும், அந்த அனைத்தும் அந்தகாவாதீத "ஒன்றே என்றும். அதுவே நாம் என்றும்" சிந்தித்து சாந்தி ஆவாய்!



## பாடல் 16 உ (12)

அன்னியமாய் காண்பதெல்லாம் பிரம்மமாத்ரம்;
ஆதலினல் உனது பரப்பிரம்மம் ஒன்றே!
இந்தவிதம் இருந்திடினும், உனக்கிப்போதிங்கு;
இயம்பியிடும் "குரு, சீடன், உலகமாதி";
பின்னையெனத் தோன்றியிடும் "இப்பேதம் எல்லாம்;
பிரம்மமென்றும், "அப்பிரம்மம் நாமேயென்றும்";
உறுதியான பாவனையால் "மனதை வென்று";
மஹத்தான பிரம்மமதாய் சாந்தனவாய்!

## கருத்து

குழந்தாய்! அதுவேநாம், நாமே அதுவென்ற உறுதியோடு இருப்பாயாக. அத்துடன் உனக்கன்னியமாய் காண்ப தெல்லாம், பிரம்மமேயென, உறுதியுடன் பாவனை செய்வாயாக. அப்படி பாவனை நீ செய்த போதும், "தற்காலிகமாக", எதிரும் அதிருமாக தோன்றியிடும் "யானும், நீயும், நாம் இருக்கும் இந்த உலகமும்" பேதமாக தோன்றியிடும் இத்தோற்றமெல்லாம், அந்த காலாதீத ஒன்றே என்றும். அந்த ஒன்றிற்கு, நாம் அன்னியமில்லையென்றும், அனுபவம் கூட்டி, அந்த அனுபவத்தால், சாந்தி ஆவாயாக!

## பாடல் 17

நில்லாமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற;
நிகிலபரிபூரணமாம் பிரம்மரூபம்,
அல்லாமல் ஓரணுவும் எங்கும் இல்லை; (என்றும்)
(இந்த) அகிலமுமே அகண்ட பரப்பிரம்மமே யாம்;
"எல்லாமே பரப்பிரம்மம், நாமே என்று இங்கு";
எப்போதும் பாவித்து, "மனதை வென்று",
சொல்லாலும் சொல்லவொண்ணா பரமே ஆகிச்
(சொல்லற) "சும்மாவே இருந்து மஹா சாந்தி ஆவாய்"!

## கருத்து

குழந்தாய்! வந்து, இருந்து, மாறி, மறையும் இச்ஜகதோற்றம் அனைத்தும், பிரம்ம சொரூபம் என உறுதியாக நம்பு. அந்த காலாதீத ஒன்றை அன்றி, அன்னியம் எதுவும் இல்லை. இந்த அண்ட ரண்ட பிரம்மாண்டங்களும் பிரம்ம சொரூபமே. "அதுவே நாம் நாமே அது" என பாவித்து, பொல்லாத மனதை வென்று, சொல்லற சும்மா இருந்து சாந்தி ஆவாய்.



## பாடல் 18

அறிந்த பொருள் அனைத்தையும் வாக்குமாத்திரம்,
ஆக்காமல் ஆதரவாய் மனதில் கொண்டு;
"செறிந்த மனது ஒருமையுடன்" எல்லாம் என்றும்,
சின்மயமாம் பரப்பிரம்மம் "அது நாம் என்றே",
"நிறைந்த பரபாவனையால்" மனதை வென்று,
நிச்சலனாய் எப்போதும் சாந்தனாவாய்.
அறிந்த தெல்லாம் சத்தியமே, ஐயம் இல்லை.
அகண்ட பரசிவம் ஆணை ஐயமில்லை!

**கருத்து:** எம் செல்வமே! யாம் சொல்லும் ஸத்திய வாசகங்களை "வாய் ஞானமாக கொள்ளாதே! அனுபவ ஞானமாகக் கொள்! "உன் நம்பிக்கையே உன் நண்பன்! உன் சந்தேகமே உன் எதிரி!" அடிக்கொருதரம் "நழுவும் மனதை", ஓர்மையுடனும், வைராக்கியத்துடனும், ஸத்தியத்தின் ஆதரவுடனும், "ஸத்தே, ஸித் என்றும்", "ஸித்தே, ஆனந்தம் என்றும்", அதாவது! ஸத்தாகிய பிரம்ம சொரூபமானது, தனக்குத்தானே சற்று அசைந்ததால், (ஸத்தே ஸித் ஆனதால்) அந்த அசைவே ஆனந்தம் என்றும், (ஸித்தாகி அசைந்ததால் ஆனந்தம் என்றும்,) ஆகவே அது தன்னைத்தானே, "ஸத், ஸித், ஆனந்தம்," என ஆனதென்றும்; இந்த அசைவ நிற "பரபாவனையால்", பொல்லா மனதை வென்று, சாந்தனாவாய்! இது எம் ஸத்குருமேல், ஆணையிட்டு சொல்லும், வாக்கியமாகும்!

---

## பாடல் 19

"தீங்கான சித்தம்" முதல் எவையும் இல்லை!
"திருஷ்யமாய் தெரிகின்ற ஜகமும்" இல்லை!
"அஹங்காரம்" முதலியதோர் அணுவும் இல்லை!
அகிலமுமே அகண்ட பரப்பிரம்மமேயாம்!!!
நீங்காமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்று,
நிமல அறிவான பரம் நாம் என்று,
"தூங்காது தூங்கும்" நிலை கிட்டும் மட்டும்,
தொடர்பாக சிந்தித்து சாந்தனாவாய்!!



உ

(14)

**கருத்து**

எம் செல்வமே!

இதைப்பிரமாணமாக உணர்வாயாக. கஷ்டம், கவலை, துக்கம், பயம் இவைகளை கொடுக்கின்ற "சித்தம் இல்லவே இல்லை! கண்ணால் காணக்கூடிய இந்த நாம ரூப, குண சொரூபமாகிய, "இந்த உலகமும், இல்லவே இல்லை! நான், என்றால், என்னுடையது, எனபாவனை செய்யும், "மூல அஹங்கார சொரூபமும் இல்லவே இல்லை! ஆதலால் ஸத்தாகிய இந்த நிலை குடிகொண்ட, சித்தினால் (அசைகின்ற) உண்டாகும், ஆனந்தம் ஒன்றே, உண்மை என உணர்ந்து, உரு சிநாட்ட இடம் இல்லாமல், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமே உள்ளது, என்ற உணர்வோடு, "ஹரி துயில் கொள்வாயாக!

**பாடல் 20**

"மனந்தன்னால்" செய்ததுவே செய்ததாகும்!
மற்றொன்றால் செய்ததெல்லாம் செய்ததாகா(து)!
தினம் தினம் திடமான மனதினாலே,
திருஷ்யமாய் காண்பதெல்லாம் திருக்கேயாம்,
அனந்த பரப்பிரம்மமென்றும், அது நாம் என்றும்,
அகண்ட பரபாவனையே செய்வாயானால்,
கணம் தரும் அப்பாவனையால் மனதை வென்று,
கலங்காமல் எப்போதும் சாந்தனவாய்!

**கருத்து**

ஓம் ஐயனே!

புண்ணிய பாப வினையென்றால் தூலம். தூலம் ஜடம். அதுதானே இயங்காது. அதை இயக்க எண்ண வடிவமான "மனம் வேண்டும்." மனதின் இயக்கம் சூட்சுமம். அது ஆட்டி வைக்கும் உடல் தூலம். ஆகவே வினையின் இயக்கமாகிய தூல "அசைவுக்கு இந்த மனமே மூலகாரணம்." ஆகவேதான் ஸ்ரீ ரிபு "மனந்தன்னிலே செய்ததுவே செய்ததாகும். என்றும் மற்றொன்றால் "(தூலத்தால்) செய்வது செய்ததாகாது என்றார். ஆகவே இந்த "உறுதியான மனதால்" முன்பு 11 வது பாடலில் சொல்லியபடி என்றும், காண்பவன் இல்லாமல், காணும் பொருள் இருந்தும், பிரயோஜனம் இல்லை. காணும் பொருள் இல்லாமல், காண்பவன் இருந்தும், பிரயோஜனம் இல்லை. அதுபோல என்றும் மனம் இல்லாமல், உலகம் மட்டும் இருந்தால், பிரயோஜனம் இல்லை என்றும் உலகம் இல்லாமல், எண்ணும் மனம் இருந்து, அதுவும் பிரயோஜனம் இல்லை என்பதும்



உ

மனதில் கொண்டு, புண்ணிய பாப வினை உடல்
இருந்தாலும், மனதின் இயக்கம் இல்லையானால், ஒரு
பிரயோஜனமும் இல்லையென, முடிவு செய்து அதாவது
தூலம் (உடல்) = கிரைண்டர், மிக்ஸி, TV, பேன்!
சூட்சுமம் (மனம்) = மின்சாரம்!
இந்த உறுதியான மனதால், காண்பன அனைத்தும், காலாதீத அந்த பரமே என்றும், "அது நாமே. நாமே அது" என்ற அகண்ட பர பாவனையால், இந்த மாயா மனதை வென்று சாந்தி ஆவாய்.

பாடல் ௨௧

மனதுதான் அவிசார தசையில் மைந்தா!
மயக்கமுறும் ஜகமதுவாய்த் தோற்றினாலும்;
மனதுருவை மாறாது விசாரம் செய்தால்;
"மனதுதான்" மஹத்தான "ஸித்தே ஆகும்"!
மனதுதனை எளிதாக ஜெயித்தெப்போதும்;
மஹத்தான "ஸித் உருவே" ஆக வேண்டி;
மனதுமுதல், எல்லாம் ஸித், அது நாம், என்றே;
மாறாது சிந்தித்து சாந்தனவாய்!

கருத்து

உலகையும், உடலையும், பொருளையும், அந்த காலாதீத ஒன்றே என, உண்மையை உணராமல், நாம, ரூப, குணங்களில் மயங்குவதே, அவிசாரம் எனப்படும்! மேலே கூறியவை அனைத்தும், அந்த ஒன்றே! "அதுவே நாம். நாமே அது" என்பதே விசாரணை." மேலே கூறியவற்றை விசாரத்தால், உறுதியாக நின்று மனதை வெல்!

பாடல் ௨௨.

மனதென்றும், வாக்கென்றும், மற்றதென்றும்,
மருவிய இப்பேதமுமே எமக்கிங்கில்லை!
கனவிலுறும் பொருள்களில் எப்பொருள்களேனும்;
காண்கின்ற தமக்கயலாக கண்டதுண்டோ?
அதுபோல!
நனவிலுறும் பொருள்களும் அவ்விதமேயாக
நாடியிரும் "ஞானவடிவான நாமே"!
எனும் உரமாம் பாவனையால் மனதை வென்று;
ஏகபர வடிவாகிச் சாந்தனவாய்!



**கருத்து:** குழந்தாய்!

எண்ணமென்றும், அதன் சொல் என்றும், அதன் செயல் என்றும், அனேகமாக கூறும் "பேதம் எமக்கு இல்லை"! எப்படியென்றால்? கனவில் காணும் பொருள்களும், நனவில் காணும் பொருள்களும், அதை நாடி உணரும் யாமும், ஞான சொரூபமாகவே ("அதுநாம் நாமே அது") இருப்பதால், எமக்கன்னியம் எவையும் இல்லை என்ற பரபாவனையால் சாந்தி ஆவாய்!

---

## பாடல் 23

"மனோஜயமே திடமாக கிட்டுமட்டும்,"
மற்றுள்ள வியாபாரம் அனைத்தும் விட்டு,
விநோதமதாய் "யாவும் ஸித், அதுநாம்" என்றே,
விருப்பமுடன் விடாது மிகச் சிந்தை செய்தால்,
மனோஜயமான மஹத்தான "அறிவு உதிக்கும்"!
"மற்றதனால் ஜகம் முதலான இருள் இறக்கும்"!
இனிய உதயம் ஆகி விட்டால், இருள் எங்கேனும்,
இருப்பதனை யாரேனும் கண்டதுண்டோ???

**கருத்து:** குழந்தாய்!

மனம் நம் வசமாகி, மனம் மஹத்தாகும் பரியந்தம், மேலே சொன்ன பாடலின் கருத்தை, அப்படியே ஏற்றுக்கொண்டு, "அவிசாரமான வியாபாரம் விட்டொழித்து", உலகின் நாமரூப குணபாவனையை கெடுத்து, எல்லாம் ஒன்றே, "அதுநாமே நாமே அது" என்ற, "விசாரணையான பாவனையை மேற்கொண்டால்", மனோஜயம், உன் சாதனையை அனுசரித்து சித்திக்கும். அதனால் ஆத்ம ஒளியின் இனிய உதயம் உண்டாகும். அஞ்ஞான இருள் இல்லாமலேயே ஒழியும்.

## பாடல் 24

ஆதலினால் அமலமான மனதினாலே,
அனவரதம் பரப்பிரம்ம விசாரம் செய்து,
போதகன பரப்பிரம்மம் தானே எல்லாம்,
பூரணமாம் பரப்பிரம்மம் "அதுநாம்" என்று,
சாதகமாம் பாவனையை திடமாய் செய்து,
சஞ்சலமாய் உள்ள மனதை நன்றாய் வென்று,
ஜோதிமிகும் பரப்பிரம்மம் தாமேயாகி,
"சும்மாவே" இருந்து மஹா சாந்தியாவாய்!



**கருத்து**

குழந்தாய்!

மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை, என்ற இந்த மும்மலங்களையும், நீக்கிய "நின்மல மனதிறல்", இடைவிடாமல், "அனைத்தும் ஒன்றே! அது நாமே! நாமே அது!" என்ற பரப்பிரம்ம விசாரம் செய்து, "அகண்டாகார விருத்தியில்," பூரணமான பாவனை செய்து, சஞ்சலமான மனதை வென்று, ஸ்வயம் ஜோதி சொரூபமான, ஸ்ரீ பரம் பொருள் நாமே என்று, பூரண நிலை பெற்று, "அதுவே நாம்" என்ற "தற்போத நிலையையும்" விட்டுவிட்டு, எண்ணமற்ற ஸ்வயம் ஜோதியாய், "சும்மா இருந்து சாந்தனுவாய்!"

NB :- இப்பாடலில் அமலமனம் என்ற, நின்மல மனதையும் குறிப்பிடுகிறார். சஞ்சலமனதையும் குறிப்பிடுகிறார்.

1. எல்லாம் ஒன்றே அதுவே நாம் நாமே அது என்ற அகண்ட பர பாவனையில், மனமானது, அமலமான நின்மல மனமாகும். இது மனம் மறந்தான நிலையாகும். இது சாதனையின் முதிர்ச்சி!

2. நாமரூப இணை தோஷ வயப்பட்டு, கண்டதே காட்சி, கொண்டதே கோலம், என மனம் வீழ்ச்சி அடைந்தால், அது சஞ்சல மனம். அது மலினமனம். அது ஜீவமனம். இதன் உண்மை!

"மேலே கூறியதில் உறுதியாக நின்றால், கீழே உள்ளது இல்லாது ஒழியும்!"

"கீழே உள்ளதை இல்லை, இல்லை, இல்லை, யென உறுதியாக விசாரணையால், தள்ளிவிட்டால், மேலே உள்ளது ஸ்வயமாய் தாம் தாமாய் இருக்கும்!"

அகண்டாகார விருத்தி:- அனைத்து நாமரூப இணை தோஷங்களையும் இல்லை, இல்லை, இல்லை, யெனத் தள்ளி, "நாம் அதுவாகவே இருக்கிறோம்." என்ற, ஏகபர பாவனையே, அகண்டாகார விருத்தி!

**பாடல் 25.**

(அசைவற்ற) அனக அறிவான பரப்பிரம்மம் தானே,
அவித்தையினால் அசைவுற்று அதன் மனதாய் தோன்றும்.
வினவும் அறிவான பரப்பிரம்மம் தானே,
வித்தையினால் அசைவற்ற அதன் பரமேயாகும்.
மனதுவும் சலனமுடன் இருக்குமாகில்,
மறந்தான ஜீவ, பர, ஜகமாய், தோற்றும்.
மனதுவே சலனமில்லாமல் இருக்குமாகில்,
மாசற்ற அறிவு சொரூபமான பரமேயாகும்!

உ





**கருத்து:** எம் செல்வமே! பிரம்மத்தின் அம்சமான ஸித்தானது சற்று அசைந்த மாத்திரத்தில், ஜகத்தாகவும், ஜீவர்களாகவும், இவைகளுக்குக் கர்த்தாக்களான, ஈஸ்வராதிகளாகவும் தோற்றும். அதே ஸித்தானது, அசைவற்றுவிட்டால், ஸ்வயம் பரமென ஆகிவிடும். அதைப்போல் மனமும், சலனம் அடைந்தால், நாமரூப குண தோஷமாகவும்; சலனம் இல்லாதிருந்தால், தம்யதார்த்த அறிவான பரம் ஆகும்.

—x—x—x—x—x—x—

**பாடல் 26**

"தனது மன முயற்சியினால்" பிரம்மாப்யாசம்;
தவிராது செய்து மனோஜெயம் பெற்றோர்க்கே;
அனுபவ வுணர்வு எளிதாக உதிக்கும் அன்றி;
அன்னியர்க்கு எளிதாக உதியாதென்றும்;
சொன்ன உணர்வு சுகம் நல்கும்; துயரைத் தீர்க்கும்;
சுயந்திற்கும் சுபமாக்கும்; சுவயமாகும்;
ஜனனமுதல் விகாரமெல்லாம் தவிர்த்து தன்னை,
சத்திய ஸித் சுககனமாம் பரமேயாகும்!

**கருத்து:** எம் அன்புருவே!

இதை அவஸ்யம் கவனிக்கவும்:— ஆரம்ப சாதனையில், பக்தி பண்ணும் போது, அனைத்தையுமே "சர்வார்ப்பணமாக", மனதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அதை இறைவன் "ஏற்றுக்கொண்டு, அவன் நம்மை முழுமையாக ஏற்றுக் கொண்டபின், அவன் சாரூப்யமாகவே இருந்து கொண்டு", அவனுடைய சார்ந்த மனதினால், "அது நாம்; நாம் அது!" என்று பிரம்மாப்யாசம் செய்யலாம். இங்குதான், "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்பது பொருந்தும். இங்கு மனம் முழுமையாக, அவனுக்கு அர்ப்பணம் ஆன தன்மையினால், இந்த மனம் "பரபாவனையில் நிலைந்து நிற்கும். இறை கருணையும், பர கருணையும், சந்திக்கவில்லையானால், ஆத்ம ஞானம் சாத்தியமாகாது. இந்த ஆத்ம அனுபவ ஞானத்தினால், அது நாம்; நாம் அது சாத்தியமாகுமேயன்றி, அன்னியர்க்கு இது சாத்தியமாகாது. அப்படி சாத்தியமானவர்களுக்கு, சுகமும் ஆனந்தமுமே உண்டாகி, ஜீவன் முக்தியாகிய, பரநிலை தானே கிடைக்கும். அது நாம்; நாம் அது என உணர்வோடு இருப்பாயாக!

—x—x—x—x—x—x—





## பாடல் 27.

கனவினிடை திருசியமாய்க் காணப்பட்ட,
கடபடமே முதலியவும் மித்தையே போல்;
நனவினிடை திருசியமாய் நாடப்பட்ட,
நாநாவாம் ஜகஜீவ பரமும் மித்தை!
அனியதைவாம் அறிகின்ற திருக்கேயான,
ஆன்மாவுக்கு அபின்னமதாம் பிரமம் ஒன்றே
அனவரதம் அழியாத உண்மை வஸ்து;
அறைந்ததிலோர் அணுவேனும் ஐயமில்லை!

## கருத்து

ஞானமழவியே! கனவில் காணும் பொருள்கள், உன்னுள்ளே உன்னை நாடிவருகிறது! நனவில் காணும் பொருள்களை, வெளியே நீ தேடி அடைகிறாய்! ஆனால் இந்த இரண்டும், "சாஸ்வதமாக நிலைப்பதில்லை"; தோன்றி, மாறி, மறைந்துவிடுகிறது. கயிற்றில் ஓர் சர்ப்பம் ஆரோபமாக தோற்றி, அதை விசாரித்தவுடன் எப்படி இல்லாமல் போகிறதோ, அதேபோல் கனவும், நனவும், ஸத்தாகிய ஆத்மசொரூபத்தில் நம் கவனக் குறைவால், தோற்றுகிறதேயன்றி உண்மையில் அவை இல்லவே இல்லை. இருப்பது காலாதீத பரமே என்றும், "அது நாம்; நாமே அது"! யாம் சொல்வதில் அணுவேனும் சந்தேகம் வேண்டாம்!

## பாடல் 28

வருத்தம் இல்லாது இருக்கையிலும் வருத்தம் போல,
வழுவுற்ற மாபாவி மனதில் தோன்றும்.
விருத்தமதாம் பாவமெல்லாம் ஒழிந்து மெத்த,
விமலமதாம் மனதுடையோர்க்கு இவ்வப்யாசம்,
கருத்திலுற மிக எளிதாம் ஆதலாலே,
கலங்காமல் எப்போதும் ஞானாப்யாசம்,
திருத்தமுறச் செய்வோர்க்கு தேவதேவன்,
திருவருளால் திடஞானம் திகழுமன்றே!



**கருத்து**

எம் செல்வமே! அகம் பிரம்மம். பிரம்மம் அகம். (அதுவே நாம். நாமே அது) என்ற நாமப்பியாசம் செய்ய, எந்த கடினமும் எந்த வருத்தமும், எந்த சிரமமும், இல்லவே இல்லை! ஆனாலும் சொந்த, பந்த, பாச, உறவின், குண தோஷங்களின் "இனிமையில்", இந்த மனம் சிக்கிக் கொண்டதால், இச்சாதனை கடினமாக தோற்றுகிறது. இவை ஆணவம், கன்மம், மாயை, என்ற மும்மலத்தால் தோன்றுகிறது. இம்மும்மலத்தையும் கெடுத்து, இறை நம்பிக்கையோடும், பர உணர்வோடும், இந்த அப்யாசம் செய்தால், இறைவன் கிருபையால் திடஞானம் சித்தித்து, "அது நாம். நாமே அது! என ஆக முடியும்!

**பாடல் ௨௯**

கல்லாத கல்வி யெல்லாம் கற்ற போதும்,
கலக்கம் இல்லா பரப்பிரம்ம ஞானம் ஒன்றை,
அல்லாது பவபீதி விடுக்க வொண்ணா.
ஆதலினால் ஆதரவாய் நீஎப்போதும்,
எல்லாமே பிரம்மமென்றும், அது நாம் என்றும்;
ஏகமதாம் பரப்பிரம்ம ஞானம் பெற்று,
பொல்லாத பவபீதி அனைத்தும் போக்கி,
பூரணமாயுள்ள பரம் பொருளே ஆவாய்!

**கருத்து**

எம் செல்வமே! கழுதை பொதி சுமப்பது போல், தேவையற்ற சாஸ்திரங்களும், அஞ்ஞான நூல்களையும், கற்று ஓர் பிரயோஜனமும் இல்லை. ஆத்மஞானம் ஒன்றை மட்டும், கற்றால் பிறவிப் பிணி அறுபடும். அந்த ஒன்றேயும், பவம் (பந்தம்) நீக்க வல்லது. அதன் சாதனையும் மிக எளிதாகும். "அனைத்தும் காலாதீத ஒன்றே! அது நாமே! நாமே அது" என்ற பாவனை ஒன்றை மட்டும், இடைவிடாமல் ஆதரவுடன், செய்து வருவாயாக.

**பாடல் ௩௦**

கறையற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை!
(நீ) காண்பதுவும் கேட்பதுவும் எவையும் இல்லை!
நிறைவற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை!
(நீ) நினைப்பதுவும் நினையாததும் எவையும் இல்லை!



மறைவற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை
மற்றதெல்லாம் ஒருகாலும் இல்லையில்லை!
குறைவற்ற பரப்பிரம்மம் நாமே என்றும்;
கோதறவே எப்போதும் தியானம் செய்வாய்!
(மன்னமில்லாமல்)

**கருத்து:** ஞானமழலையே!

தங்குகறை இல்லாத பிரம்மம் ஒன்றே ஸத்தியம்! உன்கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் அனைத்தும் பொய்யே! குறைவில்லாத நிறைவான பிரம்மம் ஒன்றே ஸத்தியம்! உண்மையை கற்பனை நாமரூப குணங்களும் அனைத்தும் பொய்யே! பிரத்தியட்சமான மறைவில்லாத பிரம்மம் ஒன்றே ஸத்தியம்! ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாகிய, எல்லா கற்பனை சொரூபங்களும் பொய்யே! முக்காலமும் ஒளியாக இருக்கும், பரிபூரணமான அந்த பரப்பிரம்ம சொரூபம், நாமே என்றும், நாமே அது என்றும், நிலைத்து நிற்பாயாக!

**பாட்டு 3!**

ஜகமுதலாக எண்ணுவதை தூரத்தள்ளு!
சகலமுமே பிரம்மமெனத் தியானம் செய்வாய்!
அகமுடல் என்றெண்ணுவதை தூரத்தள்ளு!
அகம்பிரம்மம் என்று அனுதினமும் தியானம் செய்வாய்!
சகலமுமே பிரம்மமென்றும், "அதுநாம்" என்றும்;
சந்ததமும் சலியாது தியானம் செய்தால்;
அகம் அன்னியம், ஜகம் அன்னியம்; என்றும்,
(என்ற) அயவெல்லாம் அனுதினமும் அடைவாய் தீரும்!

**கருத்து:** கண்மணியே!

ஜடகடபடாதிகளாகவும், அண்டரண்ட பிரம்மாண்டங்களாகவும் (நாமரூபமாக) காணாதே. அனைத்தும் பிரம்மமாக உணர். அனைத்து சரீராதிகளையும் நாமரூபமாக காணாதே; அனைத்தும் பிரம்மமாக உணர். இப்படி எந்த நிலையிலும் பர உணர்வோடு நீ இருந்தால் உலகம், உடல், பொருள் என எதுவும் உனக்கு அன்னியமாக தோன்றாது. அனைத்தும் பிரம்மமாக உணர முடியும். அந்த பிரம்மம் உனக்கு அன்னியமில்லை என்ற பர உணர்வோடு, "அது நாம்; நாமே அது" என சுகமாக இருப்பாயாக!



## பாடல் 32

அவ்விமனத்தின் ஓர்மையில்லாத் தன்மையாலே
அகம் பிரம்மபாவனையே செய்ய சக்தி,
இல்லதேனும் எப்போதும் சிரத்தையோடு,
"யான் பிரம்மம்; யான் பிரம்மம்; யானே எல்லாம்;
"சலனமில்லா" "பரமே நான்", "பரம் நான்" என்னும்;
(இந்த) ஸப்தத்தை உரைத்தாலும், இவ்வறத்தால்,
நிலைமருவாத அம்மனது மெள்ள மெள்ள
நிச்சலமாய் நிகழ்த்திய பாவனையில் நிற்கும்

### கருத்து

ஆனந்த குழந்தாய்! வாசிஷ்டத்தில் ஓர் வாசகம் உண்டு. "ஞானத்தின் சலன சக்தியே மனமாகும்! "சலிப்படைகின்ற அம்மனமே ஜகமாகும்"! சலனம் அற்றால் மனம் நசிக்கும். என்றபடி, இந்த மனம் ஓர்மையில்லாததெனில், எந்த விதமேனும் "அகம் பிரம்மம்; பிரம்மம் அகம்"! (அதுவே நாம் நாமே அது) என்ற ஸப்தார்த்தை உரைத்துக் கொண்டிருந்தால், "இந்த தர்மத்தால்" சலிக்கும் மனது, மெள்ள மெள்ள தம் யதாஸ்தானத்தில் நின்றுவிடும் இது சத்தியம்!

## பாடல் 33

நிரந்தரமாய் பாவனையில் மனது நின்றால்,
நிச்சலமாய் அகண்டபர ஞானம் உண்டாய்,
திரிந்திடும் மனதினுடைய விகற்பமாக,
தெரிகின்ற பேதமெல்லாம் உடனே தீரும்!
தெரிந்திடும் இப்பேதமெல்லாம் தீரும் மட்டும்,
திருசியமாய் தெரிவதெல்லாம் பரமே என்றும்,
பொருந்திய அப்பரப்பிரம்மம் நாமே என்றும்,
பூரணமாய் எப்போதும் தியானம் செய்வாய்!

### கருத்து

அருமை பாலகா! "அதுவே நாம்; நாமே அது" என்று பர பாவனையில் மனது நின்று, பூரண அனுபூதி கூடும் மட்டும், காண்பதையும் கேட்பதையும், விகார விவகாரப்படுத்தாமல், "அனைத்தும் ஒன்றே; அது பிரம்மமே; அது நாமே; நாமே அது"! என பேத திருஷ்டி மறையும் பரியந்தம், இடையறாத் தியானம் செய்ய வேண்டும். அவசியம் பேதமும் நீங்கும். மனமும் மறைந்தாகும். அதுவே நாம் என முடிந்துவிடும்.



## பாடல் 34 உ



நிறைவு பெறும் இந்த நிஷ்டையுள்ளோர்
நீசரே யினும்,
நிர்மலமாம் பரமாகி முக்தராவர்.
அறைவதில் ஓர் அணுவேனும் ஐயமில்லை,
உறுதியீதே! ஆதலினால் மோட்சு வெல்வாம்,
குறைவறவே இந்நிஷ்டை கூடுமட்டும்,
கூறுபடும் பேதமெல்லாம் பிரம்மமென்றும்,
அறிவுருவாம் அப்பிரம்மம் நாமே என்றும்,
அகண்ட பர பாவனையே பழகல் வேண்டும்!

**கருத்து:** எம் அறிவு சொரூபமே! ஓர் உண்மை என்னவென்றால், "அதிஷ்டம்" என்றால் அது இஷ்டப்பட்டால்தான், அது உன்னிடம் வரும்! "நிஷ்டை" என்றால் நீ இஷ்டப்பட்டால்தான், அது உன்னிடம் வரும்! ஆகவே இப்பாடலின்படி, எம் செல்வமே! இந்த ஆத்ம ஞான நிஷ்டையானது நீ இஷ்டப்பட்டால், அதாவது நீ கடும் முயற்சி யெடுத்தால்தான், அது உன்னிடம் வரும். இந்த ஜீவன் முக்தி யாகிய, ஆத்மஞானம் பெறுபவன், "பஞ்சமா பாதகம் ஐந்தும்" பண்ணியிருந்தாலும், குலத்திலோ தொழிலிலோ, நீசத் தொழில் செய்பவனாயினும், அவஸ்யம் ஜீவன் முக்தி அடையமுடியும். காரணம்:– பாபம், பாதகம், நீசன், சண்டாளன், இவை தர்மாவாகிய தொழிலாகும்! இவை பிராரப்தம் என சொல்லப்படும்! ஆனால் நீயோ கர்மா ஏதும் இல்லாத சுத்த சைதன்ய ஆத்மாவாகும்!

## பாடல் 35

மாயை இல்லை. மருவும் அஹங்காரம் இல்லை,
மனதும் இல்லை, புத்தி இல்லை, சித்தம் இல்லை,
காயம் இல்லை, கருமம் இல்லை. கர்த்தா இல்லை.
காண்கின்ற பொருள்கள் இல்லை, புவனங்கள் இல்லை,
ஆய பல உயிர்கள் இல்லை, அமரர் இல்லை,
அயனும் இல்லை, ஹரியும் இல்லை, ஹரனும் இல்லை,
நேய(மான) பொருள் எவையும் இல்லை!!! (ஆனால்) என்றும்,
"ஏக பரிபூரணமாம் பிரம்மரூபம்"!

உ





**கருத்து** எம் உத்தமமோத்தமனே! நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம், வர்த்தமானம், மனம், வாக்கு, ஆதி, அந்தமற்ற அந்த பரசொரூபம், எதிலிருந்து வந்ததும் இல்லை! எதிலும் ஒன்றுவதும் இல்லை. அதில் இவ் உலகமாகப் பேசப்படும் இந்த கருவி, கரணங்களும், தேவதைகளும், இல்லை யென்றே பிரமாணமாகச் சொல்ல வேண்டும். இதில் ஓர் உண்மையை உணர்வது என்றுவ்?

**"ஆவரணம்"** நம் தாவரமும், ஜடபட்சம் ஜீவகோடிகளும் ஆகும்.

**"பொன்"** ஸ்ரீ பகவத் சொரூபங்களாகும்!

**"மண்"** ஸ்ரீ பரம் பொருளாகிய பராபரம் ஆகும்!

இவை ஓர் உவமானமேயன்றி உண்மையல்ல! அதாவது எந்த உபயோகமும், செயல்பாடும் இல்லாததே ஸ்ரீ பர சொரூபமாகிய மண் ஆகும்! அந்த மண்ணில் தோன்றியதே, ஒளிரும் பொன். அதனிடமும் செயல்பாடு இல்லை. அதனின்றும் ஓர் களிம்பு தோன்றியது, அதுவே மாயை. "பொன்னும் களிம்பும்" (ஸ்ரீ பகவத் சொரூபமும் மாயையும் இணைந்தது) அனந்த ஜீவகோடிகளும். இவை மாயையாகிய மணலை (களிம்பை) விட்டு விட்டால், அங்கு ஆவரணம் இல்லாமல், பொன் ஒன்றே மிஞ்சும். பின்னர் "பொன்னும் மண்ணும் ஒன்றே;" "அது நாமே; நாமே அது"!

**பாட்டு 36**

அன்னியமே தோன்றாத அகண்டாகார
அறிவு தனை அடைந்தவனே முக்தனவான்!
இந்த விதம் அகண்ட பர ஞானமுற்றோன்,
இவ்வுலகில் எவ்விடத்தும் அரியவனவான்!
(அவன்) சொல்லவொண்ணா பல கோடி ஜீவருக்குள்,
உரமான ஞானமுள்ளோன் ஒருவன்தானே!
அன்னவனை தரிசித்த மாத்திரத்தில்
அறம் மேலோங்கும்; அறம் அழிந்துவிடும்!!



## கருத்து

பொன்னாகிய மன்னவனே!

தான்தானே ஆனவன், தனக்கு நிகர் தானே ஆனவன்; அதுவாகவே பிரகாசிப்பவன்; மூன்று உலகங்களிலும் "ஒருவனே ஆனவன்"; அவனை காண முடியாது! அவனை அறிய முடியாது! "அவ்வுணர்வு பெற்றோர், அவனை உணர்வர்"!

இப்பாடலில் ஓர் அதிசயமான வாசகம்:- அதாவது
அன்னவனைத் தரிசித்த மாத்திரத்தில், (அறம் மேலோங்கும்! அஹம் அழியும்!) என்கிறார்.
நாம் அந்த இரண்டு நிலைகளையும் அனுபவிக்க முடியவில்லையே!

இதை எப்படி நம்புவது?

இதை கவனி:- மேலே கூறிய அறமாகிய தர்மமும், அஹமாகிய அபிமான, அதிகார, அஹங்காரங்களும், உங்களால் காணக் கூடிய ஒன்றா? அல்லது அறியக்கூடிய ஒன்றா? காண்பது என்றால் தூலக் கண்ணால் காண்பது. அறிவது என்றால் சொல் விளக்கமும், வரிவடிவ விளக்கமும் ஆகும். ஆனால் மேலே கூறிய இரண்டும் "உணர்வுபூர்வமானது".

"உங்கள் சந்தேகமே உங்கள் மறைப்பு"!

"உங்கள் நம்பிக்கையே உங்கள் உணர்வு"!!

"அறம் மேலோங்கினால் அஹம் அழிந்து விடும்"!

"அஹம் மேலோங்கினால் அறம் மறைந்து கொள்ளும்"!!

NB:- தரிசித்த மாத்திரத்தில் அதாவது, அந்த க்ஷணத்திலேயே பிரத்யட்சம் இதுவே ஸத்தியம்!

ஒருவன் கழுத்தை இறுக்கும் 10 முடிச்சுகளில் ஒன்றிரண்டை மட்டும் நீக்கினால், அவன் சுகம் பெறமுடியுமா? ஒன்பதையும் அவிழ்த்தாலும் அவன் சுகம் பெற முடியுமா? முடியவே முடியாது. 10 ஐயும் அவிழ்த்தால் தான், சுகம் பெற முடியும். அதுபோல உன் உள்ள முடிச்சை அவிழ்ப்பது, உன் குருதேவருக்கு மட்டுமே தெரியுமன்றி, உன்னால் உணரவே முடியாது. "இது மானஸீக பேங்க்" அதன் "பாஸ்புக்" உன் குருதேவருடையதே. அதை உன்னால் காணவும், அறியவும், உணரவும் முடியாது. "உன் ஸத்குரு நம்பிக்கையே" "உன் பலம், உன் பலன்"!



உ



நாம் எட்டு வருஷம், பத்து வருஷம், இருபது வருஷம், சாதனை செய்து வருகிறோமே. இந்த நிலை பரியந்தம் நம் "சாதனையின் நடயம்", ஓர் அணுப்பிரமாணமாவது காணவும் முடியவில்லை, அறியவும் முடியவில்லை, உணரவும் முடியவில்லையென, சந்தேகமும், தளர்வும் கொண்டால், அதுவே உன் சாதனையின் வீழ்ச்சி ஆகிவிடும். தளராத மெய்யுணர்வும், திடமான நம்பிக்கையும், அசையாத வைராக்கியமும் நீ கொண்டால் அதுவே "இறை கருணையும், பர(குரு) உணர்வையும்", அவசியம் கொடுத்து, "எந்த நிலை உன் முடிச்சு அவிழ்கிறதோ", அந்த நிலையே, நீ அதுவாகி இருப்பாய்! இது சத்தியம்!

பாடல் 37.

பேசிய இந்த நிச்சயமும் சமாதிவிட்டு,
பிரிவுற்ற காலத்தில் உள்ளதன்றி,
பாசம் இல்லா சமாதி தனில் இருக்கும் காலே,
பரவிய இந்த நிச்சயமும் அறிநர்க்கில்லை!
"சாசுவத சமாதி தனில்," சலனம் அற்று,
சங்கல்ப விகல்பங்கள் அனைத்தும் அற்று,
ஆசில் பரம ஆனந்த அனுபவத்தோடு,
"ஆவரணம் இன்றி" அசஞ்சலமாய் நிற்பன்!

கருத்து: எம் செல்வா! தியானத்தின் முதிர்ச்சி சமாதி! இது அந்த காலங்களில் மட்டும் இருந்தால், உன் சாதனை சரியில்லை! "எந்நிலையும் இருக்க வேண்டும்"! அது எப்படி முடியும் என்றால்? "குண தோஷங்கள் (எண்ண நிலையில்) அற்றிருப்பதே, சாஸ்வத சமாதி. இந்த சமாதி விட்டுவிட்டு வரும், பின் அது உன்னை பூரணமாக ஆட்படுத்திவிடும். அந்நிலை உனக்கு சித்தித்தால் நாமரூப மயக்கமும், குண தோஷ தவக்கமும் இல்லாத தன்மையில் நீ பசும்பொன்னாக, (இறை சொரூபமாக) இருப்பாயே அன்றி, "ஆவரண மயக்கம் இல்லா தொழிவும்" அது நாமே நாமே அது என்ற நிலைப்பாடியம்!



## பாடல் 38.

சலனம் இல்லா சிலைபோலும் காஷ்டம் போலும்,
சங்கல்ப விகல்பங்கள் ஒன்றுமின்றி,
சலனமறும் பிரம்மத்தில் பாலும் நீரும்,
கலப்பதுபோல் வேறறவே கலந்து சற்றும்,
அலைவறவே வெறிதாக சுகித்திருக்கும்,
அறிஞனுடைய அந்நிஷ்டை மகிமை தன்னை,
நிலைமருவா மனதாலும், வசனத்தாலும்,
நினைந்திடவும், பகர்ந்திடவும் யார்தான் வல்லோர்

"சங்கல்பம், விகல்பம்" = கற்பனையின் எண்ணமும், அதன் குற்ற உணர்வும், இணைந்ததே ஸங்கல்ப விகல்பமாகும்!

**கருத்து:** உண்மையின் குழந்தாய்! "அதுவே நாம், நாமே அது" என்ற பரவுணர்வில், "ஓர் பட்ட மரம் போலும், கருங்கல் போலும்" அசைவற்றிருக்கப் பழகு. அந்த பிரம்ம உணர்வு எப்படி இருக்க வேண்டுமெனில்? பாலில் கலந்த ஜலத்தை எப்படி பிரிக்க முடியாதோ அதே நிலையில், அசைவற்று, அனைத்தும் ஒன்றென்ற பரவுணர்வில், பிரம்மானந்த நிலையில் இருப்பாயாக. அப்படிப்பட்ட உன் நிலையை இங்கு தேவர் மூவராலும், வேறு எவராலும், காணவோ, அறியவோ முடியாது. ஆனால் அந்நிலை உணர்ந்தவர், அது ஆவரன்றி வேறு உணர்வு பெறார்!

## பாடல் 39.

பலகால வாதனையால் துவைதம் தானே,
பரமார்த்தம் என்று "நினைவு உதித்த போதும்",
நொய்யாத துவைத வடிவு ஆகத்தானே, (தோற்றும்)
(ஆனால்) துவைதத்தை நினையாமல் அவற்றை வெல்வாம்,
அலையாத அதிஷ்டான அறிவாய் நின்று,
அத்வைதம் ஆன பர வடிவேயாகச்,
"சலியாமல் எப்போதும் நினைத்தே அதனால்",
ஸத்திய சித் சுகவடிவாய் முக்தனவாய்!





**கருத்து** அன்பின் சொரூபமே!

பலகாலமாக நாமரூபகுணமாக பார்த்துப்பார்த்து, கேட்டுக் கேட்டு, பேசிப்பேசி பழகிப்போன வாஸனையான "பிரபஞ்சம், துவைதமாகத்தான் தோற்றும்"! ஆனால் நீ அப்படி வரும் எண்ணத்தை, கவனமுடன் இருந்து கொண்டு, இவை அனைத்தும் "அதிஷ்டானத்தில் தோன்றிய ஆரோபம்" (கயிற்றில் தோன்றிய சர்ப்பம்) என உறுதியாக நின்று, சற்றும் அசையாமல் சலிப்படையாமல், "அதுநாம்; நாமே அது" என்ற ஒரே எண்ணத்தால் ஜீவன் முக்தனவாய்!

**பாடல் 40.**

மனததான் நின் சகஜ சொரூபமானால்,
(அந்த) மனதுதான் மீளாது மாண்டு போகும்!
மனதுடைய மீளாத மாய்வு தானே,
மனத்தான மோட்ச நிலை! அதனால் மைந்தா!
மனதனை மீளாது மாய்க்க வேண்டி,
மனந்தான பரப்பிரம்ம நிச்சயத்தை,
"மனதொருமையுடன் செய்து மனதை மாய்த்து",
மனத்தான முக்தி நிலை மேவி நிற்பாய்!

**கருத்து** ஆனந்த வடிவமே!

மேலே சொன்ன பாடலின் படி, துவைதத்தை விடுத்து, அத்வைதமாகவே திரும்பத் திரும்ப, அப்யாசம் செய்து "ஜெயம் பெற்றுவிட்டால்"; உன் சாதனையும் முற்றுப் பெற்று விடும்; "மனம் மனத்தான நிலையே ஜீவன் முக்தியாகும்"! இதை எந்த வினையும் மனதொருமையுடன் செய்வாயாக. அதாவது ஓர் நண்டு என்ற ஜீவனை, ஓர் பாத்திரத்தில் போட்டால், அது அங்கே இருக்காது. திரும்ப திரும்ப தாவித் தாவி, வெளியே வந்து கொண்டு தான் இருக்கும். ஆனால் நீ விடா முயற்சியுடன், அதை அப்பாத்திரத்திலேயே போட்டுக் கொண்டு வந்தால், அந்த நண்டு முடிவில் அப்பாத்திரத்தை விட்டு வெளியே வர முடியாது. அந்நிலையே உன் மனதின் சாதனையாகும்!



## பாடல் 41

ஆதலினால் அனைத்திற்கும் அதீதமான,
அகண்ட பரப்பிரம்மம் அகம் என்றெப்போதும்,
சாதகமாம் பாவனையே செய்ததாலே,
சஞ்சலமாம் விகற்பமெல்லாம் தவிர்த்தெப்போதும்,
பேதமில்லா பரப்பிரம்ம ஞானியாகி,
பின்னமில்லா பரப்பிரம்ம வடிவேயாவாய்!
ஈதையல்லால், எளிதாக முக்தி சேர,
வேறொன்றும் உபாயமில்லை. இதுவே உண்மை!

**கருத்து.** திடஞானியே!

அந்த காலாதீத அகண்ட பரப்பிரம்மத்திற்கு, "அயலாக எதுவுமே இல்லை" என்ற இந்த முழுமையான ஸத்தியமான, பாவனையை இடைவிடாமல், நீ செய்து வந்தால், உன் சஞ்சலம், சந்தேகம், பயம், கலக்கம், இவைகள் எல்லாம் நீங்கி, "ஸ்வய ஞானானுபூதி பெற்று", எப்போதும் பிரம்மானந்தமாக வாழ்வாய். இதைத் தவிர வேறு, எளிய மார்க்கம் இல்லவே இல்லை!

## பாடல் 42.

எப்போதும் இயல்பாகவே மௌனியாகி,
எவருடனும் கூடாமல், ஏகாந்தத்தில்,
"கற்போல அசையாமல்" இருந்து சற்றும்,
கலங்காத மனதுடனே ஒருமையாகி,
சற்போத சுகதனமாம் "பரம் நாம் என்றே",
சந்ததமும் பாவித்து சாந்தனாகித்,
தற்போத சூனியனாய் விகற்பம் (குற்ற உணர்வு) தீர்ந்து,
தற்பதமே தாமாகி முக்தனாவாய்!

**கருத்து.** சாதனையில் மிக்கோனே!

"ஆரம்ப நிலையில்", ஜனசந்தடியான கூட்டங்களில், அதிகம் சேராமல் "ஏகாந்தனாய்," (கட்டுப்பாடான மௌனம் இல்லாமல்) "இயல்பான மௌனியாகி," (இயல்பான மௌனம்: பத்து வார்த்தை பேசும் இடத்தில், ௧ வார்த்தை பேசுவதும், அவ்வார்த்தை இறை உணர்வோடும், இனிமையாகவும்,

உ (30)



இதமாகவும், மிதமாகவும், அன்புடனும்,
பேசுவது, "இயல்பான மௌனம்) பட்டமரம் போலும்,
குத்துக்கல்லைப் போலும், அணுவளவும் கலங்காத
மனதுடன் ஓர்மையான (அது நாம் நாமே அது) என்
ணத்துடன், குற்ற உணர்வுகளை நீக்கி"; தற்பத
சொரூபமான பரமாத்மா நாமே என்று, (இறைவன்
வேறு நாம் வேறு என்ற எண்ணம் இல்லாமல்) பிரம்மா
னந்த சொரூபமாக இருக்கக்கடவாய்!

**பாடல் 43**

—x—x—x—x—x—

தேகமுதல் ஒருகாலும் நாம் அன்றென்றும்,
நெறிவுருவாம் பரப்பிரம்மம் நாமே என்றும்,
பாகமுற ஒரு பொருளும் இல்லையென்றும்,
பல பொருளும் பரப்பிரம்மம் நாமே என்றும்,
"ஏகபரபாவனையை இடைவிடாமல்"
எப்போதும் இனிமையுடன் செய்வாயானால்;
மோஹமெல்லாம் ஒழிந்துடனே முக்தனாவாய்.
மொழிந்ததிலோர் ஐயமில்லை சத்தியம் தான்!

**கருத்து** ஆத்மசொரூபமே!

"இந்த மாமிச பிண்டமும் நாம் அல்ல.
அனைத்து ஜீவகோடிகளும், நம்முடையதும் அல்ல. ஆனால் நாமும் இவை
அனைத்து ஜீவகோடிகளும், நேருக்குநேராக காணக்கூடிய பிரம்ம
சொரூபமேயன்றி, அப்பிரம்மத்திற்கு அன்னியமில்லையென்றும்
ஜடகடபடாதிகளாகிய இந்த நாமரூப ஜகத்தும், அந்த ஒன்றிற்கு
அன்னியமில்லையென்றும்; இந்த ஆனந்தமயமான பாவனையை,
இடைவிடாமல் செய்துகொண்டு, "ஆசையால் வரும் மோஹத்
தை அகற்றி" எப்போதும் முக்தி சொரூபமாகவே இருப்பாய்!

NB:- ஆசையும், கோபமும், மனைவியும் கணவனும் போன்றது!
இவை இரண்டும், "மோஹத்துடன் கூடிவிட்டால்", பயம் துக்கம்,
என்ற இருகுழந்தைகளும் பிறந்தே தீரும்! ஆகவே
தேவையும், ஆசையும். ஆசையும், கோபமும் சங்கிலி போன்றது!
இவ்விரண்டையும் நீக்குவாயாக.

—x—x—x—x—x—



பாடல் ௪௪.

நற்பிரம்ம விவேக வலி உள்ள தீரர்,
நாரிமுதல் சுகத்திச்சை பண்ணும் போதும்,
பற்பலவாய் தோன்றும் அச்சுகத்தை யெல்லாம்,
பரப்பிரம்ம சொரூப சுகமே எனவே ஓர்ந்து,
கற்பிதமாம் விஷய சுகம் அனுபவிக்கக்
"கனவிலுமே கருதாது" தைரியத்தோடு,
அற்பமில்லா அகண்ட பர சுகமே சேர,
அகண்டபர ஞானபலம் அடைய வேண்டும்!

கருத்து: லக்ஷியத்தின் சொரூபமே!
பிரம்மச்சாரி, சந்நியாசிகளுக்கல்ல. இப்பாடல் குடும்பிகளுக்
கான சம்சாரிகளுக்காகவே கொடுக்கப்பட்டதாகும்.
இதில் ஓர் சூக்ஷ்மம் என்னவென்றால்?

1. குலஸ்திரீயாகிய, தாம் வரித்த மனைவியாகிய "பத்தினிப் பெண்"
இடம், விவாக பந்தம் கொண்டதால், "போகம் பண்ணு"
அதுவும் "குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட இடம், குறிப்பிட்ட
பருவம்!" (இறை நாம ஸ்மரணையுடன், இது உன் காரியம் என
இதுவும் காரியமல்ல →)
"சர்வார்ப்பணமாகப் பண்ணு"! அது தோஷமும் அல்ல. உன் வினை
கழிகிறது என உறுதியாக நம்பு!
2. பரஸ்திரீ கமனம், விலைமாதர், பற்பல பெண்கள் கூடவே கூடாது
3. பணம் கொடுத்து பண்ணாதே! மனம் எடுத்து பண்ணு!!
4. அப்படி பண்ணும் "பிராப்தி" உனக்கிருந்தால், முதலில் பயம்,
சந்தேகம், துக்கம் இவற்றை விட்டு விட வேண்டும்!
5. அப்படி பண்ணும் போது அப்பெண் பதுமையின் (பெண்ணின்)
அவயவங்களை, (அங்கங்களை) காம உணர்ச்சி பொங்கும்
கற்பனை எண்ணம் அணுவும் கூடாது! அதனால் உன் மனம் "காமத்
தீயினால்" தகிக்கப்படும். கர்ம வினையும் சூழும். இறை உணர்வாகிய
மெய்யுணர்வு அழியும். உடல் உணர்ச்சிகள் பெருகி உன்னை அழிக்கும்.





உ

அதனால்தான் எம்பிரான் இந்த ஸத்திய வாசகம் போட்டான், என உறுதியாக நம்பு!

அதாவது

"நற்பிரம்மம், விவேகவலி, உள்ளதீரர்" என்றன்.

நீயே கொடுக்கப்பட்டதை கவனமாக உணர்!

**யோனி** :— "சிருஷ்டியின் முதல் வழி". உடல் உலக கற்பனை தோன்றி நாமரூபங்களில் சிக்க வைக்கும் ஓர் மாயாபீஜம் (விதை)

**ஸ்தான பாரம்** :— ஸ்திதியின் முதல் வழி, காமத்தையும், மோஹத்தையும், போகத்தையும் உண்டுபண்ணி மயக்கத்தில் சிக்க வைக்கும் ஓர் மாயாபீஜம் (விதை)

**வாய் & உதடு** :— சம்ஹாரத்தின் (அழிவின்) முதல் வழி, ஆக்கப் பாதையில் செலுத்துவதும் இதுவே!

அழிவுப் பாதையில் செலுத்துவதும் இதுவே!

இதை சுவைப்பதிறல் வாக்கு ஹிரயமாகும்!

"வினையின் அஸ்திவாரமே நாக்காகிய வாக்கு ஆகும்." இதுவும் ஓர் மாயாபீஜம் (விதை)

குழந்தைகளே!

மேலே கூறிய மூன்று நிலைகளையும் மனதில் கொண்டு, அவைகளை மாற்றி!, இது நம் இறைவன், உலக சிருஷ்டியின் நிமித்தம், உண்டுபண்ணிய ஓர் கருவி என்றும், இது நம் இறைவன், ஜீவனைக் காக்கும் நிமித்தம், உண்டுபண்ணிய ஓர் கருவியே என்றும், இது நம் இறைவன், ஜகத் ஜீவர்களின் புண்ணிய பாவ வினைகளை நடைபெறும் நிமித்தம், உண்டுபண்ணிய ஓர் கருவியே என்றும், அவைகளில் மனதை ஆழ்ந்து போகாமல், "அனைத்தும் ஒன்றே! அது சுகசொரூபமே! அது நானே, நானே அது என்று".



உறுதியான "திடவைராக்கியத்துடனும்"
அசைக்கமுடியாத "நம்பிக்கையுடனும்"
மேலே சொன்ன கர்மா காரியம் நடந்தால்,
நீயே நிர்பிரம்ம, விவேகம், உள்ள
அதிதீரனவாய்!! இது சத்தியம்!

## பாடல் ௪௫

(நதான)

நினைவையெல்லாம் நீக்கி, மனோவாக்குக்கு எட்டா,
நிஜவடிவாய் நிற்பதுவே நிறைந்த முக்தி!
நினைவு அணுவும் வேறாக நிகழுமாகில்,
நினைவதுவே மஹத்தான பந்தம் ஆகும்!
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே,
நிஜமான அத்வைத நிலைமையாகும்!
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே,
நிரதிசய ஆனந்த நிலைமையாகும்!

**கருத்து**

எம் விவேக மைந்தா! மனோவாக்குக்கு எட்டாத எண்ணமற்ற சுத்தமான, அத்வைதமே, பிறவாநிலையான "ஜீவன் முக்தி"! எந்த எண்ணம் இருந்தாலும்:- உலக எண்ணம் இருந்தால் "அது உலகபந்தம்"! தெய்வ எண்ணம் இருந்தால் அது "தெய்வ பந்தம்"! முந்தையது இரும்பு ஊசி! பிந்தையது பொன் ஊசி! இரண்டும் ஊசி (கர்மா) தானே? எந்த கர்மாவாலும் அதை அடைய முடியாது; அது ஆக முடியாது! "ஆகவே அது நாம் நாம் அது" என்ற ஓர் எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டு, லௌகீக எண்ணத்தையும், தெய்வீக எண்ணத்தையும், விட்டு, பின் அந்த "அதுவே நாம் நாமே அது" என்ற பர எண்ணத்தையும் முடிவில் விட்டுவிட்டு, சொல்ல முடியாத, நினைக்க முடியாத, ஒன்றுமே இல்லாத, ஆனால் "அனைத்துமே ஆன" அதாகி நிற்பாய்!



## பாடல் 46

மஹத்தான மாயையென்ன? மஹத்தான அவித்தை என்ன?
மஹத்தான பந்தமென்ன? மஹத்தான முக்தியென்ன?
மஹத்தான சித்தமென்ன? ஜீவன் என்ன?
மஹத்தான ஜகங்கள் என்ன? ஈசன் என்ன?
மஹத்தான நாமமென்ன? ரூபமென்ன?
மதிக்கின்ற மனதுடைய நினைவனைத்தும்
மஹத்தான "பரப்பிரம்ம சொரூபமன்றி"
மற்றணுவும் இல்லையெனவே நிச்சயிப்பாய்!

## கருத்து:

எம் சுகசொரூபமே!

"ஒன்றை இரண்டாகவும், பலவாகவும், இருப்பதைப் போலும், இல்லாமல் மறைவதைப் போலும், உன் மனதை மயக்கும் மாயை இல்லை! அதற்கு உட்பட்ட அவித்தை (ஜடாசாரமும்) இல்லை! பந்தப்பட்ட ஜீவனும் இல்லை! சம்சார பந்தமும் இல்லை! பந்தம் நீக்கிய முக்தியும் இல்லை! கோடானு கோடி அண்டங்களும் இல்லை! அதை சிருஷ்டிக்கும் ஈசனும் இல்லை! கோடானுகோடி நாமரூபங்களும் இல்லை! ஆனால் மேலே கூறிய இந்த "நினைவுகள் அனைத்தும்" அந்த தாவா தீதமான பரசொரூபத்தின் விளையாட்டன்றி அன்னியமில்லையென நிச்சயித்து, "அது நாம், நாமே அது" என உறுதியுடன் இருப்பாயாக.

## பாடல் 47

அநவரதம் அகம் பிரம்ம நிச்சயத்தை
ஆதரவோடு அதிதிடமாய் அப்யாசித்தால்
மனதிலுள்ள விகற்பமெல்லாம் முன்பு தீர்ந்து
(மனதது) குற்றஉணர்வெல்லாம்
மற்றதுதான் விறகற்ற அக்கினி போல
தனது நிஜ அதிஷ்டான பிரம்மத்தின் கண்
தான் தானே சாந்தியுறும் ஆதலாலே
(யாம்) சொன்ன விதமாய் அகம் பிரம்ம நிச்சயத்தை
சுகமுறவே முமுட்சுவெல்லாம் பழகல் வேண்டும்!!!



**கருத்து** எம் விவேகத்தின் மைந்தா! யாம் சொல்லும் அகம் பிரம்ம நிச்சயத்தை, தைல தாரைபோல் இடைவிடாமல், ஸ்மரணை செய்து வந்தால், விறகு இருக்கும் வரை எரியும் அக்கினியானது, விறகு தீர்ந்ததும் தானே அணைந்துவிடுவது போல், உன் கர்மாவின் இயக்கமும், உன் மனதுடன் தீர்ந்து போனவுடன், உன் யதார்த்த சொருபமான தன்மயம், தான் தானாய் பிரகாசிக்கும். ஆகவே அகம் பிரம்ம நிச்சயத்தை சிந்தை செய்வாய்!

**பாடல் 48**

சொல்லும் "மலின வாதனையும்" மனதின் தர்மம்!
"சுத்த பர வாதனையும்" மனதின் தர்மம்!
"அவையும் ஒரு வாதனையும்" பரத்திற்கு இல்லை!
ஆதலினால் அம்மயமாய் நிஷ்டை சார்ந்து,
"மலினமென, சுத்தமென" மதிக்கப்பட்ட,
(இந்த) மனதுடைய வாதனைகள் ஒன்றும் இன்றி,
சலனம் இல்லா சிலை போலும், காஷ்டம் போலும்.
சற்றேனும் சலியாமல் சுகித்திருப்பாய்!!!

**கருத்து** அறிவு சொரூபமே! லௌகீகமாகிய உலகிற்கும், "தர்மாதர்மம் உண்டு"! வைதீகத்திற்கும், "தர்மம் மட்டும் உண்டு"! ஆனால் அந்த காலாதீத பரம் சொருபத்திற்கு எந்த நியமங்களும், தர்மாதர்மங்களும் பிரமாணமாக இல்லை. ஆகவே இந்த மனமானது, லௌகீகத்தையும், வைதீகத்தையும், உண்டு என நம்பியிருக்கும் பரியந்தம், "வாதனையை கொடுக்கின்ற" இந்த தர்மாதர்மங்கள் உண்டு. இதே மனம் மறைந்தால், பர சொரூபத்திலேயே, கலந்து மயமாகி விட்டால், இந்த தர்மாதர்மங்கள் இல்லவே இல்லை. ஆகவே அந்த பர சொரூப ஸ்திதியிலேயே, உணர்வுடன் ஒன்றி, பட்டமரம் போலும், குத்துக்கல் போலும், சலனமற்றிருப்பாயாக!!!



## பாடல் 49

எல்லையில்லா வேதமெல்லாம் சித்தசுத்திக்கு;
ஏதுவாக உபாசனையை முன்பு அங்கு அங்கே;
சொல்லியதால் சித்தத்தின் சுத்தி பெற்றோர்;
சுகமாக மோட்ச நிலை சார்வதற்கே;
அல்லல் இல்லா ஆனந்த கனமேயான,
அகண்ட பரிபூரணமாம் பரசிவத்தில்;
கல்லெனவே அசையாமல் கலந்திருக்கும்;
களங்கம் இல்லா நிஷ்டையினை காட்டினன்றே!
அன்பின் சொரூபமே!

**கருத்து:** வேத, சாஸ்திர, புராண இதிகாசமெல்லாம், "சித்தம் சுத்தமாவதற்கே", பாடம் புகட்டுவதல்ல, அவை "மோட்சம் தருவதல்ல"; என உணர்வுடன் நம்புவாயாக! "அந்நிலையில் மேலே சொன்ன விதிமுறை, உணர்வு பூர்வமாக உணர்ந்து, "சித்தம் சுத்தமான நிலை பெற்றோர்", திரும்பவும் வேத, சாஸ்திர, மந்திர, புராண, இதிகாசம், வசம் செல்ல வேண்டாம்! அதுக்கு பரசொரூபே ஸ்திதியாகிய, "அகம் பிரம்மம், பிரம்மமே அகம்", ("அதுவே நாம், நாமே அது) என்ற அகண்ட பரம்பொருளையில், அசையாக் கல் போன்று, களங்கமில்லா நிஷ்டை பெற வேண்டும்!

## பாடல் 50

காலமுதற் கற்பனையே இல்லாமையாலே;
காண்கின்ற காட்சிமுதல் இருப்பதெங்கே?
தூலமுதல் காத்திரமே இல்லாமையாலே;
தொடர்கின்ற பவபந்தம் இருப்பதெங்கே?
மூலமதாம் அஞ்ஞானம் இல்லாமையாலே;
மூளுகின்ற அதன் செய்கை இருப்பதெங்கே?
ஆலயமாம் பரப்பிரம்மம் அனைத்தும் என்றும்;
"அதுதானே அகம் என்று" அநுசந்திப்பாய்!!



கருத்து ௨ (37)

அமுதமானவனே! முக்கால முதல்,
எக்காலமும் இல்லவே இல்லை. ஆகவே அங்கு
கற்பனையான நாமரூப காட்சிகள் ஏது? 84
லட்சம் ஜீவகோடி வினைசரீரங்களும், இல்லவே
இல்லை. ஆகவே அங்கு புண்ணியபாபவினைத் தொடர்
பானபந்தமைகள் ஏது? அனைத்திற்கும் மூலகாரண
மான, மூலமாயையாகிய, யோகமாயை இல்லவே
இல்லை. ஆகவே அங்கு அஞ்ஞானம், ஞானம் எனபிரிவு
கள் ஏது? ஒரே கோயில். ஒரே தெய்வம். ஒரே பரம்
எனச் சொல்லும் அந்த ஒன்றே ஸத்தியம். "அதுவே நாம் நாமே அது!"

பாடல் ௫௧

ஒரு பொருளும் ஒருகாலும் அழிந்ததில்லை!
ஒருகாலும் அழியாதது இருப்பது எங்கே?
விரிவுறவே அழியாதது, மற்றும் இல்லாததும்,
கெட்டுப்போயிற்று என விளம்பவெங்கே?
அரியவனே! ஆதலினால் அகண்டமான,
அத்வைதப் பிரம்மத்திற்கு அயலே இல்லை!
சர்வமுமே பிரம்மமென்றும் "அது நாம் என்றும்";
சலியாதபாவனையால் சாந்தனாவாய்!

கருத்து
அன்பின் சொரூபமே! பிரமாணமாகச் சொல்கிறேன்.
நாமரூபசம்பந்த, எந்த ஜடகடபடாதிகளும் உண்டாகவில்லை. அப்படி
உண்டாகாதது, இருக்கிறது என்று எப்படி சொல்லமுடியும்? அப்படி ஓர்
தோற்றம் உண்டாகாமல் இருக்கும்போது, அது நாசம் அடைந்துவிட்
டதென எப்படி கூறமுடியும்? அருமையான குழந்தாய்! ஆகவே அனைத்
தும், அந்த காலாதீதபிரம்மத்திற்கு அயலாக இல்லவே இல்லை! சர்வ
மும், சந்ததமும், பரப்பிரம்ம சொரூபமென்றும், "அதுவே நாம்,
நாமே அது" என்றும் பாவனை செய்து சாந்தனாவாய்!

பாடல் ௫௨

எப்பொருளும் எங்கேனும் இருக்குமாகில்,
இவ்விதமாய் இது உளது என சொல்லவேண்டும்!
ஸத்பொருளேயன்றி ஒருபொருளும், என்றும்,
சிறிதும் இல்லாத தன்மையினால் சொல்வதற்கு இங்கு,



உ

(38)

அற்பவுமே இடமில்லை ஆதலாலே,
"அகண்டபரப்பிரம்ம வடிவான எம்மில்"
சொற் பொருளோர் அனுபவமில்லை, என்றெப்போதும்,
சும்மாவே இருந்துமிகச் சாந்தனாவாய்!
கருத்து
அருள் வடிவானவனே!

எந்த பொருளும்
எங்கேயும் இருக்குமென்றால், இது இப்படி இருக்கிறது என சொல்லமுடியும். ஆனால் நம்முடைய ஸித் சொரூபமே, அனைத்துமாய் இருக்கிறதேயன்றி, அந்த ஸித் சொரூபத்திற்கு, அன்னியமாய் எதுவுமே இல்லை! ஆகவே அந்த ஸித் சொரூபத்திற்கு அன்னியம் எதுவுமே இல்லாத் தன்மையாலே சொல்லும் இல்லை; சொல்லும் பொருளும் இல்லை! அனைத்தும் அந்த ஒன்றே என்றும், அதுநாமே என்றும், வேறு எந்த எண்ணமும் இல்லாமல், "சொல் அற சும்மாயிருப்பாயாக"

பாடல் 53

சகலமுமே பிரம்மமென்னும் நிச்சயத்தால்,
ஜகம் முதலியது உண்மையென்னும் பிராந்தி நீங்கும்!
திகழ் பிரம்மம் நாம் என்னும் நிச்சயத்தால்,
தேகம் முதல் நாம் என்னும் பிராந்தி நீங்கும்!
தருமகனே! ஆதலினால் எல்லாம் என்றும்,
"தற் பிரம்மம் நாம் என்றும், அது நாம் என்றும்"
வெகுதிடமாக அனுபூதி அடைந்து எப்போதும்,
வேறறவே மிகவும் உபசாந்தனாவாய்!
கருத்து
ஆனந்தமயமானவனே!

கண்ணில் காணும் ஜட
கடபடாதிகளான, அனைத்து நாமரூபங்களும், பிரம்மமென்றும் நிச்சயம் செய்தால், நாமரூபகுண தோஷ பயப்பிராந்தி ஒழியும்! அனைத்து சரீரங்களும் பிரம்மமென்றும், அதுநாமே என்றும், நிச்சயம் செய்தால், "தேகாத்மபுத்தி" என்னும் பயப்பிராந்தி ஒழியும்! எமக்குகந்தவனே!

ஆகவே எந்த பிழையும், அனைத்தும் பிரம்மமே என்றும், அப்பிரம்மம் நாமே என்றும், ஏகபராவனை செய்து எப்போதும், பேதாபேதம் நீக்கி சாந்தத்தின், ஸத்ய சொரூபமாக பிரகாசிப்பாயாக!





## பாடல் 54

பதம்பதமாய்ச் சொல்லிடும் நாமம் இல்லை!
பதார்த்தமெனச் சொல்லிடும் உருவம் இல்லை!
விதவிதமாக விளங்கிய எப்பொருளும் இல்லை!
விரிந்த ஜகத் ஜீவ, பரம், எவையும் இல்லை!
சுதந்திரமாய் ஒருகாலும் ஒன்றும் இன்றி;
சுத்தமதாய் உளது பரப்பிரம்மம் ஒன்றே!
நிதம் தவிராது, அப்பிரம்மம் நாமே என்னும்
நிலை பெற்ற ஞானத்தால் முக்தனவாய்!

**கருத்து:** கனிவானவனே! பதம்பதமாகப் பிரித்துப் பிரித்து, சொல்லும் நாமங்கள், எவையும் இல்லை. பதார்த்தங்களாக பற்பல உருவங்களும் இல்லை. பத அர்த்தங்களாகச் சொல்லக்கூடிய, லோகாந்திரப் பிராப்தியாகிய பதமுக்திகளும் இல்லை. விதவிதமாக விளங்கக்கூடிய, எந்த பண்ட, பாண்ட, சொரூப நாமரூபங்களும் இல்லை. பரந்து விரிந்த ஜகமோ, அதன் ஜீவசொரூபங்களோ, அதை ஆளுகின்ற ஈஸ்வராதிகளோ, இல்லவே இல்லை! தடைகளில்லாத கட்டுக்கடங்காததான, எந்த பிணைப்புகளும் இல்லாமல், ஸ்வதந்திரமாய்; சாஸ்வதமான, ஒரே வஸ்துதான் உண்டு. அந்த காலாதீத ஒரே வஸ்து நாமே; நாமே அது" என்ற நிலைபெற்ற ஞானத்தால் முக்தனவாய்!

## பாடல் 55

இல்லையென இயம்பிடும் பொருளும் இன்றி;
இங்கு உள்ளது என இயம்பிடும் பொருளும் இன்றி;
சொல்லிடும் சொற் பொருளோர் அணுவும் இன்றி;
"சும்மாவே இருந்து மஹா மௌனியாகி";
அல்லல் இல்லா அகண்ட பரம ஆனந்தம் மேவி;
அநாதி பவ துக்கங்கள் அனைத்தும் தீர்ந்து;
கல்லெனவே திடமான பரஞானத்தால்;
கற்பனையோர் அணுவும் இல்லாத முக்தி சார்வாய்!



**கருத்து** ஓ எம் செல்வமே!

அந்தகாவாந்த ஒன்றை, உண்மை எனவும் சொல்ல முடியாது. அது இல்லை எனவும் சொல்ல முடியாது! அப்படி ஏதேனும் சொன்னால் "அதை குற்றப் படுத்தியதாகும்". சொல்லி விளக்கக் கூடிய எந்தப் பொருளும் இல்லாததால், "மஹா மௌனியாகி, சும்மாவே இருந்து" துன்பமே இல்லாத அகண்ட பரம ஆனந்த சொரூபமாகவே இருந்து கொண்டு, அசையாத அசைக்காத "நிருங்கல்வாகவே" இருந்து கொண்டு குற்பனை இல்லாத, பராசொரூப ஸ்திதி ஆகுவாயாக! அங்கு ஆதி, அனாதி, பவ துக்கங்கள், எதுவும் இல்லவே இல்லை.

**பாடல் 56**

சந்ததம் நாம் பரப்பிரம்ம சொரூபமன்றி;
சற்றேனும் "சம்சாரி இல்லை யென்று";
இந்த விதம் அறிவுற்று ஜலத்தில் சேர்ந்து அங்கு;
ஏகரஸ மாகின்ற உப்பைப் போல;
அந்தமில்லா அகண்ட பரப்பிரம்மத்தின் கண்;
ஐக்கியமே அடைந்த மனோ விருத்திதானே;
(எம்) மைந்தா! "அகண்டாகார விருத்தி என்று"
மாசற்ற ஞானிகளால் மதிக்கவாகும்!

**கருத்து** எம் ஞானச் செல்வமே!

எந்த வினாடியும் நாம் பரப்பிரம்ம சொரூபமே தவிர, "சற்றேனும் சம்சாரி அல்ல" என்றும், அந்த உணர்வானது, ஜலத்தில் கரைந்து மயமாகி இருக்கும், "உப்பைப் போல" ஆகி, ஆதி அந்தம் இல்லாத, அந்த அகண்ட பிரம்மானந்த சமுத்திரத்தில், கரைந்து மயமாகி விட வேண்டும்! இப்படி மனமானது, எந்த விதஎண்ண விருத்தியும் இல்லாமல்; அகண்டானந்தத்தில் கரைந்து கலந்து விடுவதே; "அகண்டாகார விருத்தி" என ஸ்வய அனுபவ ஞானிகளின் அனுபவ வசனமாகும்!



## பாடல் 57 உ

தேக முதல் (அனைத்தும்) நாம் என்றால் "துவைதவிருத்தி!
திகழ் சாட்சி நாம் என்றால் "சாட்சிவிருத்தி!
ஏக(பரா)பரம் நாம் என்றால் "அகண்ட விருத்தி!
இம்மூன்று விருத்திகளில் இரண்டைத் தள்ளி;
ஆரும் அகண்டாகார விருத்தி தன்னை;
அநவரதமும், ஆதரவாய் அப்யாசித்து;
சோகம் கொடுக்கும் சித்த விகற்பங்கள் தீர்ந்து;
(குற்றங்கள்)
சொன்ன அகண்டைக ரஸ சொரூபமாவாய்!
எம் தவசீலா!

### கருத்து

இப்பாடல் மிக முக்கியமானது இதில்
துவைத விருத்தி என்றும், சாட்சி விருத்தி என்றும், அகண்ட விருத்தி
என்றும் மூன்றைக் குறிப்பிடுகிறார். ஓர் சிறிய விளக்கம்!

1. தூலவிருத்தி:— மனித இனத்தையும், அதன் புண்ணிய பாவ இயக்கங்களையும், மனோ வடிவில் இருந்து கொண்டு, பாரபட்ச தோஷமில்லாமல், உலகியலில் ஒழுங்காக நடைபெறுவது தூலவிருத்தியாகும்!

2. சாட்சி விருத்தி:— நடப்பன, ஊர்வன, நீந்துவன, பறப்பன ஆகிய நால்வகை வர்ணங்களையும், அவரவர் நிலை கண்டு பாரபட்ச தோஷமில்லாமல், மனம் புகாமல் அறிவு சொரூபமாக (இறை சொரூபமாக) இருந்து எதிலும் ஒட்டாமல், சாட்சி சைதன்யமாக இருப்பது, சாட்சி விருத்தியாகும்!

3. அகண்ட விருத்தி:— அண்ட ரண்ட பிரம்மாண்டங்களையும், மரம், செடி கொடி புல் பூண்டுகளையும், அனைத்து உயிரினங்களையும், இறை சொரூப அறிவும், சாட்சி சைதன்யமாக மாறி, ஒன்றிலும் ஒட்டாமல், "ஆனந்த சொரூபமாகவே" இருந்து கொண்டு, ஆதி, அந்த, அனாதி, பவதுக்கங்கள், எவையும் இன்றி, "நாம் அதுவாக இருக்கிறோம்" என்ற ஓர் தற்போத உணர்வோடு அனைத்திற்கும் சாட்சி சைதன்யமாக இருப்பது அகண்ட விருத்தியாகும்!
(இது சர்வசாட்சியாகும்)

எம் அன்பருவே!
உன் சுய அனுபவத்தால், மேலே கூறிய இரண்டு விருத்திகளையும், உனக்குள்ளாகவே ஆக்கி அடக்கி, மூன்றாவது கூறிய, அகண்ட விருத்தியில் மட்டும் இருக்கப் பயிலுவாயாக! ஓர் முக்கியம்:- அகண்ட விருத்தியில் சர்வசதா இருப்பது மஹா கடினம். இறை சொரூபமாகிய சாட்சி விருத்தியில் இருக்கலாம். ஆனால் தூலவிருத்தியில் மட்டும் போகவே கூடாது. கவனம் தேவை!

—— X —— X —— X —— X ——



## பாடல் 58

சர்வமஹா மந்திரமும் உபதேசிப்போர்,
சாமான்ய குருவெனவே சாற்றலாகும்!
இருமையில்லா பரப்பிரம்மம் நீயேயென்று,
இணையற்ற உபதேசம் செய்கின்றோனே;
பெருமைமிகும் ஸத்குருவென் றுரைக்கலாகும்!
பின் வெகுவாய் பேசுவதால் வெறும் வேறென்று?
அரியபரம் நீயென் போன் ஆசானவான்.
அகம்பிரம்மம் எனஅறிவோன் மாணவனாவான்!

## கருத்து

ஓம் ஐயனே!

இவ்வுலகில் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் கோடானுகோடிமந்திரங்கள் உண்டு. அப்படி அந்தமந்திரங்களை உபதேசிக்கும் குருமார்கள் "சாமான்ய குரு ஆகும்"! இருமையில்லாத அந்த காலாதீத ஒன்றே நீ என்று அனுபவ பூர்வமாக உரைத்து உணர்த்துபவரே "ஸத்குருஆகும்!

## பாடல் 59

ஸத்குருவாக்கை ஏற்றுக்கொண்டு
நாமே அதுஎன உணர்வு பெற்றவனே ஸத்சீடன்.

பொருந்தி நிதம் செய்கின்ற "சிரவணத்தால்;
புகலும் "அஸம்பாவனை"தான் முன்பு நீங்கும்!
வருந்தி நிதம் செய்கின்ற "மனனம்" தன்னால்;
வாளாவாம் "சம்சய பாவனையும்" நீங்கும்!
(விரும்பி) விரிந்து நிதம் செய்கின்ற "நிதித்யாசத்தால்;
(உன்) "விபரீத பாவனையும்" நீங்கும் போது;
நிரந்தரமான பரப்பிரம்ம சாட்சாத்காரம்;
நிச்சலமாய் தன் மனதில் நிகழுமன்றே!

## கருத்து

அன்பு செல்வமே! அனைத்தும் ஒன்றே என்று "பொருந்தி" செய்கின்ற "சிரவணத்தால், பேதபாவனையான அஸம்பாவிதம் நீங்கும்! பொருந்தியதை அதிசிரத்தையுடன் கடின உழைப்புடன், "வருந்தி" செய்கின்ற "மனனத்தினால்", வீணான "சந்தேக விபரீத" பாவனை அவஸ்யம் நீங்கும்! அனைத்தையும் ஒன்றெனப் பொருத்தியும், அவைகளை சிரத்தையுடன் வருந்தி ஏற்றும்; செய்கின்ற இவ் வப்யாசங்களை, ஊசிநாட்டமிடமில்லாமல் அந்த ஒன்றே



உ

(௪௩)

நிறைந்திருக்கிறதென்ற, "பரந்து விரிந்த"
உணர்வு பூர்வமான, அனுபவ நிதித்யாசத்தால்"
விகார, விதை, விசித்திர, விவகார குண தோஷ
பாவனையும் முழுமையாக நீங்கும்போது, நிரந்தர
மாயும், சாஸ்வதமாயும், சத்தியமாயும், நித்திய
மாயும், நிச்சலமான பரப்பிரம்ம சாட்சாத்கா
ரம் உன்னை ஆட்படுத்தி, "அதுவே நாம் நாமே அது", என
ஆகிவிடுவாய் இது சத்தியம்!

## பாடல் 60

ஸ்வயம் அதுவாம் "தத் த்வம் அஸி" என்னும் வாக்கியம்;
சொல்லும் "உபதேச" மஹா வாக்கியமாகும்!
இயலும் "அகம் பிரம்மாஸ்மி" என்னும் வாக்கியம்;
இலகும் (ஸ்வய) "அனுபூதி" மஹா வாக்கியமாகும்!
மயல் மருவா "பிரக்ஞானம் பிரம்மம்" வாக்கியம்;
"மனனத்தின்" அப்யாச வாக்கியமாகும்!
"அயமாத்மா பிரம்மம்" என்ற அறையும் வாக்கியம்;
அவைக்கெல்லாம் "சம்மதமாம்" வாக்கியமாமே!!!

**கருத்து:** ஞான புதல்வனே!

இப்பாடலை வரிசையாக கவனி!

1. காலாதீதமான அந்த பர சொரூபமே, நீயே ஆன ஸ்வயம் ஜோதியாக அதுவாகவே இருக்கிறாய் என்பதை, "தத் த்வம் அஸி" என்ற "அதுவாகவே நீ உள்ளாய்" என்றும்; (இதுவே உபதேசமாகும்)
2. அதன் வழி "அகம் பிரம்மம், பிரம்மம் அகம்" (நானே அது அதுவே நான்) என்ற நிலையில், மந்திர பூர்வமாக புகட்டும் நிலையிலும், அனுபவம் கொடுக்கும் நிலையிலும், "அகம் பிரம்மாஸ்மி" என்றும்; (சிரவணம்)
3. அங்கு மயக்கம், கலக்கம், பயம் அற்ற நிலையில், சர்வசதா மனனம் ஆகும் நிலையில், ஆத்ம பிரக்ஞையோடு இரு என்றும், பிரம்ம பிரக்ஞையோடு இரு என்றும், உடல் உலக நாம, ரூப, பிரக்ஞையோடு இராதே என்றும்; வலியுறுத்தும் நிலையில், தளர்ச்சியற்ற நிலையில் "பிரக்ஞானம் பிரம்மம்" என்றும்; (மனனம்)



நிதித்யாசனமாக,

4. ஆத்ம ஞான சபைக்கு சம்மதமாக, பூரணத்வம் பெற்று "யாம் அதுவாகவே இருக்கிறோம்" என்ற நிலையில், "அயமான்மா பிரம்மம்", என அனைத்து முமுட்சுக்களும், சம்மதிக்கும் நிலையிலும், இப்படி வரிசைக்கிரமமாக அமைந்திருக்கிறது!.

அதாவது?

ஓர் ஸத்குரு தம் ஸத்சிஷ்யனை பார்த்து குழந்தாய்! "அதுவாகவே நீ இருக்கிறாய்" என்றார். அதன் மார்க்கம் என்ன, என்றான் சிஷ்யன். உடனே குரு "அகம் பிரம்மம் பிரம்மம் அகம்" என்று, அவன் சிரவண நிலையில் சொன்னார். இந்த நிலை பெற, யாம் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். அதற்கு குரு முதலில் தெய்வ பிரக்ஞையோடு இரு; பின் ஆத்மபிரக்ஞையோடு இரு; பின் பிரம்மப் பிரக்ஞையோடு இரு; ஆனால்? "உடல், உலக, நாம, ரூப, குண, தோஷ பிரக்ஞையோடு இராதே" என்றார். உடல், உலக, நாம, ரூப, குண, தோஷங்களை விட்டாலே, உன் சாதனை முடிவாகிறது, என உணர்வாயாக. மேலே சொன்னவைகளை விட்டால், சாட்சிபாவனையாகிய தெய்வ நிலை பெறுவாய், அனைத்திலும் நாம் நிறைந்திருக்கிறோம், என்ற அகண்டபாவனையாகிய, சர்வசாட்சித்தன்மை பெற்று விட்டால், சாதனை முற்றுப் பெற்று, "அயமான்மாபிரம்மம்", அதாவது "யாம் அதுவாகவே இருக்கிறோம்," என்ற முமுட்சுக்கள் சம்மதிக்கப்பட்ட பரிபூரணத்வம் பெற்றுவிடுவாய். இது ஸத்தியம்! என்றார் ஸ்ரீஸத்குரு!!!

பாடல் 61

முக்தியுற வேண்டுமென இச்சை செய்தால்;
(அது) மோட்சத்தின் பொருட்டே தன் உயிர் தரித்தல்!
பக்தியுடன் நன்றாக விசாரம் செய்தால்;
(அது) பாங்காக பரப்பிரம்ம ஞானம் எய்தல்!
இத்துவைத ஜகத்தையெல்லாம் அற மறத்தல்;
இத்தனையும் பரமார்த்த தசையில் பொய்யே!
அத்வைத பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
"அதுவே நீ" அணுவும் இதில் ஐயமில்லை!



**கருத்து** அதீதமானவனே! முக்தி அடைய வேண்டும் என்றால், பதமுக்தி வேண்டாம். பரமுக்தியாகிய, ஜீவன் முக்திக்காக, பிராணனை வைத்து சாதனை பண்ணும் பக்தி வேண்டுமென்றால், ஸ்ரீ பகவானிடம், உடல் உவகை, (தர்மாவை) [?] விட்டுவிட்டு பரமுக்தியாகிய, ஜீவன் முக்திக்கு சாதனை பண்ணும் கண்ணில் காணக்கூடிய இந்த ஜகம் பொய்யே என உணர்ந்து, துவைத பாவனையை விடுத்து, அத்வைத பாவனை பண்ணும். அந்த ஒன்றே ஸத்தியம் "அதுவே நீ, நீயே அது" என உன்னை முடித்துக் கொள்!

**பாடல் 62**

மிகமிகவும் சப்தத்தை விரும்பிச் சொன்னால்;
மிகவாக்கின் துக்கத்திற்கு ஏதுவாகும்!
புகல்பலவாம் சப்தத்தை பரிந்து கேட்டால்;
பொருந்தும் மனோமயக்கத்திற்கு ஏதுவாகும்!
வெகுவிதமாம் அர்த்தத்தை விசாரம் செய்தால்;
விதவிதமான துக்கத்திற்கு ஏதுவாகும்!
தருமகனே! ஆதலினால் அனைத்தும் தள்ளி;
சற்பிரம்மம் [?], தானெனவே, நிதித்யாசிப்பாய்!

**கருத்து** எம் ஆன்ம உணர்வே! நாம் ஒருவர்க்கு, நாம் உணர்ந்ததை சொல்லி, திருத்தி விடலாம் என எண்ணி பேசுவது, "வாக்கு விரயமே"! அனேகர் சொல்லும், வாசகங்களை விரும்பி விரும்பி கேட்பதனால், அர்த்த பாவனை மாறி அனர்த்தமாக வடிவெடுத்து, "மனோ மருட்சி தான்" உண்டாகும்! ஒவ்வொரு வார்த்தைக்கும், விரிவுரையாகவும், விளக்கவுரையாகவும், பற்பல கருத்துக்களோடு, நோக்கினால் சந்தேகம், பயம், கலக்கம் துக்கம், தான் உண்டாகும்! வார்த்தைகளோ, காட்சிகளோ, நிகழ்ச்சிகளோ, இவைகளின் மூலகாரணம் [?], அந்த காலாதீத ஒன்றே "அது நாமே, நாமே அது", என ஒடுங்கி இருந்தால் சுகம் பெறுவாய்!



**பாடல் 63**

புரையறவே உணர்பொருளை உணர்ந்தபின்னர்;
பூரணமாம் அப்பொருளின் சாட்சாத்காரம்;
"ம்ருயிடநிதித்யாசனம்" செய்வதல்லால்
மற்றினையும் நூல் வழியே செல்ல வேண்டாம்;
தெரிபொருளை நூல்வழியால் அறிந்தபின்னர்;
(அதை) தெளிவித்த "நூல்" மொழியை மீண்டும் சொல்லல்;
உரைதரும், தன் வாக்குக்கு துக்கம் என்றே;
உபநிஷத வசனமெல்லாம் உரைக்குதென்றே!!

**கருத்து** உத்தமோத்தமா! பற்பல வேதாந்த சாஸ்திரங்களை கற்றும்; முடிவில் பிறவாநிலையாகிய, "சுத்த அத்வைத" நிலையும், அதன் அனுபவத்தையும், "உணர்ந்தபின்னர்," "வேறெந்த நூலையும் தொடாதே"; நீ உணரவேண்டியதை உணர்ந்துவிட்டாய். மேலும் இதரபடிப்பு இருக்குமானால், "எண்ணமும், சொல்லும், மாறுபடும்;" அதனால் துக்கமும், கலக்கமும், உண்டாகும். என்று ஸ்ரீமஹான்களின் வாக்கும், உபநிஷத்தும் கூறுகின்றன!

**பாடல் 64** ——→✕ ——→✕ ——→✕ ——→✕ ——

ஆதலினால் தானியத்தை அடைந்தபின்னர்;
அங்குள்ள பதர்களை எறிவது போலவே;
வேதம் அற உணர்பொருளை உணர்ந்த பின்னர்;
இங்குற்ற (வேறு) நூலையெல்லாம் எறியவேண்டும்!
மாறுபட்ட நூலையெல்லாம் எறிந்த பின்னர்;
வருந்தியுமே, அநவரதம், இடைவிடாமல்;
போதமுற சாதகமாய் நிதித்யாசத்தை;
புரியுடனே பூரணமாய் பழகல் வேண்டும்!

**கருத்து** எம்கண்ணின் கண்மணியே! உமியைக் கழற்றி, தானியத்தை எடுத்துக்கொண்டு, உமியைதூர எறிந்து விடுவது போல்; அனுபவத்திற்காக, வேதாவேதம், அனைத்தையும் கற்றும்; அபேத நிலையாகிய அத்வைதம் என்ற மணியைபெற்றுக் கொண்டாய்!



பின்பு பதமாகிய, (உபயோகிய) வேதநூல் அனைத்தையும் தூர எறிந்து விடு. பின்னர் அவேத நூலாகிய, அத்வைதத்தை சுவைத்து, சுவைத்து, அதன் மயம் ஆகும் பரியந்தம், சிரத்தையுடன், உன் அப்யாசத்தை தொடர்ந்து செய். அந்த அத்வைத பழக்கத்தை தவிர, வேறு எதையும் தொடாதே! நோக்காதே! கேட்காதே!

## பாடல் 65

நினக்கயல் போல் தோன்றிய இந்த நாமரூபம்,
நிகிலமுமே நீயே அல்லாது வேறேயன்று!
தனக்கயல்போல் கனவில் உணர் நாமரூபம்,
நாம் அல்லாது, சோதிக்கின் வேறே உண்டோ?
எமக்கயல் போல் காண்படுதல்லாம் யாமே என்றும்,
யாம்தானே ஏகபரப்பிரம்மமென்றும்,
(உன்) மனக்கவலையாவையுமே தீரும் மட்டும்,
மறவாமல் எப்போதும் நிதித்யாசிப்பாய்!

**கருத்து:** ஞான சூரியனே!

உன் கண்ணில் காணக்கூடிய, ஜடகடபடாதிகளாகிய, அனைத்து நாமரூபங்களும், உன்னையல்லாது, வேறு இல்லவே இல்லை! உன் கனவில் காணும், நாமரூபம், உனக்குள் அல்லாது, வேறு வெளியில் இல்லையல்லவா? அவை அனைத்தும் உன்னுடையதே, உன்னுள் உள்ளதே! அதைப்போல அனைத்து நாமரூப ஜகத்தும், நாமே என்று "உன் மனக்கவலை தீரும் மட்டும்," ஸ்வய அனுபவத்தை கூட்டுவாயாக!

## பாடல் 66

இருக்கின்ற(து), அசைகின்ற(து), இன்பமென்றும்,
சொல்லுகின்ற, நாமமொடு ரூபமென்றும்,
வாதம் செய்யும் இந்த ஐந்து பஞ்சகத்தில்,
"தாங்கிய" முன் மூன்றம்சம், "பரத்தின் ரூபம்"!
சுருக்கமுறும் இரண்டம்சம், ஜகத்தின் ரூபம்!
"சொற்பொருளாம்" இவ்வம்சம் இரண்டும் தள்ளி,
"உன்னோடு ஒன்றிய", ஸத்தும், சித்தும், ஆனந்தமாய், மிஞ்சும்
அந்த பரசொரூபமே நாம் எனவே நிச்சயிப்பாய்!





**கருத்து** எம் ஆத்மானந்தமே!

பொதுவாக "ஸத் ஸித் ஆனந்தம்"! என மூன்றாக சொன்னார்கள் நம் அனுபவ ஞானிகள். அவைகள் எப்படி என்றால் "ஸத்தாகவே இருக்கிறது, அந்த ஸத் ஸித் சொரூபமாக" இருந்து அசைகிறது, அந்த ஸித் சொரூபம் அசைவதால் "ஆனந்தம்" உண்டாகிறது.

இதன் உட்கருத்து யாதெனில், எந்த ஒரு வஸ்துவை எடுத்தாலும், அது "ஸத்தாகவே" (இருப்புள்ளதாகவே) இருக்கிறது! அதே ஸத், ஸித்தாக மாறும் போது அந்த ஸத்தின் அசைவே ஸித் ஆகின்றது! அதாவது "ஒன்று மற்றொன்றாக" மாறுகிறது. இந்த மாற்றமே ஸித். அந்த மாற்றமே ஸித் என்றும் அதன் அசைவு "சித்தத்தின்" அசைவு என்றும் பேசப்படுகிறது. அதாவது? அந்த ஸத் சொரூபம் "மற்றொன்றாக மாறும் போது ஸித் என்ற சொரூபத்தில் மாற்றமும், சித்தம் என்ற தோற்றத்தில் எண்ணமாகிய கற்பனையையும் தனக்குத்தானே உண்டாக்கிக் கொள்கிறது"!

"இந்த தோற்றமும் மாற்றமும் எண்ணமும் ஏககாலத்தில் உண்டாவதால் அந்த அசைவே ஆனந்தமாகி விடுகின்றது!

ஆகவே எந்த ஓர் தோற்றமும் "ஸத் சொரூபமே"!

அதன் மாற்றமும் அதன் எண்ணமும் ஸித் சொரூபமே!!

அதன் அசைவின் எண்ணமே ஆனந்த சொரூபம்!!!

ஆக இந்த மூன்றுமே "பர சொரூபஸ்திதி" ஆகும்!

மேலே கூறிய ஸத்திற்கு "நாமரூபம்" கொடுப்பதும், மற்றொன்றின் சித்தத்தின் அசைவின் நிமித்தம் "நாமரூபம்" கொடுப்பதும், அந்த அசைவின் நிமித்தம் தோற்றும் ஆனந்தத்திற்கு நாமரூபம் கொடுப்பதும், மாயையில் தோன்றிய "மாயாமனம்" ஆகும்! தோற்றம் மாற்றம் அதன் அசைவை "மாற்றி, மாற்றி, மாற்றி" இந்த மனம் புத்தியாலும் சித்தத்தாலும் உண்டாக்கும் நாமரூபம் இந்த மாற்றத்திலே "ஏமாற்றம்" அடைந்து நாமரூபமே பிறப்பிறப்பென்று பேசப்படுகிறது!



ஆகவே இப்பாடலின், உட் கருத்து யாதெனில்?
இருப்பதும், அசைவதும், ஆனந்தம் தோற்றுவதும்
என்றென்றும், (ஸத்) (ஸித்)(சித்தம்) (ஆனந்தம்)!
"பிரம்மானந்த பர சொரூப ஸ்திதி" என ஏற்றுக்கொண்டு, நாமரூபத்தில் தோன்றும், குண தோஷங்களை மட்டும், இல்லையென்று தள்ளிவிட்டால் நீ எந்த நிலையிலும், ஸத்திய சொரூபமாகவே இருப்பாய்.
"முன் மூன்றை ஏற்றுக் கொள்! பின் இரண்டை தள்ளிவிடு!"

## பாடல் 67

துவைதம் என்றும், துவைதமொடு அத்வைதமென்றும்;
தூயபரம அத்வைத மதமிதென்றும்.
இவ்விதமென்றும்; அவ்விதமென்றும்; இல்லை உண்டென்றும்;
இவை முதலாம், ஆங்காங்கே சொல்கின்ற,
விதவிதமாக சொல்லி, வாதம் செய்வதெல்லாம்,
விசாரித்தால், மாசுமருவற்ற பரப்பிரம்மம் தானும்!
சர்வ வியாபகம் பரப்பிரம்மம் அதுநானென்று;
பின்னால் இல்லாது பாவித்து பரமே ஆவாய்!!!

**கருத்து** ஆனந்தசொரூபமே!

எண்ணம், சொல், செயலாகவும், கோடானு கோடி நாமரூபமாகவும், துவைதம் என்றும், அத்வைதம் என்றும், உண்டென்றும், இல்லையென்றும், "வாதம் செய்யப்பட்ட" விவகாரஸத்தியமாயிருக்கும் அனைத்தும், உண்மையில் உணர்ந்தால், அது அந்தகாலாதீத ஒன்றான, பரப்பிரம்ம சொரூபமே, என உணர்ந்து, "அது நானே, நானே அது" என்ற பர பாவனையால், பின்ன பாவனையை ஒழித்து, ஆத்மானந்த பாவனையில் நிலைப்பாயாக.

## பாடல் 68

அகண்ட பரிபூரணமாம் பிரம்மம் நானே,
அறிவற்றோர்க்கு உலகெனவே தோற்றினாலும்;
புகன்ற பலவிதமான உலகம் தானே,
பூரணமாம் அறிஞர்க்கு பரமாய்த் தோற்றும்!





நிகழ்ந்நெதிரே இருக்கின்ற ரட்சுநானே;
தெரிவற்றோர்க்கு அரவெனவே தோற்றிடினும்;
நிகழ்ந்தரவே தெரிவுற்றோர்க்கு ரட்சுவாகும்;
நிகழ்கின்ற நீதியினைக் கண்டோமன்றே!!!

கருத்து: எமதன்பின்வடிவமே!

ஸத், ஸித், ஆனந்தசொரூபமான, அநந்தகாலாதீத ஒன்றே, அஞ்ஞானிகளுக்கு அதாவது அறிவற்றபுத்திசாலிகளுக்கு, அதாவது மனோமயகற்பனைவாசிகளுக்கு, உலகம், உடல், பொருள், நாமரூபமாகத் தோற்றும். அனுபவஞானிகளுக்கு, தமது யதார்த்தசொரூபமான, பரமாகத்தோற்றும். எப்படியென்றால், கவனஹீனர்களுக்கு, ஓர் கயிறு சர்ப்பமாக, தோற்றுவது போல் தோற்றும்.

பாடல் 69

நிச்சலமாய் உணர்வுற்று நிறைந்துநிற்கும்;
நிலையதுவே "கைவல்ய மோட்சமாகும்!
துச்சம் (துன்பம்) இல்லா அந்நிலை தொடர்ந்தோர் மீண்டும்;
துன்பமுறார்! பேதம் அடையார்! சுகமே சார்வர்!
(அவர்) அனைத்து செயலும் செய்துமுடிந்தவராவர்!
எப்போதும் ஏகபரவடிவாய் நிற்பர்!
அந்தசுகத்தைபெற்ற, அன்னோர்க்கு இங்கு;
பயம், பவம், விகாரம், விவகாரம், ஒன்றுமில்லை!

கருத்து: எம் தவசீலா!

அசைவற்ற அந்த மௌன, மோனநிலை பெறுவதுவே, பிறவாநிலையாகிய, கைவல்யமாகும். துன்பம் இல்லாத அந்த நிலையை, அனுபவித்தோர்க்கு, இந்த கற்பனையான, இல்லாத உலகில், எந்த காரியமும் இல்லை! அவரே இங்கு இந்த உடல் எடுத்த, காரியத்தை செய்துமுடித்துவிட்டார், என்று சொல்ல வேண்டும். அவர் எந்த வினையும், ஏகபர சொரூப ஸ்திதியிலேயே இருப்பர். அவரை இந்த இல்லாத உலகின் தர்மாதர்மமான பயம், பவம், கலக்கம், விகாரம், விவகாரம் எதுவும் செய்யமுடியாது!



**பாடல் 70**

தன்சொரூப நிலை மருவாது அலைவோர்க்கு,
தளர்வு தரும் பவபந்தம் ஒழிவதெங்கண்?
என் செய்யினும் (தன்) சொரூபநிலை இசையாதோர்க்கு;
எவ்வழியும் பவபந்தம் அழியாது!
சஞ்சலமில்லா, பாவனையே செய்வோருக்கு;
அசையும் மனதின் குற்றமெல்லாம் ஒழிவதாலே,
அஞ்ஞானமான, "ஆவரணம், விட்சேபங்கள்";
அனைத்தும் இல்லா சொரூபநிலை தானே சித்திக்கும்!

**கருத்து** எம்மாணிக்கமே!

அபரிமிதமான சக்திகளை கொண்டது, பதிறுகலைகளில் பதினைந்து, அனைத்தும் கற்றாலும், ஓர் பிரயோஜனமும் இல்லை. "தன்னை அறியும் அறிவாகிய, இந்த ஆத்மஞானம் ஒன்றை உற்று, அனுபவம் பெறவில்லையானால், பயம், பவம், கவலை, சஞ்சலம், தண்டிப்பாக நீங்காது. அவை மேலும், மேலும், பிறவிகளைக் கொடுக்கும். சலனமில்லாத, சுகசொருபநிலை பெற்று விட்டால், "ஆவரண மயக்கமும்", "விட்சேப கலக்கமும்" இல்லாது ஒழியும். தாம் தானாக இருக்கும் பிரம்மானந்த நிலை பெறுவான்.

**பாடல் 71**

ஸத்குருவின் சந்நிதியில் ஓர்ந்த வண்ணம்;
ஸாதுக்கள் சகவாசம் செய்து அங்கங்கே;
நிர்க்குணமாம் பரப்பிரம்ம சொரூபம்தானே;
"அனைவருமாம், அதுவேநாம்", "அதுவே உண்மை"!
அட்சரமாம் பிரம்மமதே வேதாந்தங்கள்;
அனைத்திற்கும் பொருளாகும் என்றிவ்வண்ணம்.
தத்த "பரநிர்ணயமே" திடமாய் செய்தல்;
(உன்) தளர்வையெல்லாம் தவிர்க்கின்ற விசாரமாமே!

**கருத்து** ஞானச் சுடரே! உன் ஸத்குருவாயிலாக, கேட்ட உபதேச கருத்துக்களை, இடைவிடாமல் ஸ்மரித்தும்; உடன் உள்ள சகசாதகர்கள் (உன்) கலந்துரையாடியும்;



தைவதாரைபோல், "அதுவே நாம் நாமே அது" என்றும் வழிவழி வழியும், ஒளிவழி வழியும், உள்ள வேத வேதாந்த சாரம் சங்கரும், இதுவே என, சந்தேகம் இல்லாமல், உறுதி நிச்சயம் செய்வதுவே, உன் மனத் தளர்வையும், மன அசைவையும், ஒழிக்கின்ற ஔஷதமாகும்! அதுவே விசாரணையாகும்!

**பாடல் 72**

சுருதிஎன்றும், ஸ்மிருதியென்றும், நூல்கள் என்றும்,
சூட்சுமமான வேதாந்த நூல்கள் என்றும்,
கருதும் இதிகாசமென்றும், புராணமென்றும்,
காவியம், ஓதவிய ஆகமங்கள் என்றும்,
ஒருமையென்றும், இருமையென்றும், ஒன்றுமில்லை!
உள்ளதெல்லாம் அகண்டபரப்பிரம்மம் தானும்.
பரவிய அப்பரப் பிரம்மம் நாமே என்று
பாவித்து, பாவித்து, பரமே ஆவாய்!

**கருத்து:** வேதாந்த நாயகனே!
புராண இதிகாசமென்றும், வேத வேதாந்தமென்றும், சூட்சுமமான நூல்கள் என்றும், பலன் கருதிசெய்கின்ற, எம்மைய வேத மந்திரங்கள் என்றும், ஆகம விதிகள் என்றும், ஒன்றென்றும் பற்பலவென்றும் "வேதாதி வேதம்" இல்லை. ஸத்தியமாய் உள்ளது காலாதீத ஒன்றே அது நாமே என, பாவித்து பாவித்து பரம் ஆகுவாயாக!

**பாடல் 73**

சித்தம் அல்லால் பிரபஞ்சம் என்றுமில்லை,
(உன்) சித்தம் தான் பிரபஞ்சம் எனவே தோற்றும்!
சித்தம் அல்லால் சம்சாரம் என்றுமில்லை,
(உன்) சித்தம் தான் சம்சாரம் எனவே தோற்றும்!
சித்தமதை சோதித்தால் ஸித்தே ஆகும்!
ஸித்தான சித்தமதே சிவமாய் நிற்கும்.
சித்தம் இல்லாத சின்மயமாம் சிவம் நாம் என்றே,
சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்!



**கருத்து:** செல்வமழலையே!

உன் சித்தம் என்ற எண்ணம் அல்லால், பிரபஞ்சம் என்பது இல்லை! உன் சித்தம் என்ற எண்ணம் அல்லால், சம்சாரம் என்பதும் இல்லை! ஆனால் அந்த ஸத்தான ஸித் சொரூபமே, சித்தம் என்ற எண்ண வடிவமாகிறது. அதே சித்தத்தின் எண்ணத்தை, அகிலம் அனைத்தும் ஸத்தான ஸித்தே என்ற பாவனை செய்தால், அந்த ஸின்மயமான, சிவம் நாம் என ஆவாய். சர்வ சதா சித்தத்தின் சிந்தனை, சிவம், என சிந்தித்து, சிந்தித்து, சிவமென ஆவாய்.

**பாடல் 74**

மனதையல்லால் ஜகமுதலோர் அணுவும் இல்லை!
மனதுவே ஜகமுதவாய் தோற்றவாகும்!
சொன்னமனது சங்கல்ப வடிவேயாகும்.
சோதிக்கின் சங்கல்பம் ஸித்தாய் தீரும்.
மனதுடைய சங்கல்பம் ஸித்தாய் தீர்ந்தால்,
மனதுதான் ஸின்மயமாம் சிவமே ஆகும்.
ஜனனமில்லா ஸின்மயமாம் "சிவம் நாம்" என்றே,
சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்!

**கருத்து:** எம் ஆத்மசொரூபமே!

மனதின் கற்பனையாகிய, எண்ணம் இல்லையானால், அந்த எண்ணத்தால் தோற்றும், இந்த உலகம் இல்லவே இல்லை. இந்த மனதிற்கு வடிவம் எது என்றால், "கற்பனையே மனதின் சொரூபம்". இந்த கற்பனை எப்படி உண்டாயிற்று என்றால், "ஸித்தின் அசைவே கற்பனை"! ஸித்தின் அசைவே மனம் என்றால், ஸித்தை அல்லாமல், ஸங்கல்பம் என்ற மனமே இல்லை! அப்படியானால் உண்மையே ஸித் சொரூபம் ஆகும். அப்படியானால் ஜனனமரணம் இல்லாத, ஸின்மய ஆன்ம சொரூபமே, சுத்த சிவமாகும். அந்த சுத்த சிவம், "அது நாமே, நாமே அது", என்ற பாவனையில் சிந்தித்து சிந்தித்து சிவம் என ஆகுவாயாக!

உ



## பாடல் 75

54

எம் அறிவு சொரூபமே!

ஸின்மயமாம் எம்மிடையே மனது உதித்தும்,
ஸின்மயமாம் எம்மிடையே மனது இருந்தும்,
ஸின்மயமாம் எம்மிடையே (மனம்) அடங்கவாவே,
ஸின்மயமாம் எம்மையல்லால் மனதே இல்லை!
ஸின்மயமாம் எம்மையல்லால் மனதில்லாததால்,
ஸின்மயமாம் எம்மையல்லால் எவையும் இல்லை!
ஸின்மயமாம் நாம் என்றும், "சிவமே என்று",
சிந்தித்து சிந்தித்து "சிவமேயாவாய்!

**கருத்து:** ஆன்ம சொரூபமே!

ஆன்மாவாகிய எம் ஸித் சொரூபத்திலேயே, இந்த மனம் தோன்றியது. ஆன்மாவாகிய எம் ஸித் சொரூபத்திலேயே, இந்த மனம் விளையாடியது. ஆன்மாவாகிய எம் ஸித் சொரூபத்திலேயே, இந்த மனம் மறைந்து மயமாகி விட்டது! அப்படியானால், ஸித் சொரூபமாகிய எம்மையல்லால் கற்பனையான இந்த மனமே இல்லையென்றாகி விட்டது. ஆகவே ஸித் சொரூபமான எம்மையல்லால், இங்கு எதுவுமே இல்லை! எம் ஸித் சொரூபமே சுத்த சிவம் ஆகும். ஆகவே சுத்த சிவம், யாம் என்றே சிந்தித்து, சிந்தித்து, சிவம் ஆவோம்!

## பாடல் 76

ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்,
செயலான ஜகத்தோற்றம் எவையும் இல்லை!
ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்,
செயலான ஜீவேஸ்வரர் யாரும் இல்லை!
ஸின்மயமாம் எம்மையல்லால் ஸங்கல்பத்தின்,
செயலொன்றும் ஒருகாலும் இவவே இல்லை!
ஸின்மயமாம் "நாம் என்றும் சிவமே யென்றும்",
சிந்தித்து, சிந்தித்து, சிவமேயாவாய்!

**கருத்து:** எம் ஞான முத்தே!

ஸித் சொரூபமான எம்மையல்லால், எண்ண வடிவமான ஜகத்தோ, ஜீவர்களோ, ஈஸ்வராதிகளோ,



எவையும் இல்லவே இல்லை. ஸித்சொரூபமான
எம்மையல்லால், எவையும் இல்லாத தன்மை
யாலே, அனைத்தும் எம் சொரூபமான, சிவசொரூ
பமே, எங்கும் வியாபித்திருக்கிறதென,
சிந்தித்து, சிந்தித்து, சிவமே ஆவாய்!

பாடல் 77

ஸின்மயமாம் எம்மிடையே கனவில் கண்ட;
ஜகமுதவாய் எமக்கயலாய் இலாததே போல்;
ஸின்மயமாம் எம்மிடையே நனவில் கண்ட
ஜகமுதவாய் எமக்கயலாய் என்றும் இல்லை!
ஸின்மயமாம் நாம்தானே என்றும் ஒன்றாய்;
செறிந்தகில ஆரணமாய் சிவமாய் நின்றோம்!
ஸின்மயமாய் "நாம் நாமாய்" நின்றோம் என்று;
சிந்தித்து, சிந்தித்து, சிவமாய் (நின்றோம்)! ஆவாய்!

கருத்து: என் மழலையே!

"ஸித்சொரூபமான எம்மிடத்தில், கனவில் கண்டபொருளும், நனவில் காணும் பொருளும், எமக்கு அயலாக என்றுமே இல்லை. ஆகவே அகிலம் அனைத்துமே "யாமே யாமாக நிற்கிறோம்," என்ற பரிபூரண ஸ்வய ஞானத்தால் உணர்ந்து, அந்த சுத்த சிவம் யாமே என்று சிந்தித்து, சிந்தித்து, சிவமேயாவாய்!

பாடல் 78

அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்;
"அதிதிடமான" விவேகத்தால் "ஜனிப்பதாகும்!
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்;
(உன்) "ஆசிரியன் கருணையால்" கிடைப்பதாகும்!
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்;
"அனவரதம் பழக்கத்தால்" தங்குவதாகும்!
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்மஞானம்;
"அகண்ட சிவம் கருணையால்" நிலைப்பதாகும்!



உ

௫௬

**கருத்து:** எம் ஸத்திய சொரூபமே!

"அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம்!" என்ற இந்த ஆத்ம ஞானம், "அதிவிவேகம் உள்ள" உள்ளத்தில் தோன்றும்! இந்த ஆத்ம ஞானம் உன் ஸத்குருவின் கிருபையினால் கிடைக்க முடியும்! இந்த ஆத்ம ஞானம் இடைவிடாத பழக்கத்தால் ஸ்திரப்படும்! இந்த ஆத்ம ஞானம் நம் அகண்ட சிவம் கருணையினால் நாள் நிலைத்து நிற்கும்!

**பாடல் 79**

அகம் பிரம்மம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம், அகம்பிரம்மம், பிரம்மம் அகம், என்ற இந்த,
வசனத்தை சப்தத்தால் உரைப்பதற்கோர்,
"வருத்தமில்லை", ஆதலினால் அசத்தரெல்லாம்,
நிஜவடிவின் பாவனையில் மனது நின்று,
நிச்சலமாய் (ஸ்வய) அனுபவம் நிலைக்கு மட்டும்,
பிசகறவே சர்வமும் பிரம்மமென்றும்,
"பிரம்மமதே நாம் என்றும், நாம் அது வென்றும்,"
அசலமதாம் அகண்டான்ம சொரூபம் தன்னை,
(அசைவற்ற)
அறிவிக்கும் சப்தத்தை உரைக்க வேண்டும்!

**கருத்து:** அனைத்தும் ஒன்றானவனே!

அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம் அகமே எல்லாம், அகம் பிரம்மம், பிரம்மம் அகம்! என்ற இந்த ஸத்திய வசனத்தை இடைவிடாமல் ஸ்மரிப்பதற்கு, "எந்த வருத்தமும் இல்லை, எந்த தடையும் இல்லை"! ஆகவே சாதகர்கள் அனைவரும், இதை எந்த தடையுமின்றி, சிரமமும் இன்றி, தைலதாரை போல் ஸ்மரிக்க வேண்டும். உன் அனுபவம் ஸ்திரமாகும் பரியந்தம், (நாம, ரூப, குணம், மறைந்து அழியும் வரை) "நாம் அது, அதுவே நாம்," என ஸ்மரித்து அதுவாகவே ஆகுவாயாக!

**பாடல் 80**

மாரணமில் (மறைப்பில்லாத) அறிவான பிரம்மம் அல்லால்,
மாயை இல்லை, அவித்தை இல்லை, மற்றொன்றில்லை!
சீரணமில் (கெடாததான) அறிவான பிரம்மம் அல்லால்,
ஜீவன் இல்லை, ஈசன் இல்லை, ஜகத்தும் இல்லை!



பூரணமாம் அறிவான பிரம்மம் அல்லால்,
பொய்யுமில்லை; மெய்யுமில்லை; பிறிதொன்றில்லை!
காரணமாம் அறிவான பிரம்மம் அல்லால்;
காரியமாய் காண்கின்றது எவையுமில்லை!

கருத்து: அறிவுருவே திருவுருவே!

பிரமாணமாக சொல்கிறேம். அறிவோடு இப்படி உணர்வாயாக. மறைப்பில்லாத, அந்தகாவாதீத "ஒன்றாகிய பிரம்மம் அன்றி" மாயையும் இல்லை; அதனால் உண்டான அவித்தையும் இல்லை. அந்த கேடு அடையாத பிரம்மம் அல்லாமல், ஜீவனும், ஈசனும், இல்லை. அந்த பூரணமான பிரம்மம் அல்லாமல், உண்மையோ, பொய்யோ, இல்லை. அனைத்துக்கும் காரணமான அந்த பிரம்மம் அல்லாமல், காரண காரியமாய் காண்கின்றது எவையும் இல்லை. அந்த பூரண பிரம்மம்; "அது நானே, நானே அது," என உணர்வுடன் இருப்பாயாக.

## பாடல் 81

பிரம்மமதே மும்மூர்த்தி எனவும் தோற்றும்!
பிரம்மமதே மூலசிவம் எனவும் தோற்றும்!
பிரம்மமதே ஐம்பூதம் எனவும் தோற்றும்!
பிரம்மமதே அனந்த உலகு எனவும் தோற்றும்!
பிரம்மமதே சராசரமாய் தோற்றவாகும்!
பிரம்மமதே சகலமுமாய் தோற்றவாகும்!
பிரம்மமல்லாத ஒருபொருளும் என்றும் இல்லை!
(உன்) அனுபவமான பொருள் எல்லாம் பிரம்மம்தானே!

கருத்து: ஒளிமயமானவனே!

அந்தகாவாதீத ஒன்றான பரப்பிரம்மமே, விஷ்ணு, பிரம்மா, சிவனும்; அவர்களுக்கு ஆதியான மூலசிவமும்; அதுவே; அதுவே ஐம்பெரும் பூதமாகும்; அதுவே கோடானு கோடி அண்டங்களாகவும், அசைவன, அசையாதன, அனைத்தும் ஆகும்; அதுவே அனைத்து ஜீவ கோடிகளாகவும், அவைகளின் இயக்கமாகவும், அந்த ஒன்றே தோற்றமும் இருப்பு, மாற்றம், மறைவு இவைகளை செய்து கொண்டு, ஒவ்வொன்றிலும் ஒட்டியதைப் போல், விளையாடிக் கொண்டிருக்கிறது. அதுவே நாம், நாமே அது; உணர்வைப் பெருக்கி அருளை ஆருக!



## பாடல் 82

சகலமுமாம் இவை வேறு; நாம் நாம் வேறு;
ஸித்பிரம்மம் வேறு, என்று எண்ணும் பேதபுத்தி;
அகிலமுமே அகண்டபரப்பிரம்மம் என்றும்,
அது தானே நாம் என்றும், நாம் அது என்றும்;
வெகுதிடமான "அகண்டபர நிச்சயத்தால்";
வேற்றுமை இல்லாமல் நீங்குமே யல்லாமல்;
துக்கம் தரும் "கருமவுபாசனைகள் ஒன்றினாலும்";
இயம்பிய இப்பேதமதி எளிதில் நீங்காது!

**கருத்து** எம் ஜோதி சொரூபமே! கண்ணில் தோற்றக்கூடிய, "இவை வேறு" என்றும்; காண்கின்ற "நாம் வேறு" என்றும்; அந்த காலாதீத "அந்த ஒன்று வேறு" என்றும்; தோன்றும் இந்த பேத புத்தியானது "அதுவே நாம், நாமே அது," என்ற "அகண்டாகார விருத்தியினால் தான்" நீங்குமே யல்லாமல், வேறு எந்த கர்ம உபாசனைகளாலும், தெய்வ உபாசனையாலும், போகவே போகாது!

## பாடல் 83

அகம் பிரம்ம நிச்சயமே அகத்தில் உள்ள;
அஞ்ஞான சந்தேகம் அனைத்தும் போக்கும்!
அகம் பிரம்ம நிச்சயமே அகத்தில் உள்ள
அநேகவித விபரீத தோஷம் நீக்கும்!
அகம் பிரம்ம நிச்சயமே ஆன்மாவின் கண்;
அசஞ்சலமாய் அமர்கின்ற சமாதி நல்கும்!
அகம் பிரம்ம நிச்சயமே பசு, பதி, பாச, பந்தங்கள்;
அணுவுமில்லா பிரம்மானந்த ஞானம் நல்கும்!

**கருத்து** எம் ஆத்ம சொரூபமே! "அகம் பிரம்மம், இதம் பிரம்மம் அகமே எல்லாம்," என்ற இந்த பர சொரூப நிச்சயம் ஒன்றே; அறியாமையின் சந்தேகம் போக்கும்! விபரீதமான பேதாபேதம் அனைத்தும் போக்கும்! சலனமில்லாமல் ஆனந்தமாய் ஆன்மாவில், அதுவாக அமர்கின்ற சமாதி நல்கும். பசு, பதி, பாசம், என்ற பரம்பொருளாகிய "பதியே", தமக்குத்தானே ஏற்படுத்திக்கொண்ட "பாசத்தால்," உலகின் நியதியால் ஜீவன் என்ற "பசு ஆனார்" என உணர்த்தி இந்த அகம் பிரம்ம நிச்சயமே, பிரம்மானந்தம் நல்கும்! (நீ பசுவும் அல்ல, அதன் பாசமும் அல்ல, அதன் பதியும் அல்ல! நீயே அது அதுவே நீ என உணர்த்தும்!)



உ

## பாடல் 84

பிரம்மா என்றும், ஹரியென்றும், சிவனென்றும்,
சிருஷ்டி ஸ்திதி சம்ஹார மென்றும்,
தபம் என்றும், ஜபமென்றும், தீர்த்த மென்றும்,
தான (தரும) மென்றும், தெய்வ மென்றும், சேவை யென்றும்,
கவர்கின்ற மயக்கங்கள் ஒன்றுமில்லை!
களங்கமில்லா பிரம்ம மெல்லாம், "அதுநாம்" என்றே,
அழிவற்ற உறுதியினால், அனைத்தும் தள்ளி,
அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!

**கருத்து:** எம் கனிவானவனே!

தெய்வ நிலையில் ஹரிஹர பிரம்மாவாகவோ, அவர்கள் முத்தொழில்களாகவோ, ஜப தபங்கள் என்றே, தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், என்றே தான தருமங்கள், யாகங்கள், சேவை யென்றே, பேசப்படும் "மனக் கவர்ச்சிகள்", எதுவுமே இல்லையென நிச்சயித்து, அனைத்தையும் காகத்தின் எச்சத்தைப் போல் தள்ளி விட்டு, அசையாத, அசைக்காத தான, ஆன்ம சொரூபத்தில், நிலைத்து நிற்பாயாக!

## பாடல் 85

பலவிதமாம் மந்திரங்களை தூரத் தள்ளு!
பஞ்சாட்சர மந்திரமும் தூரத் தள்ளு!
அஷ்டாட்சர மந்திரத்தையும் தூரத் தள்ளு!
இவைகளை "ஓதும் குருவையும்" தூரத் தள்ளு!
மயக்கம் தரும் வசனம் எல்லாம் தூரத் தள்ளு!
நிகழ்கின்ற மௌன மெல்லாம் தூரத் தள்ளு!
"அம்மனதின் விகற்பங்கள்" அனைத்தும் தள்ளு!
(மனதை அசைக்கும் குற்றம் குறைகள்)
அசஞ்சலமாய், ஆன்ம சொரூபத்தில், நிலைத்து நிற்பாய்!

**கருத்து:** ஆன்ம சொரூபமானவனே!

உலகநியதியிலும், தேவ தெய்வ நிலைகளிலும், ஸ்திரமாகச் சொல்லப்படுகின்ற, பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், பீஜாட்சரம், மற்றும் கோடானு கோடி மந்திரங்களையும், நிர்மூலமாக விட்டுவிடு. இவைகளை கற்றுத்தந்த குருவையும் ஒதுக்கி விடு. மயக்கம் தரும் (உலகியல் தெய்வ இயல்) வசனம், ஆச்சாரம், அனுஷ்டானம், மற்றும் மனதை அசைக்கின்ற குற்றம் குறை, பேதாபேதம், விருப்பு வெறுப்பு அனைத்தையும் தள்ளிவிடுவாயாக. "நாமே அது, அதுவே நாம்," என்ற அசைவற்ற உனது யதார்த்த சொரூபத்தில் நிலைத்து நிற்பாயாக!

உ 



## பாடல் 86

காமமொடு கோபம் முதல் அனைத்தும் தள்ளு!
கர்வமுடன் டம்பம் முதல் அனைத்தும் தள்ளு!
சந்தேகம் மோஹ முதல் அனைத்தும் தள்ளு!
துவைதமொடு அத்வைத முதல் அனைத்தும் தள்ளு!
நாமமொடு உருவ முதல் அனைத்தும் தள்ளு!
நாம் பிறர் என்ற இவை முதலாம் அனைத்தும் தள்ளு!
ஆம், அல்ல, என்று அறிவுற்றது அனைத்தும் தள்ளு!
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்!

**கருத்து:** எம் ஸித் சொரூபமே! காமம் முதல் ஆறு குணங்களையும், அஹங்காரம், அபிமானம், ஆடம்பரம், வியாபாரம், விளம்பரம், ஆகிய வைகளையும், பிளவுபடுத்தும் சந்தேகத்தினையும், அனைத்து நாம ரூபங்களையும், அவன், இவன், அது, இது என சுட்டிக்காட்டும் அனைத்து நாமயம், சரி, தவறு, என சுட்டிக்காட்டும் அனைத்தை, அனைத்து குறிகளையும், மூலத்தோடு தள்ளிவிட்டு, "நாம் அது, அது நாமே" என்ற உனது யதார்த்த சொரூபத்தில், அசைவற்று இருப்பாயாக!

## பாடல் 87

நிரந்தரமாம் அறிவான எம்மிடத்தில்,
(இந்த) உலகமுமே கற்பிதமாய் தோற்றலாலே,
பொருந்திய அக்கற்பிதமாம் தோற்றமெல்லாம்,
பூரணமாம் அறிவான அகமே என்றும்,
விரிந்த அறிவான "அகம் பிரம்ம"மென்றும்,
வேறற்ற அபேத பர ஞானத்தாலே,
அருந்தவனே! "பேதமதி" அனைத்தும் தள்ளி,
அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து, நிற்பாய்!

**கருத்து:** எம் தவத்திலுதித்தவனே! ஸத்தியமாயும், நிரந்தரமாயும் இருக்கும், அறிவு சொரூபமான எம்மிடத்தில், எம் கற்பனையாலே இவ்வுலகம் தோற்றுவதால், அதில் பொருந்திய அனைத்து தோற்றங்களும், பரிபூரணமான அறிவு சொரூபமான எம்மையல்லால், வேறு இல்லவே இல்லையென்று, அபேத திருஷ்டியான, ஸ்வய ஞானத்தில் "அனைத்து பேதங்களையும் தள்ளிவிட்டு," "அதுவே யாம்; யாமே அது," என்ற உனது யதார்த்த சொரூபத்தில், அசைவற்று நிற்பாயாக!

உ





## பாடல் 88

சத்தியமாய் ஜகம்முழுவதாக இருக்குமானால்,
சலனமற சுழுத்தியிலும் இருக்கவேண்டும்!
இத்தனையும் சுழுத்திதனில் இல்லாமையாலே,
இவையாவும் "கனவெனவே" மித்தையென்றும்,
நித்தியமாய் நின்ற "அகம் பிரம்ம" மென்றும்,
நிர்மலமாம் "அபேதபர" ஞானத்தாலே,
அந்தரமாம் "பேதமதி" அனைத்தும் தள்ளி,
அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!
ஓர்மையானவனே!

### கருத்து

கண்ணில் காணக்கூடிய இவ்வுலகம், "உண்மையாகவே இருக்கிறதென்றால்", அது ஆழ்ந்த உறக்கத்திலும், நீ உணரக்கூடியதாக இருக்கவேண்டும்! ஆனாலும் ஆழ்ந்த உறக்கத்திலும் "உன் இருப்பு மட்டுமே"! ஆனாலும் உலகம் இல்லை. ஆகவே இவையாவும், கனவெனவும் பொய்மித்தையென்றும், அனைத்து "பேதமதிகளையும்" மூவ த்தோதுக்கி "நாமே அது அதுவே நாம்", என அசைவற்று இருப்பாயாக!

## பாடல் 89

மனதுடைய விருத்தி உதிப்பதற்கு முன்னும்,
மற்றந்த விருத்தி நசித்திட்ட பின்னும்,
தினையளவும் இல்லாத (இந்த) ஜகதீவாதி, (பின்)
இயக்கம் "மனோவிருத்தியால்", மத்தியத்தில்,
கனவதுவாய் இருப்பதெனத் தோற்றினாலும்,
"களங்கமற விசாரித்து", இல்லையென்றே,
அனித்தியமெல்லாம் அத்யந்த நேதிபண்ணி,
அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!
அறிவு சொரூபமானவனே!

### கருத்து

"இந்த கற்பனையின் சொரூபமான, மனம் இருந்தால்தான், எண்ணத்தில் தோன்றும் ஜகம் உண்டு". ஆகவே இந்த எண்ணம் இல்லாத தூக்கத்திலும், இந்த எண்ணம் இல்லாது, அழிந்த காலத்திலும், இவ்வுலகம் இல்லவே இல்லை. கற்பனையின் மனதில் இவ்வுலகம், கனவு போல் வந்து, இருந்து, தேய்ந்து, மறைந்து, விடுவதால், இதை அறிவுபூர்வமாக உணர்ந்து, இவ்வுலகம் இல்லையென்றே, ஸ்வய அனுபவம் கூட்டி கூட்டி, உலக எண்ணம் மறந்து, மறந்து, அது இறந்து, "அதுவே நாம், நாமே அது" என அசைவற்று, உன் யதார்த்த சொரூபத்தில் நிலைத்திருப்பாயாக!



## பாடல் 90  உ

கடமடவென்று உணர்வற்ற உபாதிநீங்கில்;
  கடவிண்ணும், மடவிண்ணும், ஒன்றே போல;
அறிவற்ற ஜீவபர உபாதி நீங்கினால்;
  மாசற்ற ஜீவபரம், இரண்டும், ஒன்றென்று;
திடமருவும் ஊகத்தால் பர ஜீவ ஐக்கியம்;
  இயல்புதனை "இருமையற" அறிந்தே அத்தால்;
ஸ்வய அகண்டாகார சொரூபமாகி,
  அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!

**கருத்து:** ஆனந்த வடிவனே!

குடஆகாயமும், மட (வெட்டவெளி) ஆகாயமும் குடம் என்ற உபாதை நீங்கிவிட்டால், எப்படி இரண்டும், அவ்வாறே எந்தபேதமும் ஒன்றுவது போல; அறிவற்ற தன்மையினால், ஜீவன் வேறு பரம் வேறு என்ற பேதபுத்தியாகியே, ஜீவகளையை, (நாம் ஜீவன் என்ற) மட்டும், அறிவுபூர்வமாக நீக்கிவிட்டால்; பரமாகிய பரமாத்மாவும், ஜீவனாயிருக்கிற ஆத்மாவும், ஒன்றே என்ற பரிபூரணத்தால், "நாம் அது, அதுவே நாம்;" என அசைவற்று, உன் யதார்த்த சொரூபத்தில் நிலைத்திருப்பாயாக!

## பாடல் 91

"சிவோகம்;" எனச் சொல்லியிடும் வாக்கியத்தில்;
  விசாரித்து, விருத்தியின் அம்சம் நீங்கும் போது அங்கு;
"பர, ஜீவ ஐக்கியமே;" அறியும் அர்த்தம்;
  அவ்விதமே, "தத்த்வம், அஸி" வாக்கியத்துள்;
ஏகமதாம் விருத்தியின் அம்சம் அனைத்தும் நீக்கி;
  இயல்பான ஐக்கியமே அறிந்து அதனால்;
"பரமனோ பேதமில்லாம்;" இருந்து எப்போதும்;
  அசஞ்சலமாய், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!

**கருத்து:** அன்பின் சொரூபமே! "சிவோகம்" என்னும் வாக்கியமானது, சிவம் + அகம் = "சிவமே நாம்", எனமருவி வருவது போல; அங்ஙே தத்த்வம் அஸி வாக்கியமும், "அதுவாகவே நீ இருக்கிறாய்;" எனமருவி வருகிறது. காரணம் இங்கு "மனோவிருத்தியே;" பேதமாகிறது. இந்த மனோவிருத்தியை, அறிவுபூர்வமாக நீக்கிவிட்டால், பரத்தைத் தனியாக பார்க்கும் இந்த "மனோபேதம்;" நாசமாகும். அங்கு அனைத்து மனோபேதங்களையும், அறிவுபூர்வமாக நீக்கி, பர, ஜீவ, ஐகம் அனைத்தும் ஒன்றேயென உணர்ந்து, "அதுவே நாம், நாமே அது;" என்ற உன் யதார்த்த சொரூபத்தில் நிலைத்து நிற்பாய்!

## பாடல் 92 உ





கற்பிதமாம் ஜீவபர உபாதியெல்லாம்,
களங்கமற விசாரித்து நேதி செய்து,
"தற்பதவட்சியமான" பிரம்மரூபம்,
"த்வம்பதவட்சியமான" நாமேயென்றும்,
நிர்ப்பயமாய் அகண்டார்த்த போதம் பெற்று,
நீக்கவொண்ணா பவபந்தம் அனைத்தும் நீக்கி,
அற்பமில்லா அகண்டார்த்த வடிவேயாகி,
அனவரதம், ஆன்மாவில், அமர்ந்து நிற்பாய்!
எம் அன்பு சொரூபமே!

### கருத்து

உண்மையே மெய் கற்பித சொரூபமே, ஜகத், ஜீவ, பரம். இவைகளின் களங்கம் இல்லாமல், விசாரித்து தள்ளிவிட்டு, தற்பத வட்சியமான பரமாத்மாவே, த்வம்பத வட்சியமான ஜீவாத்மா ஆகும். இந்த பரமாத்மாவும், ஜீவாத்மாவும், அசிபத வட்சியமான, பரசொரூபமும் (மூன்றும்) ஒன்றாகும், என அறிவுபூர்வமாக உணர்ந்து, எந்த விருடியும், அகண்டார்த்த வடிவமாக இருந்துகொண்டு. பவம், பந்தம், சொந்தம் இவைகளை நீக்கி, "அது நாம், நாமே அது", எனவுண்மை யதார்த்த சொரூபத்தில் அசைவற்று இருப்பாயாக!

## பாடல் 93

சேத்தியமாய், செறிவுற்ற தோற்றம் யாவும்,
(பேதாபேதமாய்) (நழுவி மறைகின்ற)
சித்சொரூபமான பரசிவமே என்றும்,
வேத்தியமோர் அணுவுமில்லா சிவம் நாம் என்றும்,
(வேற்றுமை இல்லாத)
வேறற்ற நாம் அந்த சிவமே என்றும்,
சாதகமான பாவனையால் அகண்ட போதம்,
சார்ந்ததனால் "சம்சார பாசம் நீங்கி",
நேத்திரமாம் பரமசிவ அபின்னமான,
நிஜதான்ம மாத்திரமாய், நிலைத்து நிற்பாய்!
ஆனந்த வடிவமே!

### கருத்து

கண்ணில் காணும் இந்த ஜகம், தோன்றி இருந்து மாறி மறையும் தன்மையானதால், அனைத்தும் சித்சொரூபமான, "பரசிவமே" என்றும். அந்த பரசிவமே நாம் என்றும், இதில் அணுவும் இதில் சந்தேகம் இல்லையென்று அகண்ட போதம் பெற்று, நாம் சம்சாரியோ, குடும்பியோ, இல்லையென அனைத்தையும் உன் வைராக்கியத்தால் தள்ளி, பின்னமில்லாத, உனதான்ம சொரூபத்தில், நிலைத்து நிற்பாயாக!



## பாடல் 94 உ

மனதுமுதல் அனைத்திற்கும் அதீதமாகி,
மாயைமஹதாதிகட்கும் அதீதமாகி,
நனவுமுதல் அவஸ்தைகட்கும் அதீதமாகி,
நாமம் உரு எவைகட்கும் அதீதமான,
அணுகும் பரப்பிரம்மமல்லால் அணுவுமில்லை,
அறிவுமே அகண்டபரப் பிரம்மமென்றும்,
நம் அறிவாம், பரப்பிரம்மம் நாமே என்றும்,
கலங்காத பாவனையால் மனதை வெல்வாய்!

**கருத்து:** ஆர்வம் உள்ள குழந்தாய்! மனம், புத்தி, சித்தத்திற்கும், அப்பால் உள்ளதானதும், ஈஸ்வராதிகளின் மாயைக்கும், அப்பால் உள்ளதானதும், ஜாக்ரவஸ்தைகளின் காட்சி, நிகழ்ச்சி, ஓசைகளுக்கும், அப்பால் உள்ளதான, அனைத்து நாமரூபங்களுக்கும் அப்பால் உள்ளதானதும் உன்றல் அதை அணுகவும் அதால் உண்மை அணுகும் முறையிலும், உள்ள அந்த பரப்பிரம்மமல்லால் "வேறு அணுவும் இல்லை" என்றுணரும் போதும் சிந்தித்து, சிந்தித்து, கலக்கம் பயம், சந்தேகம், சஞ்சலம், இல்லாத பாவனையால் மனதை வெல்வாயாக!

## பாடல் 95

சுத்த சிதாகாயமதாம் நிஷ்பிரபஞ்சம்,
(அந்த) சொரூபத்தில் பிரபஞ்சம் என்றும் இல்லை!
இந்த த்வைத பிரபஞ்சம் பரமார்த்தத்தில்,
சிறிதளவும் இல்லேனும், விவகாரத்திற்காக,
ஸித்தியுடைய தோற்றமதாம் சித்தம் தானே,
செறிகின்ற பிரபஞ்சம் எனவே தோற்றும்!
(தோன்றாமறைகின்ற)
பத்திரா! அச்சித்தத்தை (யாம) புகன்ற வண்ணம்,
ஆரணமாம், பாவனையால், நாசம் செய்வாய்!

**கருத்து:** ஆனந்த புத்திரா! சிதாகாசமே மஹாகாசம், மஹாகாசமே சிதாகாசம்.

சிதாகாசம்:- இதய ஆகாசம், நம் இதயத்தில் இருக்கும், ஆரணைப் பிரகாசப் பிரம்மமே, இதய ஆகாசம் அதுவே சிதாகாசம்!

மஹாகாசம்:- நெற்றிப்பட்டைக்கு மேலே, சகஸ்ராரம் முழுமையாக, வியாபகமாக இருக்கும் ஆகாயமே மஹாகாசம்!





அந்த பரிபூரண சிதாகாச, மஹா ஹாச, பிரம்மம் அல்லால், பிரபஞ்சம் என்ற உலகம் இல்லை!

ஆனால்?

"உலகம் என்ற நாமரூபத்தில் பிரம்மம் இல்லை"!

"பிரம்மம் ஒன்றினுள் பிரபஞ்சம் அடங்கி இருக்கிறது"!

ஆனாலும் இவ்வுலகம் "விவகார ஸத்தியமானதால்", (பார்க்கையால் விவரித்தால் உலகம் உண்டு. இல்லையேல் உலகம் இல்லை) நம் யதார்த்த சொரூபமான, ஸத் சொரூபத்தில், சித்தம் (அசைவு) தோன்றி, அந்த அசைவினால் இப்பிரபஞ்சம் உண்டே தவிர, உண்மையில் உலகம் என்றோர் பொருள், இல்லையென்றே சொல்லவேண்டும்! இந்த எண்ணமாகிய சித்தமே தோன்றி, இருந்து, மாறி, மறையும் ஒன்றாக இருப்பதால், யாம் மேலே கூறிய வண்ணம் முழுமையாக விசாரணை செய்து, "அனைத்தும் பூரணமே", என்ற பாவனையால் "நாம் அது, அதுவே நாம்" என்ற பரமபாவனையால், மாயா மனதை வெல்வாயாக!

## பாடல் 96

இருமையில்லா சுழுத்திதனில் ஏகமாக,
இருக்கின்ற ஆன்மாவே நம்மிடத்தில்,
மருவியிடும் (மாயா) சக்தியினால் கனவின் கண்ணே,
மனமுதவாய் தோற்றியிடும் நீதிபோல,
ஒருவடிவாய் உள்ள பரப்பிரம்மம் தானே,
ஒன்றியதாம் சக்தியினால் சித்தம் போல் ஆகி,
சர்வ, ஜகத், ஜீவ, பர, வடிவமாகச்
சஞ்சலமான, விவகார தசையில் தோன்றும்!

**கருத்து**: பூர்ந்த அறிவு சொரூபமே! நனவு, கனவு இவ்விரண்டிலும், "காண்பான் காட்சி உண்டு"! ஆனால் ஆழ்ந்த உறக்கத்தில், மனம் நம்மோடு (ஸத்தோடு) ஒன்றி விட்ட தன்மையினால், அங்கு காண்பானும் இல்லை, காட்சியும் இல்லை! அவ்வண்ணம் ஒன்றுபட்ட தன்மையில், அங்கு நாம் நாமாகவே இருக்கிறோம். அப்படிப்பட்ட ஆழ்ந்த உறக்கத்தில், நாம் நாமாக இருப்பது போல, ஒரே வடிவான பிரம்மமும், ஸித்தத்தை தம்முள் அடக்கிக் கொண்டு அந்த ஸித்தானது, அந்த ஒன்றை விட்டு பிரிந்தால், (சுகமாக இருக்கிறது) அதுவே சித்தமாகி, ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாக தோற்றிக் கொள்கிறது. இதை இந்த விதமாக விசாரணை செய்து, சஞ்சலமான சம்சார பந்தத்தை, எண்ணமில், "அதுவே நாம், நாமே அது", என சுகமாவேசுகம் பெறுவாயாக!

## பாடல் 97

உ





அகம் பிரம்ம பாவனையால் "மாயா மோஹம்"
அதுவுமே நசிக்கும் இதில் ஐயமில்லை!
அகம் பிரம்ம பாவனையால் "மனக்கிரந்தி"
(மனமுடிச்சு)
அதுவுமே நசிக்கும் இதில் ஐயமில்லை!
அகம் பிரம்ம பாவனையால் "ஆதிவியாதி"
(சஞ்சிதம், ஆகாமியம்)
அதுவுமே நசிக்கும் இதில் ஐயமில்லை!
அகம் பிரம்ம பாவனையால் "அத்தியாசம்"
(பிராரப்தம் சந்தேகம்)
அதுவுமே நசிக்கும் இதில் ஐயமில்லை!

**பொருள்:** எம்மழலைச் செல்வங்களே!
அகம் பிரம்மம், பிரம்மம் அகம், அகமே எல்லாம், என்ற இந்த பாவனையால், மாயா மோஹம் அழியும். மனமுடிச்சு அவிழ்ந்தெரியப்படும். பிறப்பிறப்பெனும் பிணி அகலும், பிராரப்தம் சந்தேகம் சஞ்சலம் பயம் அனைத்தும் அழியும் ஆகவே, "அதுநாம், நாமே அது" என அசைவற்று இருப்பாயாக!

## பாடல் 98.

சகலமுமே பிரம்மம் எனப் போதித்தாலும்;
சந்ததமும் சுருதிமுடிப் படிப்புற்றாலும்;
பரமசிவம் கருணையில்லா வெறும் மூடர்க்கும்
பவகாலவாதனையால் மீண்டும், மீண்டும்;
இருமையென இதயத்தில் தெரிவதன்றி,
யாவையுமே பிரம்மமெனத் தெரிவதில்லை!
அரியவனே! ஆதலினால் மூச்சு வெல்வாம்.
அகண்ட பரசிவகருணை அடைய வேண்டும்!

**கருத்து:** எம் ஞானமழலையே! பற்பல ஆண்டுகளாக, வேத சாஸ்திரங்களை முறைப்படி கற்றாலும், சாதனைகள் பலபல கடுமையாகச் செய்தாலும், "இறைவன் கருணையில்லா மூடர்க்கு", ஜன்ம ஜன்மாந்திர பழக்கதோஷ வாஸனை, சாமான்யமாக போகாது. ஆகவே சாதனை செய்யும் மூச்சு எல்லாம், "அதுவேநாம், நாமே அது" என்ற தாரணையில் பெற, இறைவன் கருணையை முதலில் பெற்று, உங்கள் சாதனையை தொடர்ந்தால், நலமும் சுகமும் பெறமுடியும்!

## பாடல் 99 உ





அகம்பிரம்மம் என்று உறுதியாக நிச்சயித்தும்,
ஆக்கைமுதல் அகமென்றுநினைவைத்தன்று!
ஜகம்பிரம்மம் என்று உறுதியாக நிச்சயித்தும்,
ஜகத்தையெல்லாம் உண்மையென்றும் நினைவைத்தன்று!
அகம்பிரம்மம் ஜகம்பிரம்மம் என்றிவ் வண்ணம்,
அனவரதம் தொடர்பாக நிச்சயித்தால்,
ஜகம்பரம்நாம், என்னுமயல்துயில்வோன் கையில்,
செறிகின்ற மலரெனவே ஸ்வயமாய் நீங்கும்!

**கருத்து:** செல்வமழலையே! "அகம்பிரம்மம், பிரம்மமம் அகம்" என உறுதியான நிச்சயத்தினால், "தேகாத்மபுத்தி" நீங்கும்! ஜகம்பிரம்மம், "அகமேஎல்லாம்" என்ற உறுதியான நிச்சயத்தினால், ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளுடைய, "நாமரூப மயக்கம்" நீங்கும். அகம்பிரம்மம், பிரம்மம் அகம், ஜகம்பிரம்மம், அகமே எல்லாம் என்ற நிச்சயம் அனுபவம் ஆகிவிட்டால், தூங்குபவன் கையில் உள்ள மலரானது, எப்படி நழுவி விழுந்துவிடுமோ, அதேநியதியில் ஜகத்ஜீவ, ஈஸ்வராதிகள், என்ற மயக்கம், உதிர்ந்துவிட்டு அகன்றுவிடும்!

## பாடல் 100

வானமுதல்பூதமில்லை, புவனம் இல்லை!
வருகின்ற ஈசனில்லை, ஜீவன் இல்லை!
யானும் இல்லை, நீயும் இல்லை, யாரும் இல்லை!
நாமமில்லை, ரூபமில்லை, யென்றும் எல்லாம்,
ஞானகனமான பரப்பிரம்மம் என்றே,
"ஞானநிலை பெறுமளவும்" நிச்சயித்தால்,
பாணமுறும் பேதமயல் பாதவத்தின்,
பக்குவத்தின் பழமெனவே சுயமாய் நீங்கும்!

**கருத்து:** ஞானச்செல்வமே! ஐந்து பஞ்சபூதம் இல்லை, அனைத்து அண்டசராசரங்களும் இல்லை, இவைகளில் முத்தொழில் புரிகின்ற கர்த்தாக்கள் இல்லை, அனந்த ஜீவகோடிகளும் இல்லை, இவைகளை சொல்லும் யானும் இல்லை, இவைகளை கேட்கும் நீயும் இல்லை, எந்த நாம ரூபங்களும் இல்லை. ஆனால் மேலே கூறியவை இவை அனைத்தும், அந்த காலாதீத ஒன்றே என்ற உறுதிநிச்சயம், உனக்கு ஸ்வய அனுபவமாகிவிட்டால், மரத்தில் பழுத்தபழமானது, எப்படிமரத்தைவிட்டுதானே இறங்கிவிடுமோ, அதைப்போல, நாமரூப ஜகத்ஜீவ ஈஸ்வராதிகள் மயக்கம், உதிர்ந்துவிட்டு அகலும்!



## பாடல் 101

தினந்தவிறாது இயற்றியிடும் கர்மமென்றும்;
திடமாகச் செய்கின்ற பக்தியென்றும்;
அனந்தவித தெய்வ உபாசனைகளென்றும்;
அத்தெய்வ மூர்த்திகளின் ஆணையென்றும்;
மனந்தன்னிலே மருவிய இத்தோற்றமெல்லாம்;
"மனத்தான பரப்பிரம்ம சொரூபமென்றே";
கனந்தவிறாது அகண்டபர நிச்சயத்தால்;
களங்கமில்லா பரப்பிரம்ம மாத்திரமாவாய்!
ஆனந்தமயமான குழந்தாய்!

### கருத்து

தினமும் செய்கின்ற பிரார்த்த கர்மானுஷ்டானமென்றும்; திட நம்பிக்கையால் செய்கின்ற பக்தியென்றும்; அந்த தேவதெய்வ உபாசன விதிகள் என்றும்; அந்த தேவதெய்வ ஆஞா விதிமுறைகள் என்றும்; இவை அனைத்தும் "உன்மாயா மனதின் காரியமே"! இந்த மாயாமனதின் காரியம் அனைத்தும் அந்த காலாதீத ஒன்றான பரசொரூபமென்று, ஆழ்ந்த அகண்டபர நிச்சயத்தால், "அதுவே நாம்; நாமே அது" என்ற பரப்பிரம்ம சொரூபமாவாய்!

## பாடல் 102

புரையற்ற நிர்உபாதி சொரூபம்தானே;
(அவஸ்தையற்ற)
புகலும் மஹா வாக்குகளின் "பொருளாகுமன்றி";
பிரிவுற்ற சோபாதி (அவஸ்தைகளின்) சொரூபமென்றும்,
பேசும் மஹா வாக்குகளின் "பொருளன்றன்றே"!
விரிவுற்ற இவை முதலாம் தோற்றமெல்லாம்;
விமலமதாம் (மலமற்ற) பரப்பிரம்ம சொரூபமென்றே;
தெரிவுற்ற அகண்டபர நிச்சயத்தால்;
தியக்கம் இல்லாத பரப்பிரம்ம மாத்திரமாவாய்!
பண்பான பணிவான குழந்தாய்!

### கருத்து

குற்றம் குறை இல்லாததும், அவஸ்தைகள் இல்லாததும், உள்ள பிரம்ம சொரூபமே, அது இல்லாதும் பிரிவுள்ளதும், அவஸ்தைகள் உள்ளதுமான, ஜகத்ஜீவ ஈஸ்வராதி ஆகுமே சொரூபங்களும், "மஹா வாக்குகளின் பொருள் ஆகாது"! உன்கண்முன் விரிவாக தோற்றியிடும், இந்த ஜகத் தோற்றமெல்லாம், மலமற்ற ஆன்ம சொரூபமென்ற, திட உறுதியால் நிச்சயித்து, தயக்கம், தடை, மாற்றம் இல்லாமல், பரப்பிரம்ம சொரூபமாவாய்!



## பாடல் 103

சருவமுமே பரம்பிரம்ம சொரூப மென்றே;
சகலமறை முடிவுகளும் சாற்றவாலும்;
பிறிவறவே பரம்பிரம்ம ஞானம் பெற்ற,
பெரியோரும் இவ்விதமே பேசவாலும்;
இருளறவே பரசிவமும் எமக்குமுன்னம்;
இவ்விதமே அருள் செய்த இயல்பினாலும்;
உரைதரும் இவ் அகண்டபர நிச்சயத்தில்;
ஓரணுவும் ஐயமில்லை உறுதி ஈதே!

**கருத்து:** ஞானவிவேகமானவனே! நீ கண்ணில் காணும் அனைத்துமே பரம்பிரம்ம சொரூபம் என்று, வேத வேதாந்த கருத்துக்கள் நிர்ணயிப்பதினாலும்; ஆத்மஞானம் ஸ்வயமாய் அடைந்த ஆத்ம ஞானிகளும் இவ்விதமே சொல்வதினாலும்; எமக்கு முன்பு எமதய்யன் ஸ்ரீ ஸத்குரு, இவ்விதமாகவே அருள் செய்த தன்மையினாலும், இந்த ஸத்திய வாசகமாகிய, அகம் பிரம்மம் (அதுவே நாம், நாமே அது) நிச்சயத்தை, உறுதியாக நம்புவாயாக!

## பாடல் 104

நாமம், ரூபம், யாவையுமே பிரம்ம மென்றும்;
நாம் அந்த பரப்பிரம்மம் நாமே என்றும்;
சேமமுற செப்பிய இந்த அர்த்தம் தன்னில்;
சிறிதேனும் சங்கையில்லை சத்தியம் தான்!
நாமமெல்லாம் கடந்து எங்கும் நிறைவாய் நின்ற;
தத்துவமாம் சிவம் ஆன உண்மை சொன்னோம்!
உண்டு இல்லையென அணுவும் இதில் சந்தேகியாமல்;
(யாம்) அறைந்தவண்ணம் அதிதிடமாய் நிச்சயிப்பாய்!

**கருத்து:** சாந்தியானவனே! முடிவாகவும், திடமாகவும் சொல்கிறோம். கண்ணில் காணும் நாமம் ரூபம், யாவையுமே பிரம்ம சொரூபமென்றும்; நாமும் அந்த பரம்பிரம்மம் தான் என்றும், உறுதி நிச்சயம் கொள்வாயாக. உனக்கு நன்மை உண்டாகும் நிச்சயம், யாம் சொல்லிய இந்த மஹா அர்த்தம் தன்னை, அப்படியே ஏற்றுக் கொள்வாயாக! இதை யாம் சொல்லவில்லை; எம் இறைவன் மீதும், ஸத்குரு மீதும், ஆணையிட்டுச் சொல்கிறோம்! உண்டா? இல்லையா? எனஎந்த சந்தேகமும் கொள்ளாமல், யாம் சொல்லியபடி, "அதுவே நாம், நாமே அது" எனஉன் ஸ்வய அனுபவத்தைப் பெறுவாயாக! நலம் பெறுவாய்! சுகம் பெறுவாய்! இது ஸத்தியம்!



## பாடல் 105 உ

தன்னிடையே நிச்சலமாய் நிலைத்து நிற்கும்,
நிலைமையதே, நிகரற்ற மோட்சமாகும்!
தன்னிடையே தானாக தனித்திடாமல்,
கடல் அலையென சலிப்பதுவே பந்தமாகும்!
உன்னியிடில் ஓர் உருவாய் உன்னையன்றி,
அசைவு தரும் காரணம் ஓர் அணுவுமில்லை!
தனிமையானவனே! ஆதலினால் நீ எப்போதும்,
தன்னிடையே தானாகத் தனித்து நிற்பாய்!

**கருத்து** ஒப்புவமை இல்லாதவனே! தன்னில் தானாய், அசைவில்லாமல் நிற்பதுவே ஜீவன்முக்தியாகும். தன்னில் தான் தனித்து நில்லாமல், கடல் அலையைப் போல், அசைந்து கொண்டிருந்தால், "அதுவே பந்தமாகும்"! ஆகவே முடிவாக சொல்கிறோம். கவனி! உன்னுள்ளும், அனைத்துள்ளும், ஒன்றாக இருக்கும், ஓர் உண்மை சொரூபம், உன்னையல்லால் வேறில்லை! ஆனந்தமான தன்மயமானவனே, நீ தன்னிடையே தானாகத் தனித்து நிற்பாயாக!

## பாடல் 106

தன்னிடையே தானைத் தனிப்பதற்குத்,
தனக்கயல் போல் தோற்றியிடும் தோற்றமெல்லாம்;
அன்னியமாய் ஒருகாலும் இல்லையென்றும்,
அறிவுமே ஆன்மாவாம்; அது நாமே என்றும்;
பின்னமில்லா அகண்டபர நிச்சயத்தை,
பெறுவதுவே காரணமாம் ஆதலாலே;
யாம் சொன்னவாறு அகண்டபர நிச்சயத்தை;
பற்றியதால் பகுப்பற்ற பரமேயாவாய்!

**கருத்து** பிரம்மானந்த சொரூபமே! நீ தன்னில் தானாய்த் தனிப்பதற்கு, தமக்கு அயலாக தோற்றியிடும், அனைத்து நாமரூபங்களையும், அனைத்தும் ஆன்மரூபமே என்றும், அந்த ஆன்மா நமக்கன்னியம் இல்லையென்று, இந்த அகண்டபர நிச்சயத்தை அடைந்து, இதுவே மஹாகாரணமான உறுதி நிச்சயம் என, பிரம்மானந்த நிலையை அடைந்து ஆனந்திப்பாயாக! இந்நிலையே பகுத்துப் பார்க்கமுடியாத நிலையும், பேதமற்ற நிலையுமாகும். முடிந்த முடிவும் இதுவேயாகும்!





## பாடல் 107 உ

நிச்சலமாம் நிச்சயமே அகண்டானந்தம்,
நிலைமை பெற நிகரற்ற ஏதுவாகும்.
உச்சமதாம் நிச்சயமே செய்யச் செய்ய,
உலகெனுதல் துவைதத்தின் தோற்றம் நீங்கும்.
துச்சமதாம் (துக்கமயமான) துவைதத்தின் தோற்றம் நீங்கில்,
துக்கமற்ற ஆனந்தம் ஸ்வயமாய் தோன்றும்.
அச்சமில்லாத நிச்சயம் செய்து இங்கு அதனால்,
அகண்டபரமானந்தம் அடைந்து வாழ்வாய்!

**கருத்து** அறிவுருவே! அன்புருவே!

அசைவற்ற நிச்சயமே அகண்டானந்தம் ஆகும். இந்த உத்தமமான நிச்சயம், திரும்ப, திரும்ப, இடைவிடாமல் செய்யச், செய்ய, துவைத உலகம் உன்னை விட்டு நீங்கும். (உலகம் நீங்கும் என்றால், இவ்வுலகம் ஊர்க்கூட்டம் தோன்றாது, ஒரே ஆனந்தமயமாகத் தோன்றும்; அன்னியருக்கு உலகமாகவே தோன்றும்) நாமரூபகாட்சி எந்தமட்டும் மறைகிறதோ, அந்தமட்டும் ஆனந்தம் பெருகிக் கொண்டே வரும்! அங்கு!

**"இருப்பு"** தோற்றும்! **"இயக்கம்"** தோற்றும்!!
**"ஆனந்தம்"** குறையாமல், விலகாமல், மறையாமல், தோற்றும்!
இதுவே **"ஸத், சித், ஆனந்தம்"** ஆகும்!

1. கண்ணில் காணும் அனைத்து காட்சிகளும், பொம்மலாட்டமாக தோற்றும்! அங்கு விகாரம், விவகாரம் விபரீதம் எதுவும் தோற்றாது!
2. அதன் அசைவுகள் (இயக்கம்) விகார குணதோஷங்கள், எவையும் இன்றி, முதலில் இறைவன் இயக்கமாகவும், இறைவன் விளையாட்டாகவும் தோற்றும். அங்கு எந்த குணதோஷங்களும் தோற்றாது!
3. அதன் அசைவையும், அதன் ஓசை (வார்த்தை) களையும், இன்பதுன்பம் தோற்றாது! முதலில் இறைவனுடைய இயக்கமாகிய பேரானந்தம் தோற்றும். பின் ஸ்வய அனுபவத்தால் பிரம்மானந்தமாக மாறும், அதுவும் நாமாகவே தோற்றும்!

எம் அன்பே! துக்க சொரூபமான துவைதம் மறையும் போது, உன் ஸ்வய அனுபவத்திற்கு மரணம், பயமற்ற கலக்கமற்ற சந்தேகமற்ற, பிரம்மானந்தம் தோற்றுவதை உணர முடியும்! அந்த ஸத்சித் ஆனந்தமயமாகவே வாழக் கடவாய்!



## பாடல் 108

மாதவனே! இந்நூல் கேட்கத் தக்க,
மாசற்ற மாணக்கன் அரியவன்தான்!
சாதகமாய் இந்நூல் உபதேசிக்கும்,
ஸத்குருவும் சாலவுமே அரியவன் தான்!
பேதமற இந்நூலின் புஸ்தகத்தைப்,
பெற்றவரும் மெத்தவுமே அரியவராவர்!
ஓதிய இவ் வேதமிதனால் இந்நூல் எங்கும்,
உரமாகப் பிரசித்தி மேவவில்லை!!

**கருத்து** — அறிவுமயமானவனே! ஆனந்தமயமானவனே! அரியவனே! இந்த சுத்தமான அத்வைத நூலை, சிரவண, மனன, நிதித்தியாசனமுடன் உணர்ந்து அனுபவித்து, அது ஆகக்கூடிய மாணவன், இவ்வுலகில் எங்கு தேடினும் கிடைப்பது அரிதினும் அரிதாகும்!

அதைப்போலவே இந்த சுத்தமான அத்வைத நூலை, உணர்வு அனுபவத்துடன் உணர்ந்து, ஸ்வயமாக "அந்த ஒன்றின் நிலையில் தாம் தாமாகவே" உபதேசிக்கும் ஸத்குருவும், அரிதினும் அரிதாகும்!!

ஆனால் இந்த சுத்தமான அத்வைத நூலை, தம் கைகளில் பெறவும், அதை பணிவுடனும், கனிவுடனும், கருத்துடனும், உரைவும், இந்த **நூலைபெற்றவர்கள்** அரிதினும் அரியவராவர்.
(இந்த நூலைத்தாங்கியவர் முக்தி பெற்றவராவர்)

# "ஆனால்?????"

இந்த சுத்தமான அத்வைத நூல், இவ்வுலகில் பிரபல்யமாகவில்லை.
காரணம்:- இந்த உலகின் அனைத்து மாந்தரும் **"சக்தி"** வடிவமாக இருக்க ஆவலி உள்ளவர்களே அன்றி, அந்த சக்தியை நமக்குள் அடக்கிக்கொண்டு நாம் நாமான சுத்த **"சிவம்"** என ஆக ஆவலுள்ளவர்கள் அல்ல!
இங்கு ஸ்வய அனுபவம் நாம் நாமாக இருப்பதால் லௌகீக இன்பமையிலும் தெய்வீகமயக்கத்திலும் இருப்பவர்கள் இதனிலக்கு

# "வரமுடியாது" "வரக்கூடாது"!

துறு பாபா

உ



அருள் ஞானக்குழந்தைகளே! இதுவரை ஸத்குருவின் உபதேசத்தை உணர்ந்தீர்கள். இனி ஸத்சீடனின் உயர்வான அனுபவ "ரஸாம்ருதத்தை" உயர்வு பூர்வமாக உணரவும்! பருகவும்!! அதுஆகவும்!!!

# "நிதாகனின் அநுபவம்!!!"

## பாடல் 109

அறிய வொண்ணா பெருமையுறும் போதம் பெற்ற;
குருதேவா நினது திட கருணையாலே;
சிறிய மதி பொருந்திய யாம் சிறுமை நீங்கி,
சின்னமில்லா அகண்ட பரிபூரணமானோம்!
பெற அரிதாம் உன்னுடைய தரிசனத்தால்;
பிறவியிதில் பெறுவதெல்லாம் பெற்றோனானோம்!
உற அரிதாம் உனதருளால் செய்வதெல்லாம்;
ஊனமறச் செய்து முடித்தோனுமானோம்!

**கருத்து:** ஹே ஸத்குருதேவா! அளவிடற்கரிய உமது கருணையினால், இப்பிறவியில் என்ன பெற வேண்டுமோ, அதை யாம் பெற்று விட்டோம். சிறுமதி படைத்தோமான யாம், எம் "சிறுமை நீங்கி," மனம், வாக்குக்கு எட்டாததான, நாமரூப குணம் குறிகடந்ததுமான, எந்த "சின்னமும் இல்லாத," அகண்ட பரிபூரண நிலை பெற்று விட்டோம்! உமது கிருபையினால் இப்பிறவியில், எதைச் செய்ய வேண்டுமோ அதை எந்த குறையும் இல்லாமல், செய்து முடித்து விட்டோம்!



## பாடல் 110

கருணையினால் அருளிய நின் உபகாரத்திற்கு
கைமாறு இவ்வுலகில் எங்குமில்லை
குருபரனே! உமது உபய பாதம் இப்போதைக்கு
குறித்தடியேன் அனந்த வித வணக்கஞ்செய்வோம்
பரிவுடனே வணங்குதலும் உபசாரம்தான்
பரமார்த்த தசையிலொரு வணக்கமுண்டோ?
சர்வமுமே பிரம்மமல்லால் பரமார்த்தத்தில்
சற்றுமொரு பேதமுமே இல்லையன்றே!

**கருத்து** ஹே கருணாகரா!

உன் கருணையினால், நீ பண்ணிய இப் பரஉபகாரத்திற்கு, கைமாறு செய்ய இடம் இல்லை. அப்படி ஓர் பரஉபகாரம் செய்யும் இடம் இல்லாத் தன்மையினால், உம்முடைய ஸ்ரீ பத்மபாதத்தை பற்றி, பலவிதங்களாக வணங்குவோம். அவ்வணக்கமும் "ஓர் உபசாரம் தான்"! பரமார்த்த நிலையில் எந்த உபகாரமும், எந்த உபசாரம், இல்லவே இல்லை!

## பாடல் 111

தேசிகா! நின் கருணையினால் யாம் அடைந்த
திவ்யமாம் "ஸ்வய அனுபவ திருஷ்டி தன்னில்"
பேசியதும் யானும் இல்லை! (கேட்டதும்) நீயும் இல்லை!
பெருமையுடன் விளக்கிய இந்த நூலும் இல்லை!
பாச நிலையில் ஜீவன் இல்லை! (மாயை நிலையில்) ஈசன் இல்லை!
பகுப்புற்ற பார் முதலாம் ஜகத்தே இல்லை!
எம் குருவே! அறிவுமே அகண்டாகாரம்
அத்வைத பிரம்மமல்லால் அயலே இல்லை!

**கருத்து** பரமகுருவே!

உன் கருணையினால் யாம் பெற்ற பரமார்த்த நிலையில், ஸ்வயமாக காணும் நிலையில், உபதேசம் பண்ணிய உம்மையும் காணோம்! அதைக் கேட்ட எம்மையும் காணோம்! இதை உணர்த்திய அத்வைத நூலையும் காணோம்! பாசத்தில் உழலும் ஜீவனையும் காணோம்! அப்பாசந் தரும் மாயையினால் ஊட்டிய ஈசனையும் காணோம்! ஜீவனும் ஈசனும் இருந்து விளையாடிய, உலகையும் காணோம்! சற்று முன் தோற்றிய உலகம் என்ன ஆயிற்றோ தெரியவில்லை? எவரும் அவ்வுலகை, களவாடிச் சென்றுவிட்டார்களா என்ன? எங்கு எதை உணர்ந்தாலும், பிரம்மானந்த சமுத்திரமாகிய, பரமானந்த சுகமே தோற்றுகிறது!



பாடல் ||௨

ஸத்குருவே! நினது அருளால் அகண்டஞானம்;
சத்ருவாம் அஞ்ஞானம் அனைத்தும் நீங்கி;
நிர்க்குணமாம் பரம்பிரம்ம ஞானம் பெற்றும்;
நிகிலவித "கர்மத்தும் சிரத்தை யற்றும்;
துர்க்குணமாம் பிரபஞ்சத்தின் உண்மை நீங்கி;
துவைதத்தால் தொடரும் பயம் அனைத்தும் நீங்கி;
அழிவற்ற பரம்பிரம்ம சொரூபமாகி;
அயவற்ற அபயபதம் அடைந்தோமந்தோ!!!

கருத்து: ஹே ஸத்குரு வார்யா! உன்பரம கிருபையினால், அகண்டானந்த ஞானம், அடைந்த தன்மையினால், அஞ்ஞானம் என்னும் எம் "அறியாமை அகன்றதும் குணாதீத நிலையை அடைந்த தன்மையினால், பிராப்த கர்மா நிகழ்ந்தாலும் அதில் சிரத்தை இல்லை! அதனால் அனைத்து குணதோஷங்களும், இல்லாதொழிந்து இரண்டற்ற தன்மையினால், பயபீதி ஒழிந்தது! இப்போது அழிவற்ற அயவற்ற, பிரம்ம சொரூபமாகி, அதுவாகவே யாம் இருக்கிறோம்!

பாடல் ||௩

குருபரா! நின் கருணையினால் கணநேரத்தில்;
குறைவு தரும் பேதமதி அனைத்தும் நீங்கி;
சர்வமுமே பிரம்மமென்னும் நிச்சயத்தை;
சாலவுமே திடமாகச் சார்ந்தோமந்தோ!
பரவிய இவ்வுரமான நிச்சயத்தால்;
பரமான எம்மிடை யாம் சாந்தமாகி;
குற்றம் குறை உணர்வு துக்கங்கள் அனைத்தும் நீங்கி;
மலமற்ற பிரம்மானந்தம் அடைந்தோமந்தோ!!!

கருத்து: எம் ஸத்திய சொரூபியே! உமது பரம கருணையினால், ஒரு விடியில்' பேதாபேதம் அகன்றது! அதனால் சகலமுமே பிரம்மமென்னும் நிச்சயம் நிலைத்தது! இந்நிலையில் பர சொரூபமான எம்மிடத்திலேயே, யாம் "ஸாந்தியாக", எமக்கு அயல் இல்லாத தன்மையினால், குற்றம் குறை, விருப்பு, வெறுப்பு, பேதங்கள் அனைத்தும் அழிந்து, அதுவே யாம், யாமே அது" என்ற எம்மை டைய, பிரம்மானந்த நிலை பெற்றுவிட்டோம்!



## பாடல் 114

இதுவரையில் அஞ்ஞான பகையால் கெட்டோம்;
இன்றுனது கருணையினால் அபயம் பெற்றோம்!
இதுவரையில் மனமென்னும் பகையால் கெட்டோம்;
இன்றுனது கருணையினால் மஹத்தே ஆனோம்!
இதுவரையில் கருமியென்னும் மதியால் கெட்டோம்;
இன்றுனது கருணையினால் கலக்கம் அற்றோம்!
இதுவரையில் ஜீவன் என்னும் மதியால் கெட்டோம்;
இன்றுனது கருணையினால் "சிவம்" ஆனோம்!

**கருத்து:** ஹே சாந்த சொரூபா! இந்த "விநாடி" வரை, அஞ்ஞானம் என்ற அறியாமை மூடியிருந்தது; அது அகன்று அது ஆனோம்! இந்த விநாடிவரை மனம் என்னும் கற்பனையால் அவதியுற்றோம்; அது அகன்று அது நாமென ஆனோம்! இந்த விநாடிவரை, லோபம் மோஹம் என்னும் மதியினால் அவதியுற்றோம்; அது அகன்று அது நாமென ஆனோம்! இந்த விநாடி வரை, தேகாத்ம புத்தியால் நாம் ஜீவன் என மயங்கி இருந்தோம்; அது அகன்று, அது வேறு நாம், நாமே அது என்ற பூரண நிலை பெற்றுவிட்டோம்!

## பாடல் 115

யாம் முன்னம் அறிவிலனாய் அலைந்து நின்றோம்!
யாம் இன்று ஆன்மாவென்று அறிந்தோம் ஆனோம்!
யாம் முன்னம் தேகமென தியங்கி நின்றோம்;
யாம் இன்று திருக்குரு என்று அறிந்தோம் ஆனோம்!
யாம் முன்னம் சித்தம் எனச் சலித்து நின்றோம்;
யாம் இன்று சின்மயமென்று அறிந்தோம் ஆனோம்!
யாம் முன்னம் சிதாபாசன் எனவே நின்றோம்;
யாம் இன்று ஸிதம்பரமென்று அறிந்தோம் ஆனோம்!

**கருத்து:** ஹே தேவாதிதேவா! இந்த "விநாடி" வரை, அறிவற்றவனாய் புத்தி வசப்பட்டு, புத்திசாலியாக அலைந்தோம்; அது அகன்று, யாம் ஆன்மா என ஆகிவிட்டோம்! இந்த விநாடி வரை, தேகாதிகளில் பற்றுடையவனாய் அலைந்தோம்; இப்போது பார்க்கும் பொருளாக இராமல் பார்ப்பவனாக ஆகிவிட்டோம்! இந்த விநாடி வரை, கற்பனை மயமான சித்தமாகி அலைந்தோம்; இப்போது யாம், ஸித் சொரூபம் ஆகிவிட்டோம்! இந்த விநாடி வரை, சித்தத்தினால் ஆபாசப்பட்ட காணும் பொருளாகவும், அதன் ஞானதோஷங்களாகவும், அலைந்தோம்; இப்போது யாம், மனம் வாக்குக்கெட்டாத, ஞானம் குறிகடந்த, ஸிதம்பர சொரூபமாக ஆகிவிட்டோம்!



## பாடல் 116 உ

நினதருளால் மனதிலுள்ள சந்தேகங்கள்;
நிகிலமுமே நிமிஷத்தில் நீங்கிற்றன்றே!
நினதருளால் மனதிலுள்ள பவபாசங்கள்;
நிகிலமுமோர் நிமிஷத்தில் நீங்கிற்றன்றே!
நினதருளால் ஜீவபர ஜகங்களென்ன;
நிகழுமயல் நிகிலமுமே நீங்கிற்றன்றே!
நினதருளால் நிகிலமுமே பிரம்மமென்னும்;
நிச்சலமாம் நிச்சயமுமே நிலைத்ததன்றே!!!

## கருத்து

ஸத்யசொரூபா!

உன் கிருபையினால், எம்மனதின் சந்தேகங்கள், அனைத்தும் நிவர்த்தியாயின! உன் கிருபையினால், எம்மனதிலுள்ள, சொந்த பந்த பவ பாச குணதோஷங்கள், அனைத்தும் நிவர்த்தியாயின. உன் கிருபையினால், ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின், பயமும் மயக்கமும், நிவர்த்தியாயின. உன் கிருபையினால், அசைவற்ற பிரம்மானந்த நிச்சயம் நிலைத்து விட்டது!

## பாடல் 117

நிகிலமெனத் தோற்றுவதும் (எம்) சித்தம் தானே;
நினதருளால் சித்தமதே பிரம்மமாயிற்று!
அகிலமுமே பிரம்மமதாம் "அதுநாமென்னும்";
அகண்டபரபாவனை செய்து இங்கு அதனால்;
சகலமென்றும், நாம் என்றும், பேதம் நீங்கி;
சலனம் இல்லாத அகண்டபரநிஷ்டை கூடி;
பகரவொண்ணா பவபாசம் அனைத்தும் தள்ளி;
பங்கம் இல்லாத பரப்பிரம்மம் ஆனேமைந்தோ!!!

## கருத்து

ஹே ஸத்குருதேவா!

உலகமாகவும், அனைத்து பொரு ள்களாக தோற்றியது, எம் சித்தமே அல்லாமல் வேறு இல்லை. அந்த சித்தம், எமது ஸித் சொரூபமான பிரம்மத்தில் உண்டானதே. ஆகவே உலகமும், அனைத்து பொருள்களும் பிரம்மம் என்ற நிச்சயத் தால், பேதம் அனைத்தும் தொலைந்து அந்த "அகண்ட பர நிச்சயத்தால்", அனைத்து பவ பாசங்களையும் தள்ளி, விளக்க வொண்ணா, குற்றம் அற்ற பரப்பிரம்மமாக இருக்கிறேம்!



## பாடல் 118

தூலமெனத் தோன்றிய நாம் உடலும் காணோம்;
ஸூட்சுமமெனத் தோன்றிய நாம் உடலும் காணோம்;
மூலமெனத் தோன்றிய நாம் உடலும் காணோம்;
மோஹமெனத் தோன்றிய நாம் ஒன்றும் காணோம்!
காலமொடு தேசமுதல் எவையும் காணோம்;
கற்பிதமாய் தோன்றிய நோர் அணுவும் காணோம்;
சாலவும் சாந்தமதாய் சலனமின்றி;
"ஸித்மயமாம்" பரப்பிரம்மம் ஆனோமய்யா!!!

**கருத்து:** ஹே ஸத்திய சொரூபா! உம் கருணையினால், ஸ்தூலமாக தோன்றிய உடல்களும், கனவில் தோன்றும், ஸூட்சுமமாகத் தோன்றிய உடல்களும்; ஆழ்ந்த உறக்கத்தில் தோன்றிய, மூலமான உடல்களும்; இவை அனைத்தையும் அனுபவிக்கும், மோஹமெனை சொல்லும், கொடிய ஆசைகளையும் காணோம். ஆதல் கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து, அசைவற்ற ஸாந்தி சொரூபமான, பரப்பிரம்மமாய் இருக்கிறோம்!

## பாடல் 119

இருமையெனப் பிரம்மமல்லாது எவையும் காணோம்;
இருப்பதெல்லாம் பரப்பிரம்ம வடிவாய் கண்டோம்!
ஒருவொருளும் பிரம்மமல்லால் அயலாய்க் காணோம்;
இருப்பதெல்லாம் பரப்பிரம்ம வடிவாய்க் கண்டோம்!
சருவமென பிரிதாக சிறிதும் காணோம்;
சகலமுமே பரப்பிரம்ம வடிவாய்க் கண்டோம்!
(எம்) குருபரா! அப்பரப்பிரம்மம் யாமே ஆனோம்;
குறைவற்ற நின் தருளின் மஹிமை என்னே?

**கருத்து:** எம் குருதேவா! இரண்டென்றோ, ஒன்றென்றோ, எதுவும் தோற்றமில்லை. இருப்பதெல்லாம் அனைத்தும் பிரம்மமாக உணர்கிறோம்! அந்த பரப்பிரம்மத்திற்கு, அயலாக எவையும் இல்லை. எமக்கு அயலாக இங்கு எவையும் காணோம். எமக்கு அயலாக இங்கு எவையும், இல்லாத தன்மையினால், சுத்த சுக சொரூபமான பரப்பிரம்ம சொரூபம், யாமே ஆனோம் என உணர்கிறோம்! இந்த குறைவற்ற உன்னுடைய மஹிமையை, என்ன வென்போம்!!! நிலையைத் தந்த,



பாடல் | ௨0 | ௨

ஆசிரியா! நீஅருளும் உபதேசத்தால்,
ஆவரணம் விட்சேபம் அனைத்தும் நீங்கி,
சாசுவத சுபாவமதாய் சலியாத ஸித்தாய்,
சதானந்த கனமாகிச் சகஜான்மாவாய்,
பேசவொண்ணாப் பேரொளியாய் பிரிவில்லாததாய்,
பெரிதுக்கும் பெரிதாகிப் பிரம்மான்மாவாய்,
ஈசன் முதல் எவையுமில்லாத அகண்டமான,
ஏகஜோதி காயப் பரப்பிரம்மமானேனைய்யா!!!

கருத்து: எம் ஆத்மானந்த சொரூபமே! குருபரா! உம்முடைய ஆழமான உபதேசத்தால், ஆவரண மயக்கமும், சந்தேகக் கூற்றும் நீங்கி, எம் சாஸ்வத சொரூப உணர்வைப் பெற்று, சஞ்சலம் அடையாத, ஸித்த சொரூபமாகி இருக்கிறோம். மேலும் குறைவற்ற, நிறைவுற்ற, சதானந்த சொரூபமாய், ஜகத் ஜீவ, ஈசன், இல்லாத பிரம்மான்மாவாய், பெரிதுக்கும் பெரிதாய், அனந்த அண்டங்களிலும், அகண்டானந்தமாய் சுகித்திருக்கிறோம்!

பாடல் | ௨௧ |

ஆசிரியா! நீஅருளிச் செய்த வண்ணம்,
அன்னியமில்லா அகம் பிரம்மம் என்பதாக,
நேசமுடன் நிரந்தரமாய் தியானம் செய்து,
நிகில மனோ விகற்பமுமே நீங்கினேனைய்,
சாஸ்வத சொரூபத்தில் நிர்விகற்ப
சமாதிநிலை பெற்றவனாய், சாந்தனாகிப்
பேசவொண்ணா பரப்பிரம்ம போதம் பெற்று,
பெருமை மிகும் பிராமணனும் ஆனேன் ஐயா!!!

கருத்து: ஹே குருதேவா! குருமஹானே! உம்முடைய பர சொரூபமான உபதேசத்தால், அன்னியமில்லாத, "அது நாம், நாமே அது" என்பதை அனுபவத்தால் உணர்ந்ததால், மனோ குற்ற விகாரங்கள் அனைத்தும் நீங்கி, எம் சாஸ்வத சொரூபமான, நிர்விகற்ப (எண்ணமற்ற) சமாதி நிலை, எந்த விதையும் பெற்று, சர்வ சதா சாந்தி சொரூபமாகி, பேசி விளக்க முடியாத, பிரம்மானந்த நிலை பெற்று, பிரம்மத்தை தம் அனுபவத்தில், உணர்ந்த பிராமணனாய் ஆகிவிட்டோம்!



பாடல் | ௨௨ உ



பின்னமறக் கருணையினைப் நீ உரைத்த,
"பிரக்ஞானம் பிரம்மம்" முதல் வாக்கியார்த்தம்;
பதிந்த வண்ணம், நன்றாக மனதில் கொண்டு,
மாசறவே மற்றும் அதை மனனம் பண்ணி;
அன்னதனைப் பின்னையுமே அநுசந்தானித்து,
அஞ்ஞான சந்தேக விபரீதங்கள்;
அண்டமுடியாத அகண்டார்த்த போதம் மேவி,
மகிழ் ஜீவன் முக்தனும் யாம் ஆனேமைய்யா!!!

கருத்து

ஹே ஸத்ய சொரூபா! பின்னம் இல்லாமல், உன் கருணையினால் அருளிய, "பிரக்ஞானம் பிரம்மம்", அதாவது உடல் உலக பிரக்ஞையோடு இராதே. ஆத்மப் பிரக்ஞையோடு இரு; பிரம்மப் பிரக்ஞையோடு இரு என்ற பரசொரூப பிரக்ஞையோடு இருந்து, குற்றம் குறை பேதம், விருப்பு வெறுப்பு அற்று, அஞ்ஞான சந்தேக விபரீதங்கள் நீங்கி, அண்டமுடியாத அகண்டானந்தம், பரிபூரணம் ஆகி, ஆனந்தமயமான, ஜீவன் முக்தன் ஆகிவிட்டோம்!

பாடல் | ௨௩

சிரவணமே முதலியதின் அப்யாசத்தால்,
சிறுமை தரும் "தேகாத்மபுத்தி நீங்கி";
பெருமைமிகும் "பிரம்மாத்மபுத்தி" மேவி;
பின்பு அந்த புத்தியும் இழந்தவனாகி,
கருதவொண்ணா அகண்டாத்ம போதம் பெற்று,
"கர்த்தத்துவம்" முதலான பந்தம் தீர்ந்து,
நிரதிசய ஆனந்தம் அனுபவித்து,
நிகழ் ஜீவன் முக்தனும் யாம் ஆனோமைய்யா!!!

கருத்து

ஸத்குருவாரீயா! எம் சிரவணம், மனனம், முதலிய அப்யாசத்தினால், "தேகம் நாம்" என்னும், தேகாத்மபுத்தி ஒழிந்து, பிரம்மம் நாம் என்னும், பிரம்மாத்மபுத்தி ஸ்திரப்பட்டு, "யாமே அது, அதுவே யாம்", என ஆரணமாகிவிட்டபடியால், "யாம் கர்த்தா" என்ற கர்த்தத்துவம் நீங்கி விளக்கமுடியாத, பந்தம் அனைத்தும் நீங்கிய, அதிசயிக்க முடியாத, அகண்டமான ஆத்மானந்த சொரூபமாகவே ஆகி, நித்திய முக்த ஜீவன் முக்தன் ஆகிவிட்டோம்!



**பாடல் ௧௨௪**

குறைவின்றி, நிறைவின்றி, குற்றமின்றி,
குணம் குறிகள், முதலியவை எவையுமின்றி,
மறைவின்றி, தெரிவின்றி, மனதுமின்றி,
மனோமயமான மயக்கங்கள் அனைத்துமின்றி,
பிறிதின்றி, தனதின்றி, பிரிவொன்றின்றி,
"பேதமுறும் எப்பொருளும் ஒன்றுமின்றி,
அறிவொன்றே" வடிவான பிரம்மமாக,
அமைவுற்ற எம்மேன்மை என் சொல்வோம் யாம் ???

**கருத்து** ஸத்குருதேவா!

உன் கருணையினால் எந்த குறையும், நிறையும் இல்லாமல்; குணம், குறிகள், குற்றமில்லாமல்; தெரிவதும் மறைவதும் இல்லாமல்; மனம், புத்தி, சித்தமாகிய எண்ணமும், கற்பனைகளும் இல்லாமல்; எமதென்றே, எமக்கன்னிய மென்றே, இல்லாமலும்; "பிரிவொன்றும் இல்லாமலும்"; எம் "அறிவு" சொரூபமான பிரம்மமாக யாம் இருக்கிறோம். இப்படி அமைந்த எம் மேன்மையை, விரித்துரைக்க முடியவில்லையே குருதேவா!

**பாடல் ௧௨௫**

நினதருளால் யாம் பெற்ற அனுபவத்தை,
நிகழ்வுறவே இவ்வண்ணம் நிகழ்த்தவானோம்!
அளவற்ற கருணாகரனே யாம் உமக்கு,
கைமாறு செய்திட இங்கு ஒன்றுமில்லை!
மனதுடனே எமதுடலை உமக்களித்தோம்;
மற்றும் அதனை நிமிஷத்தில் நீறு (சாம்பல்) செய்தாய்!
அருமையான எம்முடைய ஆன்மாவை உமக்களித்தோம்;
அதனையும் உன் ஆன்மாவே ஆக்கிக் கொண்டாய்!!!

**கருத்து** சாந்த சொரூபா!

உமது கிருபா கடாட்சத்தால், யாம் பெற்ற அனுபவங்களை, இவ்விதமாக யாம் சொன்னோம். அளவற்ற கருணை கடலே, யாம் உமக்கு கைமாறு செய்ய, இங்கு ஒன்றுமே இல்லை! மனோநிலையில் "சர்வார்ப்பணமாக" எம் உடலை உமக்கு கொடுத்தோம். எம்மின அழிந்த தன்மையினால், அது எங்கு தோன்றியதோ, அதுவாக (மண்ணாக) சாம்பலாக ஆகிவிட்டது. எம்முடைய ஸித் சொரூபமான, எம் ஆன்மாவை, உமக்கே "அர்ப்பணம்" செய்தோம்; அதையும் உம் சொரூபமான **பரமாத்மா**வாக ஆக்கிக் கொண்டாய்!





**பாடல் 126**

இனியெதனை கைமாறு செய்வோம்? எல்லாம்
இருமையில்லா நினது நிஜசொரூபந்தானே?
அன்னியமில்லா நீயாமாய், யாமே நீயாய்,
அமர்கின்ற ஐக்கியமாம் ஆழியின் கண்,
அன்னியமில்லா பிரம்மாஸ்மி ஞானந்தானே,
யாம் மூழ்கி ஒன்றாக கலந்தோமன்றோ.
தனிவுருவாய், தான்தானாய், தனித்த இந்த,
தகைமை தனில் நமக்கயலோர் அணுவும்
உண்டோ??

**கருத்து** ஹே தயாநிதி! ஹே தயாசாகரா! இப்படி பெருமை படுத்திய உமக்கு, கைமாறு யாம் என்ன செய்ய முடியும்? காரணம் அனைத்தும் உம் சொரூபம், அனைத்தும் உம் இயக்கம். அதுவும் யாமே! நீயும் யாமும், ஒன்றான தன்மையினால், நமக்கு அன்னியம் ஏதுமில்லா தன்மையினால், யாம், நீ இருவரும், பாலும் நீரும் போல் கலந்து விட்டோம். ஆகவே இங்கு நமக்கு அன்னியமாக, ஏதும் இல்லை!

**பாடல் 127**

ஆதலினால் யாம் கைமாறு அளிப்பதற்கும்,
அதனை அடைந்து, எங்கே நீ போவதற்கும்.
இடம் இல்லை; (இங்கு) எப்போதும், எவ்விடத்தும்;
இருப்பதெல்லாம் ஏகஸிதாகாயம் தானே?
ஓதியவாறு ஓரணுவும் (நமக்கு) அயலில்லாததால்,
ஒன்றினை நீ உபதேசம் செய்வதற்கும்,
அஃதினை யாம் இனிமையுடன் கேட்பதற்கும்,
இடம் இல்லை; இவ்விசித்திரம் என்னே ஐயா?

**கருத்து** ஹே குருதேவா! நாம் இருவரும் ஒன்றான தன்மையினாலும், இங்கு நமக்கு அன்னியம், எதுவும் இல்லாத தன்மையினாலும்; யாம் எதை உமக்குக் கொடுப்போம்? எதை நாங்கள் தனியாக வாங்க முடியும்? எதை வாங்கிக் கொண்டு, நீங்கள் எங்கு செல்ல முடியும்? இனி நாங்கள் எமக்கு எதை உபதேசம் செய்ய முடியும்? யாமும் எங்கிருந்து கொண்டு, உமது உபதேசத்தை, அன்புடன் கேட்க முடியும்? ஐயா! ஐயா!! இது வெகு வெகு விசித்திரமாக உள்ளதே! இதென்ன ஆச்சரியம்???



பாடல் | ௨௮ உ

ஸத்குருவாய் அருளியிடும் நீயும் இல்லை!
ஸத்சீடனாக உள்ள யாமும் இல்லை!
முக்குணமாய் தோன்றியதோர் பிரிவும் இல்லை!
மூலமதாம் அவித்தை இல்லை! மாயை இல்லை!
துர்க்குணமாய்த் தோன்றியதோர் ஜகத்தும் இல்லை!
தொடர்புற்ற ஜீவேஸ்வரர் யாரும் இல்லை!
நிர்க்குணமாம் பரப்பிரம்ம சொரூபம் ஒன்றே;
நீக்கமற நிலைபெற்று நிகழ்ந்த தன்றோ?

கருத்து: ஹே ஸத்குருநாதா! ஹே ஸத்குருவார்யா! தயாநிதே! வெகு, வெகு, வெகு, வெகு ஆச்சர்யமான ஓர் நிலை! இதுவரை ஸத்குருவாய், அருளிய உமக்கும் இருப்பில்லை! ஸத்சீடனாக உம்மிடம், பாடம் கேட்ட எமக்கும் இருப்பில்லை! முக்குணங்களாகிய, துர்க்குண சொரூபமான, "குணதோஷங்கள்" எவையும் இல்லை! அந்த குணதோஷ சொரூபங்களான, ஜீவர்களோ, ஈஸ்வராதிகளோ இல்லை அவர்கள் நாடகமாடிய, உலகையும் காணோம். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும், "எம் சொரூபமே அனைத்தும்"!

பாடல் | ௨௯

இன்றடியேன் உம்மை நோக்கி வணங்குவோமேல்;
(அது) "இரண்டுபடும்" ஆதலினால் வணங்கக் கூடாது!
அன்றி, எம்மை நோக்கியாம் (இங்கு) வணங்குவோமேல்;
"அணுகுபவன்" இலாமையினால் அதுவும் கூடாது!
என்றும் ஒருவடிவான உம்மை நோக்கி
"இருமையுற" யாம் இன்று வணங்குவோமேல்;
நின்ற எம்மை, "அஞ்ஞானி"யென நீ சொல்வாய்;
நிர்மலமாம் தன்னிலையில் இருமை உண்டோ???

கருத்து: ஹே கருணாமூர்த்தி! காருண்யசீலா! இந்நிலையில் யாம் உம்மை வணங்கினால், அது இரண்டுபட்டுப் போகும்! ஆதலால் யாம் எம்மை நோக்கி வணங்கினால், அணுகுபவன் இல்லாத தன்மையினால் அதுவும் கூடாது! மேலும் அனைத்தும் ஒன்றாகவும், அதுவே யாமாகவும் ஆகி விட்ட தன்மையினால், யாம் வணங்கினாலும், எம்மை "அஞ்ஞானி" என நீ சொல்வாய்! மலமற்ற, மனமற்ற தன்னிலையில், இருமை என்பதற்கு இடமே இல்லாமல் ஆகிவிட்டது!



பாடல் | 30 | உ

அஹோ குருவின் மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ நூலின் மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ ஞான மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ ஞானி மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ ஸாது மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ ஸாந்தி மஹிமையினை என் சொல்வோம் யாம்?
அஹோ பிரம்ம சுக மஹிமையை என் சொல்வோம் யாம்?
அஹோ எமது சுக மஹிமையை என் சொல்வோம் யாம்?

கருத்து: ஓ எம் ஐயனே! ஓ எம் கர்த்தாவே! ஓ எம் தயாநிதி! ஓ எம் தயா ஸாகரா! ஓ எம் கிருபாநிதே! ஓ எம் கருணைக் கடவே! ஹே ஸத்குருதேவா! உம் கிருபையை, உம் கருணையை, உம் அன்பை; எந்த வாயால் புகழ்வது? ஆயிரம் சிரம் கொண்ட சர்ப்பனையின், அந்த ஆதிசேஷனாலும் புகழமுடியாதே! உம் பெருமையால் இந்த நூலின் பெருமையையும், ஞானத்தின் மஹிமையையும், ஞானியின் மஹத்வத்தையும், "பரமஸாது" மஹிமையையும், ஸாந்தியின் ஆனந்தத்தையும், பிரம்ம சுகத்தையும், எமது பிரம்மானந்த சுகத்தையும், சொல்லமுடியாதே தேவாதிதேவா!!!

பாடல் | 31 |

தந்தைமுதல் பந்துஎல்லாம், அனந்த தேகம்;
தருவதல்லால் அநாதிபவ பந்தம் தீர்க்கார்!
சிந்தையினால் ஆய்ந்திடில், அப்பந்து எல்லாம்;
சிறுமைதரும் சத்துருவே ஆகிநிற்பர்!
அந்தமில்லா அருள்வடிவாம், குருவோ என்றால்;
அகண்டபர ஞானத்தை அருளால் நல்கி,
தொந்தபந்தமதாம், அநாதிபவ பந்தம் எல்லாம்;
துய்பறவே நன்றாக துடைத்துக் காப்பன்!!!

கருத்து: ஹே ஸத்குருவாரியா! விதிவசத்தால் தோன்றிய இந்த உடம்புக்கு, தற்காலிகமாக, உறவாக வந்த இந்த தாய், தந்தை, மற்றும் உறவு சுற்றம், ஆகிய அனைவரும், விசாரித்து உணர்ந்து பார்த்தால், வேறு அனேக ஜன்மாந்தரம் தருவார்களே தவிர;



கர்மா நீக்கமும், பிறவா நிலையும், அவசியம் தர இயலாது! இவர்கள் அனைவரும், எமக்கு எம் அறியாமையால் தோன்றிய பிணைந்த, "**சத்துரு**" ஆவார்களே தவிர, "உபகரணம்" ஆகார். ஆனால் ஆதி அந்தமில்லா, எம் ஸத்குருவாகிய நாங்கள், நம் கிருபா கடாட்சத்தால், எந்த எதிர் பார்ப்பும் இன்றி, அகண்டமான பிரம்மஞானத்தை உம் அருளால் கொடுத்து, அனாதி பவ சாந்த பந்தம் எல்லாம், துப்பரவாக துடைத்து, "விதேக முக்தியை", அதாவது பிறவா நிலையை, கொடுத்தருளி, எம்முள் தாங்களும், தாங்களுள் யாமும், ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளையும், எம்முள் கலந்து கரைந்து, "**இரண்டற்ற நிலை**" ஆக்கிவிட்டீர்கள்!!!

# "நிதாகனின் வைராக்கியம்"!!!

பாடல் 132

எந்த வித உபாதைகளும் இல்லாத விதேகமுக்தி
அடையும் வரை, அஞ்ஞான மோகத்தாலே
வெகுவிதமாம் (எம்) பிராரப்தம் தொலையுமட்டும்;
விதவிதமாம் துவைதத்தின் ஆபாசங்கள்;
நிகழினும் யாம், நிச்சலமாம் ஜீவன்முக்தி
நிலையிலுள்ள யாம், என்றும் சலித்திடாமல்;
இகழ்வில்லாமல், நேரிட்ட போகம் துய்த்திங்கு;
எம்மிடமேயாம் இசைந்து, ஆனந்தம் அனுபவிப்போம்!!!

கருத்து: எம் குருதேவா! ஆத்மானந்த சொரூபா! இனி யாம் "ஜீவன்முக்தி" நிலையிலுள்ள இந்த நிலையில், அடுத்து "விதேகமுக்தி" பெறும்வரை, புண்ணிய பாப சம்பந்தம் கொண்ட இந்த உடம்புக்கு, "பிராரப்தாதீனமாக" வரும், "**இரண்டாகவும்**",



விதவிதமாகவும், "இயல்பாக வரும், புண்ணியபாப" வினைகளை, எவ்வித பிடிப்பும் இல்லாமல், கருவி, கரணங்கள், அதனதன் வேலையை ஒழுங்காகப் பார்க்கிறது என, எம் "அறிவு பூர்வமாக உணர்ந்து" "சலிப்பில்லாமலும்" "வெறுப்பில்லாமலும்," "விருப்பில்லாமலும்" **"கற்பனை"** பண்ணாமல், "போதும் என்ற திருப்தியோடு" அனுபவித்து முடித்து விடுவோம்.

**பாடல் 133**

புகல் ஜீவன் முக்தர்களுக்கும் பிராரப்தத்தால்
பூஷணமும், தூஷணமும், எங்கும் உண்டு!!!
"நாம் அது என்னும் "அகம்பிரம்ம" நிச்சயத்தால்,
ஜீவன் முக்தரல்லாத மற்றோர் செய்யும்,
"வெகுவான "பூஷண" தூஷணங்களாலே"
மலமற்று, (அந்) நிலை பெற்ற யாம், அன்னோர்க்கென்றும்,
(எமக்கு) இகழ்வானது எவையும் இல்லை, என்று திட உணர்வோம்,
எம்மிடையே யாம், ஆனந்தம் பொங்க, இசைந்து இருப்போம்!!

**கருத்து** எம் பரமகுருவே! ஆனந்த குருவே!

தாங்கள் சொல்லக் கூடிய ஜீவன் முக்தர் ஆகிய எமக்கு, "விதேகமுக்தி அடையும் வரை பிராரப்தம் உண்டு"! அந்த புண்ணியபாப உடல், கர்மா சம்பந்தப்பட்டிருப்பதால், "போற்றலும், தூற்றலும்," வந்தே தீரும்! ஜீவன் முக்தி நிலை உணர்வற்ற மாந்தர், அப்படி எம் தூலவினையின்படி தூற்றினாலும், போற்றினாலும், அவை **"எமக்கல்ல"** என்றும், தூற்றுவதும் போற்றுவதும் **"அவர்களுமல்ல"** என்றும், வினை சம்பந்த **"பதுமைகள்"** ஆடுகின்றன என்றும், வினை சம்பந்த **"ஒலி அலைகள்"** மோதுகின்றன என்றும், எம்மில் யாம் ஆனந்தமுடன் சுகித்திருப்போம்!

உ





பாடல் 134

குருதேவா! நின் கருணையினால், யாம் இப்போது,
மகிழ்வான ஜீவன் முக்தி நிலை, சார்ந்து நின்றோம்!
பேதமுறும் பிராரப்தம் உள்ளமட்டும்,
வழுவுறாமல் அகம்பிரம்ம நிச்சயத்தை,
சாதகமாய், சந்ததமும், சாதிப்போனாய்,
கற்பனைக்கும், குற்றவுணர்வுக்கும் இடம்கொடாமல்,
ஆதிமுடிவு, ஒன்றுமில்லாத, அகண்டமான,
ஆன்மாவில், அனவரதமும், அமர்ந்து நிற்போம்!!!

கருத்து

ஸத்குருநாதா! சாந்த சொரூபா! ஸத்ய சொரூபா!
உமது கருணையினால் யாம் இப்போது, "ஜீவன் முக்தி"
நிலையை, அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்! எம்வினை கூடான
இந்த பொழுமை, வினையை முடித்து மண்ணோடு மண்ணாகும் பரிய
ந்தம், இது "கலிதோஷ" காலமாக இருப்பதால்,
என்னதான், உடல் நாம் அல்ல. மனமாதிகளை நாம் அல்ல. இவைத
ன் கர்த்தாக்நாதியஸ்வராதிகளும் உண்மையல்ல. அனைத்து
அண்டரண்டபிரம்மாண்டங்களும், பஞ்சபூதங்களும், அனைத்து உயிரி
னங்களும், "உண்மையல்ல", "உண்மையல்ல", "உண்மையல்ல", என
எந்த விநாடியும், தைலதாரை போல், அநுசந்தானம் செய்து
வந்தாலும், "ஜகவாசபழக்கவழக்கம்",
என்னும், கலிதோஷம், அணுப்பிரமாணம் ஒட்டினாலும், ஓர்
குடம் பாலில், ஓர் துளி விஷம், விழுந்து விட்டால், எப்படி பால்
முழுவதும் விபரீதமோ, அதுபோல் பயனற்றுப் போய்விடும். ஆகவே
இந்த தாவம்மறையும்மட்டும், "அகம்பிரம்ம பாவனையாகிய"
"அகம்பிரம்மம்", "பிரம்மம் அகம்",
"அகமே எல்லாம்"!!! என
சர்வசதா தியானித்து, குற்றம் குறை, பேதஉணர்வு, விருப்பு வெறுப்பு,
கருக்கு இடம் கொடாமல், அதுவே நாம். நாமே அது.
ஆன்மாவில் அமர்ந்திருப்போம். எனனமில்லயமான



பாடல் 135 உ

ஆதலினால் தந்தையும் நீ; தாயும் நீயே!
அதிசயமாம் மற்றும் உற்ற பந்து நீயே!
சாதகமாம் ஸத்குரு நீ; நண்பனும் நீயே!
சகலமுமே நீயே என்று வணங்கி ஏத்தி;
அமைதியான மனதுடனே பவபாசநாயங்கள்;
சிறிதுமில்லா சின்மாத்ர நிஷ்டைபடி;
ஆதி முடிவு ஒன்றுமில்லாத, அகண்டானந்த,
ஆழியினில், அசைவற்று கலந்து கரைந்து விட்டோம்!!

கருத்து

எமதய்யனே! கருணாகரா! கிருபா சமுத்திரமே! ஆனந்த ஸாகரா! ஆத்மானந்த பெருநிதியே! அன்பும், கருணையும், தயையும், கொண்ட எம் வள்ளலே!

"எம் தந்தை நீயே" "அறிவு"!
"எம் தாயும் நீயே" "அன்பு"!
"எம் பந்து நீயே" "ஸத்வ குணம்"!
"எம் நண்பன் நீயே" "நிர்க்குணம்"!
"எம் ஸத்குரு நீயே" ஆத்மா, பரமாத்மா, பரம்பொருள், பராபரம்!!!

"எல்லாம் நீயே!" "எல்லாம் நீயே!!" "எல்லாம் நீயே!!!"

இரண்டென்றும்; இரண்டும் ஒன்றென்றும்; ஒன்றென்றும் இல்லையென்றும்; "உணர்வு இல்லை"!!!

அகம் பிரம்மம்; ஜெகம் பிரம்மம்; அகமே எல்லாம்!
ஜெகம் பரமும் ஜீவர்களும் சிறிதும் இல்லை!

பாபா.



பாடல் 136

# "குரு ஸ்துதி!!!"

ஸத்திய ஸித் சுககனமாம் குருவே போற்றி!
சலனமில்லா சாந்தபர குருவே போற்றி!
நித்திய நிர்க்குணமான குருவே போற்றி!
நிரஞ்சனமாய் நின்றபரகுருவே போற்றி!
சுத்தபர வெளியான குருவே போற்றி!
சூட்சுமமாய் நின்றபர குருவே போற்றி!
அத்வைத பூரணமாம் குருவே போற்றி!
அகண்டமதாம் ஸத்குருவே போற்றி! போற்றி!

# "பர ஸ்துதி!!!"

பாடல் 137

அகில அதிஷ்டானபர சொரூபம் போற்றி!
அனைத்துமில்லா அத்வைதசொரூபம் போற்றி!
துகளணுகாத் துரியபர சொரூபம் போற்றி!
துரியத்தும் அதீதபர சொரூபம் போற்றி!
அகமருவா அகண்டபர சொரூபம் போற்றி!
ஆன்மாவுக்கு அபின்னபர சொரூபம் போற்றி!
நிகரிலதாய் நின்றபர சொரூபம் போற்றி!
நீக்கமற நிறைந்தபர சொரூபம் போற்றி!



பாடல் 138

சற்போத சுககனமாம் சொரூபம் போற்றி!
சலனமில்லா சாந்தபர சொரூபம் போற்றி!
தற்போத சூனியமாம் சொரூபம் போற்றி!
தன்மயமாய் தனித்தபர சொரூபம் போற்றி!
கற்போவ நிச்சலமாம் சொரூபம் போற்றி!
களங்கமில்லா நிஷ்களமாம் சொரூபம் போற்றி!
எப்போதும் இருமையில்லா சொரூபம் போற்றி!
ஏகமதாம் பரப்பிரம்ம சொரூபம் போற்றி!

பாடல் 139

ஸத்திய ஞானநந்த சொரூபம் போற்றி!
சகலபரிபூரணமாம் சொரூபம் போற்றி!
நித்திய ஞானநந்த சொரூபம் போற்றி!
நிரஞ்சன நிர்க்குணமான சொரூபம் போற்றி!
இத்துவைத லேசமில்லா சொரூபம் போற்றி!
ஏகஸ்தா காயபர சொரூபம் போற்றி!
அத்வைத மானபர சொரூபம் போற்றி!
அகண்டமதாம் பர சொரூபம் போற்றி! போற்றி!!!



"பாடல் 140"

# வேறு!!!!!

தேசிகன் தெரிவித்த திறப்படி;
தீரமாய் நிதித்யாசம் புரிந்தநால்;
ஈசன் நல்லருள் பெற்றவர் முக்தியை;
எய்தவாம், என மொழிந்து விளம்பி; மேலும்,
ஏசிவா இந்த நூலின் மஹத்துவம்;
யாவும் ஓதி, யிதனை முடித்திடல்;
ஆசிவானந்த தாண்டவம் ஆடும் நம்;
அம்பிகேசன் அகண்ட சொரூபமே!!!

**கருத்து:** எம் அருமை ஞானச் செல்வங்களே! ஸ்வய அனுபவ மாணிக்கங்களே! ஆத்ம ஜோதியின் அம்ச சொரூபங்களே!

யாம் இது காலபரியந்தம், உபதேசித்த **"ஆத்மஸ்வய ஞான கருத்துக்கள்"**, உள் உணர்வுடன் கேட்ட உங்களுக்கு, இந்த நூலின் பெருமை யாவும், இறைவன் கிருபையினாலும், ஸ்ரீமஹான்களின் ஆசியினாலும், உங்கள் **"ஆழ்ந்த சிரத்தை"**யினாலும், **"இறை.குரு.பரம்"** இணைந்து பரசொரூபமாகவே ஆகுக, என வாழ்த்தி ஆசிகூறுகிறோம்!

த... பாபா.





# "ஆத்மஞானத்தின் சுருக்கம்!"

ஓம் அன்புக் குழந்தைகளே! "ஆத்ம ஞானம்" என்பது "தன்னை" அறியும் "அறிவாகும்". தன்னை என்றால், தன் வினைத்தூலத்தினுள் இருந்து, அந்தர்யாமியாக இருந்து நடத்தும், அந்த ஸ்ரீ பரமாத்மா யார்? என உணர்ந்து, அந்த காலாதீதமான ஒன்றான பரமாத்மாவும், அனைத்துள்ளும் நிறைந்திருக்கும் ஜீவாத்மாவும், ஒன்றே என தம் மெய்யறிவினால் உணர்ந்து, மற்றும் அனைத்து நாம ரூபங்களும் தம் மனமேய கற்பனை சொரூபமே எனவும் உணர்ந்து, "நாம ரூப குண தோஷங்களை" களைந்து, தன்னுள்ளும் அனைத்துள்ளும், அந்த ஒன்றான பரசொரூபமே என தெளிந்து, "மனமற்ற நிலையில் சும்மா இருப்பதுவே தன்னை அறியும் அறிவாகும்!"

# இதன் சாதனை!!!

1. மண், பொன், பெண், இந்த மூன்றையும், "**மண்**" என்றே உணர வேண்டும்!

௨. மண் மஹேசன் சிருஷ்டி, ஜகம் ஈசன் சிருஷ்டி, நாமரூபம் மனதின் சிருஷ்டி, குணம் மயக்கத்தின் சிருஷ்டி!

௩. மண் பர சொரூபம், பொன் நம் இறைவன் சொரூபம்! ஆபரணம் நம் ஜீவ சொரூபம்! ஆனால்?

## "அந்த மூன்றும் ஒன்றே"!!!

4. ஈசன் உலக பொருள்களை சிருஷ்டித்தான், ஆனால் அவனிலிருந்து "நம்மை பிரித்தான்"? ஆகவே அவன் வேறு, நாம் வேறு அல்ல. "அவனே நாம், நாமே அவன்"!!

௫. அனைத்தும் இறைவன் பொருளே, அனைத்தும் இறைவன் இயக்கமே, அந்த இயக்கம் நம் கர்மாவின் நிமித்தமே!!



உ

6. கர்மாவின் சேமிப்பு நம் மன எண்ணமாகிய "**நான், என்னால், என்னுடையது**" என்ற, அஹங்கார, அதிகார, அபிமானத்தால், வந்தது!

7. மேலே உள்ள மூன்றையும் விட்டால், வந்த கர்மா முடிந்துவிடும். வேறு (ஆகாமிய) கர்மா தொடராததால் பிறவி இல்லை!

8. இவ்வுலகமும் அதன் பொருள்களும், கணவன், மனைவி, அம்மா, அப்பா, குழந்தைகள், இவை அனைத்தும், உன் "**விளையாட்டு**" பொருள்களே! அவற்றின் மேல் "**உரிமை**" கொண்டாட வேண்டாம்!!

9. அவற்றின் வினை உனக்கு இருந்தால், அவைகள் உன்னிடம் இருப்பது போல் தோற்றும். உன் வினையும் முடியும். அதன் வினையும் முடியும், அவை உன்னை விட்டு அகலும்.

10. அவை உன் வினையால், உன்னிடம் வரும் போதே, உன்னை விட்டு அகலும் போதோ, "சந்தோஷமும் துக்கமும்" வேண்டாம். அவை இரண்டுமே "**பிறவியின் வினை**"!!

11. "**உறவு**" என்பது, நீயாக உன் மனதால், சொந்தம் கொண்டாடினாய்; அந்த சொந்தம் பந்தமாக மாறியது; அந்த பந்தம் பாசமாக மாறியது. அதுவே உறவானது. அந்த உறவை நீ விடவில்லையானால் அது "**உறங்காது**"; அதுவே "உன் வினை", அதுவே உனக்கு "**காலன்**"!

12. உறவை நம்பியதாலும், அதிகாரத்தை நம்பியதாலும், "**உண்மையை**" இறைவனை மறந்துவிட்டாய். ஆனால் அவன் உன்னை மறக்கவில்லை! எப்போது எம்மை நினைப்பாய் என்று உன்னுடனே வருகின்றான்!





13. இறைவன் மாயையை உடையவன். மனிதன் மனதின் வசம் உடையவன். மாயை இல்லாததை இருப்புடையதைப் போல் காட்டும். மனம், "நான், என்னால், என்னுடையது" என்ற எண்ணத்தினால் தன் "இருப்பைக்காட்டுகிறது"!

14. நான், என்னால், என்னுடையது "முழுமையாக" அழிந்தால், அங்கு அந்த மாயா மனமும் அழிந்துவிடும்.

15. மேலே கூறிய மூன்றும் அழியும் போது, "எல்லாம் நீயே". "எல்லாம் உன்னால்". "எல்லாம் உன்னுடையதே" என மாறிவிடும். அந்நிலையில் "ஜீவன்" என்ற உன் வடிவம் இல்லை. அங்கு "இறைவன்" என்ற "ஒருவன்" தான் உண்டு. (அங்கு பல இல்லை)

16. நம் இறைவனுக்கு படைத்தல், காத்தல், மாற்றுதல், மறைத்தல், அருள்தல், என "ஐந்து தொழில் இருப்பதால்," அவனுக்கு "மாயை" அவசியம் தேவை. அவன் தொழில் கர்த்தாவாக இருப்பதால், அவனுக்கு "முக்தி" இப்போது தேவை இல்லை!

17. ஆனால் நீ இறைவன் ஆனாலும், "நீ தொழில் கர்த்தா இல்லை" ஆகவே உனக்கு மாயை தேவை இல்லை ஆனால் அவசியம் உனக்கு முக்தி தேவை; அது அவசியம் உனக்கு உண்டு!

18. இறைவனே "ஓர் குருவாக வருவான்". அல்லது இறைவனே "ஓர் குருவைத் தருவான்!" இறைவன் குருவாக வந்தால், அவன் ஓர் "அவதார சொரூபி", இறைவன் குருவைத் தந்தால் அவன் ஓர் "அவதார புருஷன்"!!



19. அவதார சொரூபி இறைவனிலிருந்து வருபவன். அவதார புருஷன் பரத்திலிருந்து வருபவன். அவதார சொரூபியிடம் சிலசக்திகள் காணப்படும். அவதார புருஷனிடம் எந்தசக்தியும் காணமுடியாது. அவன் சக்தியேவடிவானவன்!

20. அவதார சொரூபியை உலகமும் ஜீவர்களும் கண்டுகொள்வார்கள். அங்கு கூட்டமும் பெருகும். "**ஆடம்பரம்/வியாபாரம்/விளம்பரம்**" இவைகளை காண முடியும்.

21. அவதார புருஷனை உலகமும், ஜீவர்களும், கண்டு கொள்ள முடியாது. மேலே கூறிய மூன்றும் அங்கு இராது. உலக விஷய கூட்டம் அங்கு இராது. ஆனால் ஆன்மதாப "**பக்குவ ஆன்மாக்கள்**" மட்டும் இவ்வர். அங்கு அனைவரும் ஜீவன்முக்தர்களே!

22. அவதார சொரூபி "**சாமான்ய குரு**"! ஆவர். அவதார புருஷன் "**ஸத்குரு**" ஆவர். பூஜை, ஆராதனை, பக்தி, மந்திர, ஜப, தபம் இவைகளை உடையவர் சாமான்ய குரு! "**தர்மம், பக்தி, ஒழுக்கம்**", இவைகளின் அடிப்படையில் தெய்வம் ஒன்றனை உணர்த்தி, அவை நீயே என சாதித்து, (போதித்தல்வ) அந்த பரமும், அந்த தெய்வமும், இதை உணர்கின்ற நீயும், ஒன்றே என்பதை மஹாவாக்கியம் மூலமாக "**தத், த்வம், அஸி,**" எனபிரமாண்ண மாக உணர்த்தக் கூடியவர் ஸத்குரு ஆவார்!



உ



௨௩. புண்ணியபாபம் என்ற "வினை" உன் உடல்! மாயையில் தோன்றிய "மனம்" அதை (மனம்) தம் எண்ணத்தால் (கற்பனையால்) அசைக்கிறது. மேலே கூறிய இவ்விரண்டையும், இறைவன் என்பவன், "விதி" என்ற பிணைப்பால், ஒழுங்காக பாரபட்ச தோஷம் இல்லாமல், அமைதியாக நடத்தி வைக்கிறான். ஆனால் அது உலகின் நிலையில் "சதி" செய்கிறான் இறைவன், எனப் பேசப்படுகிறது.

௨௪. மேலே கூறியதை, இது இறைவன் சதியென நோக்காமல், அனைத்தும் "நியதி" வழுவாமல், இயற்கையின் (இறைவனின்) நிலையில் நடைபெறுகிறதென, ஆத்திரம், அவசரம், வேகதாபம், மோஹாவேசம், சலனசந்தேகம், ஆக்ரகுரோதம், ஆகிய "குணதோஷம்" கொள்ளாமல், அமைதி காத்தல் ஞானசாதனையாகும்!

௨௫. குற்றம் குறை, பேதஉணர்வு, விருப்பு வெறுப்பு முதலியவை, இருந்தால் தான், "உலகம்". மேலே கூறியவைகள் இல்லாமல், இறை அருளோடு "பொறுமை" யின் அம்சமாக இருந்தால், ஜீவன் முக்தியாகும்.

௨௬. பிரவர்த்தியின் "ஸத்கர்மா" என்றால், பொன் ஊசி!
" "அஸத்கர்மா" என்றால், இரும்பு ஊசி!

ஆகவே எந்த "கர்மா" வாலும், ஞானம் பெற முடியாது. கர்மாவின் நிவர்த்தியே, ஞானமாகும். முதலில் "நானென்றால், என்னுடையது" இவைகளை விடு. அதனால் "இறைவன்" ஆகிவிடுவாய். பின் "அதுவே நாம், நாமே அது" என்றோர் உணர்வோடு இரு, "ஞானம்" ஆவாய். அந்த உணர்வையும் விடு "அது" ஆவாய்.



27. கணவன், மனைவி, குழந்தை, தொழில், பணம், உறவு இவை பந்தம் ஆகாது. அது "**கர்மா**"! மேலே கூறியவைகளை எனது என உரிமை பாராட்டுவதும். நான், என்னால், என அஹங்காரம், அதிகாரம் பாராட்டுவதும், "**பந்தம்**" ஆகும். அதுவே பிறவியின் வித்தாகும்.

28. அன்பினாலும், பணிவினாலும், உள்ளக் கனிவினாலும், "மனோநலத்தையும், ஆத்ம சுகத்தையும், பெற முடியும்." ஆனால் அஹங்கார, அதிகார, அபிமானத்தால், அழிவை பெற முடியும்!

29. வார்த்தைக்கு வார்த்தை "எதிர் வார்த்தையோ, எறிந்த வார்த்தையோ" வேண்டாம். அது கர்மாவாகும்; அது உன் வாழ்வாய் அமைந்து விடும்! "உன் வாக்கே ஜீவ வினையாகும்"!

30. "இதம்" (இனிமை) வார்த்தை, "மிதம்" (குறைவான) வார்த்தை, "இறைநாமா" கலந்த வார்த்தை, கர்மாவின் நிவர்த்தியாகும்.

31. "கிட்டாதாயின் வெட்டென மற", அதாவது அவன் எடுத்துக் கொண்டான் என, சாந்தியுடன் மறந்து விடு. கிடைத்து விட்டதாயின், தலைவணங்கி ஏற்றுக் கொள். கர்மா உள்ளதாயின், உனக்கு கிடைக்கும். கர்மா இல்லையாயின், அது உன்னை விட்டு அகலும்.

32. "பொருளை விடுவது துறவு ஆகாது"! அதன் மேல் உள்ள "நான், என்னால், என்னுடையது", என்ற "**பற்றை**" விடுவதே துறவு. அப் பொருள் வெறும் ஜடமே! அதை விரும்புவதும், வெறுப்பதும் உன் "**மனமே**"! ஆகவே அம் மனதை விடுவதே துறவாகும். அப் பொருள், "நான் இன்னாருக்கு உடையவன்", என சொல்வதில்லை. உன் மனமே அதை பிடித்து ஆட்டுவதைப் போல, தாம் ஆடுகிறது. இவை அனைத்தின் குணமும் உன் மனமே!



33. இறைவனை உணராமல் பரசொரூபத்தை உணரமுடியாது. நீயும், இறைவனும், பரமும் ஒன்றே.

34. நீ மனதால் மூடப்பட்டிருக்கிறாய்; ஆனால் இறைவன் தம் மாயையால் தாம் தாமே மூடிக்கொண்டிருக்கிறான். பரத்திற்கு எந்த மறைப்பும் இல்லை!

35. உலகமும் அதன் பொருள்களும் மனதால் மறைபட்டிருக்கிறது. இறைவன் மாயையால் மறைபட்டிருக்கிறான்!

36. நாமரூபத்தைவிட்டால் உலகம் இல்லை. "அனைத்தும் மண்ணே! மண்ணே தூசி, தூசியே ஜீவ அணு, ஜீவ அணுவே ஆத்மா!"

37. இறைவனுக்கு நாமரூபம் இல்லை; நாம் கொடுக்கும் நாமரூபமே இறைவன் சொரூபம். இறைவனின் நாமரூபத்தையும், அவன் மாயையையும், அதாவது "ரூபலாவண்யத்தையும், மஹிமை பிரபாவத்தையும்" விட்டுவிட்டால், இறை சொரூபம் **"பரமாத்மா"** ஆகிவிடும்!

38. மனம் பிறந்த இடம் மாயையே. வினை பிறந்த இடம் மனதின் எண்ணமே. விதி தோன்றிய இடமும் மன எண்ணமே (கற்பனையே). மன எண்ணமாகிய கற்பனை இல்லையென்றால் வினை இல்லை. வினை இல்லையென்றால், விதிக்கு அங்கு இடம் இல்லை. **"மனம், வினை, விதி"** இல்லையானால், உலகமும் இல்லை. அங்கு இறைவனுக்கும் வேலை இல்லை. இவை இரண்டும் இல்லையெனில் அங்கு இருப்பது அந்த காலாதீதமான **"பரசொரூபமே"**!

39. நீ உன்மனமேமய கற்பனையாகிய உலகம், அதன் பொருள்களின் "நாமரூபத்தையும்", மாயையில் தோன்றிய இறைசொரூபத்தின் தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இவைகளையும், சிப்பியின் வெள்ளியென, அதாவது சிப்பி இல்லையானால், வெள்ளி இல்லை யென்பது போல, பரம் இல்லையானால், ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள், இல்லையென முடிவு பண்ணு!



40. உடலாகிய நல்வினை தீவினை இரண்டையும், அது தோன்றிய மண்ணை சிருஷ்டித்த, உன் "இறைவனிடம்" ஒப்படைத்து விட்டு; அந்த நாம ரூப மயக்கத்தில் விழுந்த மனதை, உன் ஸத்குரு தேவரிடம் ஒப்படைத்து விட்டால்; வினையும் மனமும் இல்லாததனால், நீ "அது" ஆகிவிடுவாய்!

41. ஜக நாம ரூப மயக்கத்தில் விழுவதால் வினை பெருகும்! "?" கவனக் குறைவால் நாமரூப ஜகத்திற்கு, "குணங்கள்" விருத்தி செய்வதால், மனம் மலினமாகி பிறப்பிறப்பை உண்டுபண்ணும்!

42. இறைவனுக்கு நீ ஓர் குழந்தையாகு! உலகையும் பொருள்களையும், இறைவன் உடைமையாகவும், இறைவன் இயக்கமாகவும், வைத்து "விளையாடு"! பின் உலகையும், பொருள்களையும் இறைவனிடம் விட்டு விட்டு அவனே நீயாய்; நீயே அவனாய்; இரண்டற கலந்து, காலாதீத ஒன்றுடன் கலந்து விடு!

43. இறைவன் வேறு, நீ வேறு அல்ல. இறைவன் வேறு, பரம் வேறு அல்ல. நீங்கள் மூவரும் "ஒன்றே"! விளையாடலும், மனதாலும், நீ பிரிந்தாய்! மாயையால் இறைவன் பிரிந்தான்! நீ விளையாட்டை விடு; இறைவன் மாயையை விட்டு விடுவான். விளையாட்டும் (வினையும்) மாயையும் விலகினால், இருப்பது "ஒன்றே"!!

44. வினை விளையாட்டாகும்; மனம் (குணம்) கற்பனையாகும்; விதி (இறைவன்) இவைகளின் காலங்களை கழிக்கின்ற ஓர் "மாயை" ஆகும்! இம்மூன்றும் கட்டையில் தோன்றிய கள்வனே!

கட்டையே (சிவம்) பரம். தோற்றம் விசித்திரமே!

45. கட்டையில் கள்வனும் பொய்! கானலில் ஜலமும் பொய்! சிப்பியில் வெள்ளியும் பொய்! கயிற்றில் சர்ப்பமும் பொய்! மரத்தில் யானையும் பொய்! கல்லில் தோன்றிய நாயும் பொய்! இருப்பது ஒன்றே ஒன்று! "அதுவே நாம்" என உணர்.





46. ஜகத்தை நான், என்னை, என்னுடையது, எனபுசித்தாய்; "ஜீவன்" என ஆனாய்! அதனால் பிறப்பும், இறப்பும், தொடர்ந்து வருகிறது!

47. இறைவனுக்கு அனந்த நாமங்களையும், வல்லமை, மஹிமைகளையும் கொடுத்தாய். சொர்க்கத்தையும் பதமுக்தியையும் பெற்றுக்கொள்கிறாய்! இங்கும் பிறப்பும் இறப்பும் தொடர்ந்து வருகிறது!

48. இறைவனை உனக்குள் ஆக்கி, உன்னை இறைவனாக்கி, இவ்விரண்டையும் "அது" ஆக்கினால் ஜீவன் முக்தியே!

49. உன் பிராரப்தம் முடியும் வரை "அது நாம்"; "நாமே அது" (அகம்பிரம்மபாவனையை) விடாது செய்தால் தான் நீ அது ஆகமுடியும்! சித்ரா பௌர்ணமி

50. இது "கலியுகம்" மற்றைய யுகங்களும், இதற்கு முந்தைய காலங்களும், கலிதோஷம் இல்லாமலும், அது அதிகம் இல்லாமலும் இருந்தது! ஆகவே அகம்பிரம்மபாவனை அதிக அவஸ்யம் இல்லாமல் இருந்தது! இப்போது "அவஸ்யம் தேவை"!

ஓம் ஆனந்தக்குழந்தைகளே! எம் ஞானக்குழந்தைகளே! இந்த மடலில் "நிதாகனின் அனுபவமும்", இணைக்கப்பட்டிருக்கிறது. முன்பொருகால், நிதாகனின் அனுபவம் நிறைவு பூர்த்தியானால், அத்துடன் "ஞானமடல் பூர்த்தி" என எமதய்யன் சொன்னதாக தோற்றுகிறது! பெரும்பாலும் ஞானமடல் போதும், என நிறைவு பெற்று விட்டதாக தோற்றுகிறது. எந்த முடிவும் இது அவன் கை கருவியே! "அவனன்றி அணுவும் அசையாது"!! ஆனாலும்? அனைத்தும் ஒன்றே! அது நவமே! அது சுகமே! அது யாமே! அது நீங்களே!

முடிவு 24-4-2005 ஞாயிறு!
சித்திரை 11 தேதி!

பாபா.

இதுவே பிரமாணமான உண்மை! இது ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம்!!!




Adobe of Love

You are Everything!